# ம.பொ.சி.யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு

பெ. சு. மணி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# ம.பொ.சி.யின் பார்வையில் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு

பெ.சு. மணி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, சி.ஐ.டி. வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

டாக்டர் ம.பொ.சி. அறக்கட்டளைச் சொற்பொழிவு
அறக்கட்டளை நிறுவியோர் - பலர்
வரிசை எண்: 9 நாள்: 21-06-04

# BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Ma.Po.Ci.yin Pārvaiyil Tamil Moli, Ilakkiyam, Paṇpāṭu** |
| Author | : | P.S. Mani |
| General Editor | : | Dr. D. Renganathan<br>Associate Professor<br>IITS, Chennai - 600 113. |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Taramani, Chennai - 600 113. |
| Publication No | : | 495 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | 2004 |
| Paper Used | : | 18.6 kg TNPL Map litho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | viii + 96 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 30/- (Rupees Thirty only) |
| Printing | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road,<br>Chennai - 600 004. |
| Subject | : | Tamilology |



அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துக்கட்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

# அணிந்துரை

ம.பொ.சி. என்ற பெயர் தமிழ் மொழி, இன, இலக்கிய, பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ் மொழி வளர்ச்சிக்கும், இலக்கிய வளர்ச்சிக்கும் ம.பொ.சி. அவர்கள் ஆற்றிய பணி பாராட்டத்தக்கது.

'தமிழ் இனத்தவர்க்குத் தமிழ்தான் தாய்மொழி. தமிழரின் உரிமை வாழ்விற்குத் தாய்மொழியாம் தமிழ்மொழி' என்று தாம் கொண்ட கருத்தைத் துணிவோடு கூறிய பெரியார் ம.பொ.சி. ஆவார்.

பொங்கல் திருநாளைத் தமிழர் திருநாளாகக் கொண்டாட ஏற்பாடு செய்தவர் ம.பொ.சி. தமிழ் இனத்திற்கென்று தனித்த பண்பாடு உண்டு என்பதைப் பல்வேறு இலக்கியச் சான்றுகளைக் கொண்டு பல மேடைகளில் முழங்கியவர் ம.பொ.சி.

மொழி வழிப் பண்பாடுபற்றிப் பேசும்போது சிலவற்றைத் தாழ்ந்தது என்று எண்ணுவது கூடாது என்ற பெருந்தகைமையும் பேருள்ளமும் டாக்டர் ம.பொசி.யிடம் இருந்தது.

இவ்வாறாக மொழி, இலக்கியம், இனம், பண்பாடு என்ற நிலைகளில் ஆழ்ந்த சிந்தனையும் அவற்றை இவ்வுலகிற்கு வெளிப் படுத்திக்காட்டவேண்டும் என்ற உள்ளவெளிப்பாடும் கொண்டு ம.பொ.சி. விளங்கினார்.

இத்தகு டாக்டர் ம.பொ.சி. அவர்களின் பெயரில் இந்நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள '**டாக்டர் ம.பொ.சி. அறக்கட்டளை**'யின் 9ஆம் சொற்பொழிவு இப்போது நடைபெறுகிறது. திறனாய்வாளர், இதழியல் அறிஞர் திரு. பெ.சு.மணி அவர்கள் இச்சொற்பொழிவினை நிகழ்த்துகிறார். டாக்டர் ம.பொ.சி. அவர்களுடன் 50 ஆண்டுகளுக்கு மேலாக அரசியல் இலக்கிய உறவு கொண்டிருந்த திரு. பெ.சு. மணி அவர்கள் ம.பொ.சி. அவர்களைப் பற்றிச் சொற்பொழிவாற்றுவது பொருத்தப்பாடுடையதாகும். ம.பொ.சி. பார்வையில் தமிழ் மொழி பற்றியும், தமிழ் இலக்கியம் பற்றியும், தமிழ்ப் பண்பாடு பற்றியும் அவர்கள் உருவாக்கித் தந்துள்ள

எழுத்துரு பல்வேறு வரலாற்று நிகழ்வுகளையும், இலக்கியச் சான்றுகளையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. ம.பொ.சி.யின் சிந்தனைக் கருத்தோவியங்களை அவர்கள் வழி நின்று திரு. பெ.சு மணி அவர்கள் எடுத்து விளக்கியுள்ளது போற்றத் தக்கதாகும். தம்முடைய பட்டறிவால், மொழித்திறனாய்வு உணர்வால், இதழியல் சிந்தனைப் போக்கால் மிகச்சிறந்த ஓர் எழுத்துருவைக் குறித்த காலத்தில் நல்கியமைக்காகத் திரு. பெ.சு.மணி அவர்களை இந்நிறுவனம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

இச்சொற்பொழிவு **'ம.பொ.சி.யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு'** என்ற தலைப்பில் நூலாக வெளிவருகிறது. இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவை நூலாக வெளிக்கொணர்வதில் இந்நிறுவனம் பெருமையடைகிறது. அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் ஒவ்வொன்றும் நூலாக்கம் பெறுவதில் அறக்கட்டளைப் பொறுப்பாளர் ஒவ்வொருவர்க்கும் பொறுப்பும் கடமையுணர்வும் உள்ளன. அவ்வகையில் இவ்வறக் கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் தா. ரெங்கநாதன் பாராட்டுக்குரியவர்.

இந் நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வியமைச்சர் திருமிகு செ. செம்மலை** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.** அவர்களுக்கும், **சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஒளி அச்சுக்கோப்புச் செய்த கணிப்பொறி உதவியாளர் திருமதி இரா. வெண்ணிலாவுக்கும், அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் பாராட்டுகள்.

சென்னை

*21-06-04*

**இயக்குநர்**



## ஆசிரியரைப் பற்றி....

பெண்ணாத்தூர் சுந்தரேசன் மணி என்ற பெ.சு. மணி 02-11-1933 இல் திருவண்ணாமலையில் பிறந்தார். தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளை அறிந்தவர். சென்னை விமான அஞ்சல் பிரிப்பகத்தில் அஞ்சல் பகுப்பாளராகவிருந்து ஓய்வு பெற்றார். டாக்டர் ம.பொசியுடன் 50 ஆண்டுக் காலம் நெருங்கிப் பழகியவர். இவர் 48 நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் இரண்டு டாக்டர் ம.பொ.சி. அவர்களைப் பற்றி எழுதப்பட்டவை. 20 க்கும் மேற்பட்ட அறக்கட்டளைச் சொற்பொழிவுகளைப் பல்கலைக்கழகங்களிலும், ஆராய்ச்சி நிறுவனங்களிலும் நிகழ்த்தியுள்ளார். இதழியலில் ஆர்வம் மிக்கவர். இதழியல் தொடர்பாகப் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். பல்வேறு விருதுகளையும், பாராட்டுப் பத்திரங்களையும் பெற்றுள்ளார். தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் துணைச் செயலாளர், பொதுச்செயலாளர் பொறுப்புகளிலும் இருந்துள்ளார். பாரதி நூற்றாண்டு விழாக்குழு, மொழிபெயர்ப்பு வல்லுநர் குழு ஆகியவற்றிலும் பணியாற்றியுள்ளார்.

# என்னுரை

தமிழினத் தலைவர்களுள் ஒருவரான அமரர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. ஐயாவுடன் எனக்கு ஏற்பட்ட அரசியல், இலக்கிய உறவு ஐம்பதாண்டுகளுக்கு மேலாகும்.

இந்தியத் தேசியத்தையும், தமிழ்த் தேசியத்தையும் இணைத்து செழுமைப்படுத்தி 1946 இல் அவர் முழங்கிய "சுயநிர்ணய சோஷலிசத் தமிழ்க் குடியரசு தத்துவம்" என்னை இளமையிலேயே ஈர்த்தது. அவர் நிறுவிய தமிழரசுக் கழகத்தில் சேர்ந்து இயன்றளவு பணியாற்றியுள்ளேன்.

என்னுடைய இலக்கிய ஆர்வமும், எழுத்தார்வமும் அவரால் வளர்த்தெடுக்கப்பட்டன. அமரர் வெ. சாமிநாத சர்மாவும், ம.பொ.சி. ஐயாவும் என்னை உருவாக்கியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். என்னுடைய நூல்கள் சிலவற்றிற்கு முன்னுரைகள் எழுதி என்னை ஊக்குவித்தவர் ம.பொ.சி. ஐயா அவர்கள்.

இன்றைய அரசியல், இலக்கியச் சூழலில் ம.பொ.சி ஐயாவின் பங்களிப்புகளை மீண்டும் மீண்டும் நினைவுறுத்தவும், அறிவுறுத்தவும் நூல்கள் பல வெளி வரவேண்டியது மிகச் சிறந்த வரலாற்றுப் பணிகளில் ஒன்றாகும். அவரைப் பற்றி இரு நூல்கள் எழுதியுள்ளேன். மூன்றாவதாக இந்நூல் வெளிவருவது யான் பெற்ற பெரும் பேறாகும். 'தெளிவே சிவஞானம்' என்பது வள்ளலார் வாக்கு. ஆம்; இந்த அருளுரை ம.பொ.சி.க்கும் பொருந்தும். "தெளிவுறவே அறிந்திடுதல், தெளிவுதர மொழிந்திடுதல்" இவ்விரண்டும் ம.பொ.சி. ஆளுமையின் சிகரங்களாகும். இந்தச் சிகரங்களைக் கண்டுணர்ந்து களிப்பெய்த இந்நூல் பயன்தரும் என்றே நம்புகிறேன்.

இந்த நோக்கில் ம.பொ.சி. ஐயாவைப் பற்றி அறக்கட்டளைச் சொற்பொழிவாற்ற வாய்ப்பளித்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முனைவர் பேராசிரியர் மா.ரா.போ. குருசாமி, கலவை அ. கோபால கிருஷ்ணன், ம.பொ.சி. ஐயாவின் பெயர்த்தி முனைவர் பரமேசுவரி, பேரன் திருஞானம் ஆகியோர் எனக்குத் தேவைப்பட்ட நூல்களையும், 'செங்கோல்', 'தமிழ்முரசு' இதழ்களையும் வழங்கியுதவினர். அவர்களுக்கும் என் நன்றி உரியது.

பெ.சு. மணி

# உள்ளே

ம.பொ.சி.யின் பார்வையில் தமிழ்மொழி 1

ம.பொ.சி.யின் பார்வையில் தமிழ் இலக்கியம் 51

ம.பொ.சி.யின் பார்வையில் தமிழ்ப் பண்பாடு 79

# ம.பொ.சி. பார்வையில் தமிழ்மொழி

"நீங்களே தமிழ் முரசு" எனும் பாராட்டைப் பெற்றவர் ம.பொ.சி. சில சொற்களில் பலவகைக் கருத்துகள் செறிந்து இனிது விளக்கும் 'சூத்திரம் போன்ற இந்தப் பாராட்டுரை 'ம.பொ.சி.யின் பார்வையில் தமிழ் மொழி' எனும் ஆய்விற்கு அடித்தளமாக அமைகின்றது.

12-1-1947 இல் ராஜாஜி, ம.பொ.சி.க்கு எழுதிய கடிதத்தில் "நீங்களே தமிழ் முரசு. வேறு என்ன முரசு வேண்டும்?" என்று குறிப்பிட்டார்.[1] அப்பொழுது ம.பொ.சி. 'தமிழ்முரசு' எனும் பெயரில் ஓர் இதழின் ஆசிரியராகவிருந்து நடத்தி வந்தார். 'தமிழ் முரசு', 'மாதம் ஒரு புத்தகம்' எனும் அறிவிப்புடன் 1946 ஆம் ஆண்டு மே மாதம் முதல் வெளிவரத் தொடங்கியது.

14-1-1947 இல் பொங்கல் திருநாளைத் தமிழர் திருநாளாகத் தமிழரசுக் கழகத்தின் பெயரால் முதன் முதலில் கொண்டாட ஏற்பாடு செய்தார் ம.பொ.சி. இதன் தொடர்பாக அப்பொழுது தில்லியில் மத்திய தொழில் அமைச்சராகவிருந்த ராஜாஜிக்கு எழுதிய கடிதத்தில் "பொங்கல் விழாவைத் தமிழர் திருநாளாகக் கொண்டாடுமாறு தமிழ் மக்களுக்கு வானொலி மூலம் வேண்டுகோள் விடுமாறு" கேட்டுக் கொண்டார் ம.பொ.சி.[2] இந்த வேண்டுகோளுக்குப் பதிலளித்து எழுதிய கடிதத்தில் முற்கூறியவாறு ராஜாஜி பொருட் செறிவு நனிதுலங்கக் குறிப்பிட்டார்.

பொங்கல் திருநாளை "மதங்கடந்த இனவழித் திருவிழாவாக - தேசியத் திருவிழாவாகக் கொண்டாடிய பெருமை ம.பொ.சி. அவர்களுக்கே உரியது" என்று ஆய்வாளர் மா.ரா. இளங்கோவன் சுட்டிக்காட்டியுள்ளார்.[3]

'தமிழ் முரசு' முதல் இதழை வரவேற்றுக் 'கல்கி' ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி எழுதிய பொழுது "ம.பொ.சி.யின் மீசை, வீரத்தமிழ் மீசை" என்றும், அது "பழந்தமிழ் வீரர்களான பாரதியையும், வ.உ.சிதம்பரம் பிள்ளையையும் சற்று நினைவுகூரச் செய்கின்றது" என்றும் குறிப்பிட்டார். "முரசு கொட்டித் தமிழ் முழங்கிக் கொண்டு வெளி வந்திருக்கிறது" என்றும் ம.பொ.சி.யின் தமிழ்ப்பார்வையை விளக்கியுள்ளார் 'கல்கி'.[4]

ம.பொ.சியின் பார்வையில் தமிழ் மொழி, வீரவழிபாட்டிற்குரிய தொல்பெரும் மரபைச் சார்ந்ததாக விதந்தோதப்பட்டாலும், தாய்மொழியைப் போர்க்கருவியாகக் கொண்டு தாய்மொழியின் மீதான அனைத்து ஆதிக்கங்களையும் எதிர்த்துப் போரிட்டவர் ம.பொ.சி. இந்தியத் தேசிய விடுதலைப் போராட்டக் களத்திலும், தமிழ்த் தேசியப் போராட்டக் களத்திலும் அவர் தமிழ் மொழியைப் போர்க்கருவியாகப் பயன்படுத்தினார்.

"தமிழ் இனத்தவர்க்குத் தமிழ்தான் தாய் மொழி. பிறந்த குழந்தை, தன்னைப் பெற்றவளை 'அம்மா' என்று அழைக்கின்றது; பெற்றவளும் 'கண்ணே' என்று தன் குழந்தையை அழைக்கிறாள். இப்படித் தாயை அழைத்த மொழி - தாயாலும் அழைக்கப்பட்ட மொழி தமிழேயாதலால், அது நம் தாய் மொழி ஆகிறது" என்று தமது பார்வையில் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொள்ள வரைவிலக்கணம் கூறியுள்ளார் ம.பொ.சி.[5]

தமிழனின் உரிமை வாழ்விற்குத் தாய்மொழியாம் தமிழ் மொழியே ஆதாரமானது எனும் தமது கருத்தை விளக்குமிடத்தில் ம.பொ.சி. கூறியதாவது.

"உலகில், மொழியைக் கொண்டுதான் ஒரு நாடு இன்னொரு நாட்டை அடிமைப்படுத்தியது. மொழியைக் கொண்டுதான் ஒரு மதத்தை அழித்து இன்னொரு மதம் வளர்ந்தது. மொழியைக் கொண்டுதான் ஓர் இனத்துப் பண்பாட்டைப் பாழாக்கும் வேறோரினம் வளர்ந்தது. எனவே, தமிழன் மீண்டும் உரிமை வாழ்வு வாழ வேண்டுமானால், தாய்மொழியாம் தமிழுக்கு நேர்ந்துள்ள எல்லா இடுக்கண்களும் தகர்த்தெறியப்பட வேண்டும். மொழிப் பிரச்சனையைப் புறக்கணித்தால், அதனால் வரும் கேடுகள் அளவற்றவை"[6]

ம.பொ.சி.யின் பார்வையில் தமிழ்மொழி பற்றிய கருத்துகளை ஆங்கிலம், சம்ஸ்கிருதம், இந்தி முதலான மொழிகளின் ஆதிக்கங்களை எதிர்த்து அவர் படைத்த நூல்களைக் கொண்டு விரிவாக அறிவதற்கு முன்பு, அவருடைய பார்வையில் தமிழ்மொழி உரிமை இழந்த வரலாற்றை அறிதல் வேண்டும்.

## தமிழ்மொழி உரிமை இழந்த வரலாறு

விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு எனும் தமது அரிய ஆய்வு நூலில் ம.பொ.சி., "தமிழ்மொழி உரிமை இழந்த வரலாறு எனும் பொருளில் விரிவாக எழுதியுள்ளார். அதன்

சாராம்சங்களை விளங்கிக் கொள்ளத்தக்கவாறு, சுருக்கமாக பின்வருமாறு இங்கு அறிவோம்.

"பாரதத் திருநாடு சற்றேறக்குறைய ஒன்றரை நூற்றாண்டுக் காலம் ஆங்கிலப் பேரரசுக்கு அடிமைப்பட்டிருந்தது. ஆங்கிலேயர், பிறந்த நாட்டாலும் பெற்ற நிறத்தாலும் பேசும் மொழியாலும் பாரதத்திற்கு முற்றிலும் அன்னியராவர். அவ்வன்னியர், நம் அரசுரிமையைப் பறித்ததோடன்றி, நம்முடைய விழியினும் சிறந்த மொழியுரிமையையும் பறித்தனர். இந்திய நாட்டிலே, 'எங்கும் எதிலும் ஆங்கிலம்' என்ற நிலையை ஏற்படுத்தினர் - - - - -

"ஆங்கில மொழியின் ஆதிக்கக் கொடுமை, ஆங்கிலேயர் இந்த நாட்டில் புகுந்த அரை நூற்றாண்டுக் காலத்திற்குள்ளேயே குமரி முதல் இமயம் பரவிவிட்டது. பிரதேச மொழி ஒவ்வொன்றும் உரிமையிழந்து ஒடுங்கிவிட்டது. - - - -

"அந்த அருமைமொழி, ஆங்கிலேயர் வேங்கடத்திற்குத் தெற்கே அரசியல் ரீதியில் ஆதிக்கம் பெறுவதற்கு முன்பேனும் உரிமையுடன் வாழ்ந்ததா என்றால், 'இல்லை' என்பதை வெட்கத்தோடும் வேதனையோடும் சொல்ல வேண்டியிருக்கிறது - -

"மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே தனக்கென ஒரு இலக்கணத்தைப் பெற்று, அதற்கு முன்னும் பின்னுமாக நீண்டதொரு இலக்கியப் பாரம்பரியத்தையும் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்து வந்திருக்கின்றது தமிழ்மொழி. தன்னேரில்லாத தனிமொழியே என்றாலும், தெலுங்கு - கன்னடம் - மலையாளம் - துளு ஆகிய சேய்மொழிகளின் தாய்மொழியாக இருப்பினும். ஒரு காலகட்டத்திலே பிராகிருதம் - சம்ஸ்கிருதம் ஆகிய வடமொழிகளின் தொடர்பையும் பெற்றது நமது தாய்மொழியான தமிழ். ஆம்; தன் உரிமையையும் தனித்தன்மையையும் இழக்காத நிலையிலே.

"தமிழகத்தின் மீது ஆங்கிலேயர் அரசியல் ஆதிக்கம் பெறுவதற்கு முன்பு வேற்று மொழி இனத்தினர் பலர் இங்கு மாறி மாறி ஆதிக்கம் பெற்றனர். அவர்கள், பல்லவரும், ஆந்திரரும், மராத்தியரும், மொகலாயரும் ஆவர். அவர்கள் காலத்திலேதான், சம்ஸ்கிருதமொழிக்கும் தமிழ்மொழிக்கும் இருந்த உறவு நிலையில் விரும்பத்தகாத மாறுதல் ஏற்பட்டதாக அறிய முடிகிறது.

"தமிழ் மூவேந்தர் அல்லாத வேற்று மொழி மன்னர்கள் ஆட்சிக் காலத்திலேயேயும் தமிழ்மொழி வளர்ச்சி அடைந்தது உண்டு. சமூகத் துறையில் அல்ல; சமயத்துறையிலே!

"வேற்றினத்தவரான ஆந்திரரும், மராத்தியரும் தமிழகத்தின் மீது அரசியல் ஆதிக்கம் பெற்றிருந்த காலங்களிலே, தத்தம் மொழியைத் தமிழர் மீது அவர்கள் திணிக்கவில்லை என்றாலும் சம்ஸ்கிருதத்தின் செல்வாக்கை விரும்பியோ, விரும்பாமலோ வளர்த்தனர். ஆம், மொகலாயரின் ஆதிக்கத்திற்கு அடிமைப்படாமல் தமிழகத்தைக் காக்க வந்த அவர்கள் வடமொழி ஆதிக்கத்தை நிலைநாட்டி விட்டனர்.

"அன்னியமொழியினர் - இனத்தினர் தமிழகத்தின் மீது ஆதிக்கம் பெற்றிருந்த காலங்களிலேயும் புதுப்புது இலக்கியங்கள் தமிழில் தோன்றின வென்றாலும் அவையனைத்தும் தெய்வங்கள் மீது துதிபாடும் பிரபந்தங்கள் - ஸ்தல புராணங்கள் எனப்படும் சமய இலக்கியங்களேயன்றிச் சமூக இலக்கியங்களல்ல. சமூக இலக்கியங்களைப் படைப்பது பாவம் என்ற கருத்துக்கூட நிலவியது. சங்க இலக்கியங்களைப் படிப்போர் நாத்திகராகி விடுவர் என்று கூடப் பயமுறுத்தப்பட்டது.

"தமிழ் மொழிக்கிருந்த இந்த அடிமைச் சூழ்நிலை, பிரிட்டிஷ் பேரரசுக்கு எதிராக விடுதலைப் போர் ஆரம்பமானபோதுதான் மாறத் தொடங்கியது. இந்திய விடுதலைப் போர் நடத்தில்லையானால், அந்தப் போரில் ஈடுபட்ட தேசியவாதிகள் தமிழின் மறுமலர்ச்சிக்கும் பாடுபட்டில்லையானால், தமிழ் மொழி சமய வேலியைக் கடந்து சமுதாயப் பெருவெளிக்கு வந்திருக்காது."

மக்கள் தங்களது தாய்மொழி மீது அன்பும் பற்றும் சொரிவது வரலாற்றுப் பழமையுடையது. ஆனால், மொழிப்பற்றுடன் இனப்பற்றுக் கருத்தாக்கத்தை உருவாக்கி மொழி வழங்கும் நிலப்பரப்பை ஒரே ஆட்சியின்கீழ்க் கொணர்ந்து தேசிய இலட்சியங்களைப் படைப்பது அண்மைக்கால வரலாறாகும்.

மேலை நாடுகளில் தேசிய இனங்களைக் கொண்ட நாடுகள் பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் உருவாகி வந்த காலத்தில் இந்தியாவில் நேர் எதிரான செயல் முறைகள் நிகழ்ந்தன.

"கேரளாவில் தேசிய பிரச்னை" (Nationality Problem in Kerala) என்ற நூலில், நூலாசிரியர் தோழர் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபட் குறிப்பிட்டுள்ள பின்வரும் கருத்து இங்கு நினைவு கூர்தலுக்குரியது.

"மலையாளிகள், தமிழர்கள், ஆந்திரர்கள் என்ற தனித்தேசிய இனங்களாக உருவாக வேண்டியதை முரட்டுத்தனமாகத் தடுக்கவும், தேசிய வளர்ச்சிப் பாங்குச் சீர்குலைவை ஏற்படுத்தவும் பிரிட்டிஷ்

ஆட்சி இந்தியாவை ஒரு குடைக்கீழ் கொண்டு வந்தது. இந்தத் தேசிய இனங்களை இரண்டு அல்லது மூன்று நிருவாகப் பகுதிகளில் செயற்கையாகப் பிரித்து வைத்தது. இந்திய மாநிலங்களும், இந்திய சமஸ்தானங்களும் இவ்வாறு உண்டாக்கப்பட்டன".[7]

பிரிட்டிஷ் காலனியாதிக்கத்திற்கு எதிரான இந்தியத் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றின் வளர்ச்சிக் கட்டமொன்றில் மொழியும் தேசியமும் பற்றிய சிந்தனையும் செயற்பாடும் தவிர்க்க இயலாதாகிவிட்டன. காந்தியடிகளும், மகாகவி பாரதியும் மொழிப்பற்று, நாட்டுப்பற்று இரண்டும் ஒன்றுக்கொன்று ஆதாரமானவை எனும் நோக்கைச் செழுமைப் படுத்தினார்கள். ம.பொ.சி. அவ்விருவரும் தமக்கு வழிகாட்டிகளாவர் என்பதைப் பல்வேறு இடங்களில் வலியுறுத்தியுள்ளார்.

காந்தியடிகள் தலைமையேற்ற விடுதலைப் போராட்டக் காலகட்டத்தில் ம.பொ.சி.யும் விடுதலைப் போராட்டத்தில் இணைந்தார்.

பிற்படுத்தப்பட்ட கள்ளிறக்கும் தொழிலாளச் சாதிப்பிறப்பும், கொடிய வறுமைத் தீயின் சூழலும், மூன்றாம் வகுப்போடு பள்ளிப்படிப்பை முடித்துக் கொள்ள வேண்டிய சமூக நிர்ப்பந்தமும் புடைசூழ ம.பொ.சி. தமது பதினேழாம் வயதில், 1923 இல் அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தார். 1922 இல் காங்கிரஸ் பேரியக்கத்தில் - காந்தியுக காங்கிரஸில் - முறையாகச் சேர்ந்தார் ம.பொ.சி.

## "தமிழா! துள்ளி எழு"

1932 இல் ம.பொ.சி., 'தமிழா! துள்ளி எழு', எனும் கையெழுத்துப் பிரசுரத்தைத் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் பொதுமக்களிடையே வழங்கினார். தமிழ்மொழியைப் படைக் கலனாகக் கொண்டு வெளியிடப்பெற்ற இந்தப் பிரசுரம் அவருடைய மொழிப்பற்றின் அடிப்படையில் தோன்றிய தமிழினப் பற்றைப் பறைசாற்றியது.

"அந்தக் காலத்தில் தமிழ்மொழியில் சொற்ப அளவில் கூட நான் இலக்கியப் பயிற்சி பெற்றிருக்கவில்லை. பிழையில்லாமல் எழுதும் திறமை கூட எனக்கில்லை'' என்று ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார்.[8]

மொழிப் பயிற்சியில் நிறைவு பெற இயலாத காலத்திலும் மொழிப்பற்றும் - இனப்பற்றும் கொண்டு சுமார் இருநூறு பிரதிகளை எழுதித் தயாரித்தார். ம.பொ.சி. என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

இதுகுறித்து அவருடைய தன்வரலாற்று நூலான 'எனது போராட்டம்' கூறுவதாவது:

"தமிழா! துள்ளி எழு" என்னும் தலைப்புடைய சட்ட விரோதமான ராஜத்துவேஷப் பிரசுரமொன்றைக் கடற்கரையில் குழுமியிருந்த மக்களிடையே வழங்கியதற்காகவே நான் கைது செய்யப்பட்டேன். அந்த நாளில் அரசாங்கத்தை வெறுக்கும் கருத்துகள் கொண்ட பிரசுரம் எதையும் அச்சடிக்க முடியாது. அச்சடித்துத் தந்தால் அந்த அச்சகத்தின் உரிமையாளர் மீது வழக்குத் தொடரப்படும். அதனால் நான் வினியோகித்த பிரசுரத்தை நானும் வேறு சில தோழர்களும் சேர்ந்து கையாலேயே எழுதி நூற்றுக் கணக்கான பிரதிகள் தயாரித்தோம். பிரசுரத்தில் உள்ள வாசகம் முழுவதும் என்னாலேயே எழுதப்பட்டதாகும்.

"அந்தக் காலத்திலேயே என் உள்ளத்தில் தமிழன் என்னும் இனவுணர்ச்சி மலர்ந்திருந்தது. அதனால் பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப் பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழருக்கு அழைப்பு விடுத்திருந்தேன்".[9]

துள்ளி எழுந்த தமிழன் ம.பொ.சி.யை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மேற்கண்ட பிரசுரம் சட்ட விரோதமானது என்று குற்றம் சுமத்தி ஆறுமாதச் சிறைத்தண்டனை விதித்தது.

## சந்தி பிரித்து வெளியிடுதல்

'ம.பொ.சி. பார்வையில் தமிழ் மொழி' என்பதில் கவிதைகளைச் சந்தி பிரித்து வெளியிடுதல் பற்றிய கருத்தும் கவனிக்கத்தக்கது.

சந்தி பிரிப்புப் பற்றித் தமிழ் இலக்கிய உலகில் அவ்வப்பொழுது விவாதங்கள் எழுந்துள்ளன. வ.வே.சு. ஐயர் 1917 இல் வெளியிட்ட கம்பராமாயணம் (சுருக்கம்) - பால காண்டம் பதிப்பில் வேண்டுமிடங்களில் சந்தி பிரித்து வெளியிட்டார்.

> "கற்போரின் சௌகரியத்துக்காகச் சந்திகளைப் பிரிப்பதும், சீர்களைப் பிரிப்பதும் தவறல்ல என்று பெரியோர்களே வழிகாட்டியிருக்கிறார்கள். இதற்கு மேல் நாம் செய்ய உத்தேசித்த மாற்றங்களைச் செய்வதானது அவர்கள் போயிருக்கிற மார்க்கத்தில் முடிவுரையில் செல்லுகிறதேதானாகிறதாகையால்

இவ்விதம் செய்வது வித்துவான்களுக்கு அயுக்தமாகத் தோன்றாது என நிச்சயித்து அவ்விதமே செய்யத் துணிந்தோம்"

என்று வ.வே.சு. ஐயர் கூறியுள்ளார்.

சந்தி பிரிப்புப் பற்றிய தமது கருத்தைத் திரு.வி.க.வின் 'தேசபக்தன்' நாளிதழுக்கு (1918 பிப்ரவரி 27 "காவியங்களைச் சந்தி பிரித்து அச்சிடுவது முறையா?" எனும் தலைப்பில் எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ம.பொ.சி. அவர்கள் மர்ரே அண்டு கம்பெனியார் (சென்னை) சிலப்பதிகாரம் - மணிமேகலைப் பதிப்புகள் வெளியீட்டு விழாவில் (1959 ஏப்ரல்) பேசிய பொழுது சந்தி பிரித்து வெளியிடுவதை வரவேற்றார்.

"வெளியீட்டு விழாவில் பேசிய பெரும் புலவர் ஒருவர் இந்த மாதிரி சந்தி பிரித்து வெளியிடும் பதிப்புக்களைப் பார்க்கவே என் மனம் சங்கடப்படுகிறது என்றால் அவரது கருத்தை மறுத்து நான் பேசிய பொழுது இரண்டாயிரம் ஆண்டுகளாக என் போன்ற சாமான்யர்களைச் சந்தியில் நிறுத்திச் சங்கடப் படுத்தியது போதாதா? சந்தி பிரித்து வெளியிட்டால் தானே சங்கதி தெரியும்" என்றார் ம.பொ.சி.

## மூவேந்தர் மரபு வழியே. . . . .

மூவேந்தர்கள் தம்முள் அரசியலில் முரண்பட்டுப் போரிட்டுக் கொண்டிருந்தாலும், தமிழ் மரபைப் போற்றும் மூவேந்தர் மரபு உருவானது. தமிழ் என்றவுடனேயே மூவேந்தர்களையும் சேர்த்துச் சிந்திக்கும் கண்ணோட்டத்திற்குத் தொல்காப்பியம் வித்திட்டது.

'வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பில்' என்ற தொல்காப்பியப் பொருளதிகாரச் செய்யுளியல் சூத்திரம் (391) குறிப்பிட்டுள்ளது. இதற்கு உரைவகுத்த பேராசிரியர் "மூவரெனப் படுவர் தமிழ்நாடு மூவேந்தருமாயினார்" என்று கூறியுள்ளார்.

இந்தக் கண்ணோட்டத்தின் வளர்ச்சியைத் "தமிழ் கெழு மூவர்" எனும் அகநானூற்றுப் பாடலொன்றின் வரியிலும் அறிகின்றோம்.

மூவேந்தர் மரபு காலந்தோறும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும், தமிழ்ப்பண்பாட்டுச் சிந்தனை வரலாற்றிலும் ஏற்றிப் போற்றப்பட்டு வருகின்றது. மூவேந்தர் ஒருங்கிணைந்த காட்சிகளை ஔவையார் உட்பட சில சங்கப் புலவர்கள் பாடினர்.

தமிழகத்தில் தேசிய மரபையும், மூவேந்தர் மரபையும் இணைத்துப் பெருமிதப் படுத்தியதில் புரட்சி வீரர் வ.வே.சு. ஐயரும், மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும் முன்னோடிகளாவர்.[10]

"சேர சோழ பாண்டியர்கள் காலத்திலும் தமிழறிவானது லௌகீக விஷயங்களிலாகட்டும் ஆத்யாத்ம விஷயங்களிலாகட்டும் கம்பீரமான வேலைகள் செய்திருக்கிறது என்று 1918 இல் 'மறுமலர்ச்சி' எனும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் 'வீர விளக்கு' வ.வே.சு. ஐயர் எழுதியுள்ளார்.[11]

''முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது'' எனும் சிலப்பதிகாரப் பதிகத்தின் குரல், ம.பொ.சி.க்கு மூவேந்தர் மரபின் வழியே தமிழ் இன ஒருமைப்பாட்டிற்குத் தேவைப்பட்ட புதிய தமிழகத்தின் குரலாக ஒலித்தது.

வில், புலி, கயல் எனும் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் சின்னங்களைத் தமது தமிழரசுக் கழகக் கொடியின் சின்னங்களாக அமைத்தார், ம.பொ.சி.

"தமிழகத்தில் மூவேந்தராட்சி அடியோடு மறைந்த பின்னர், ஆந்திர நாயக்கர்களும், மொகலாய நவாபுகளும், மராத்திய மன்னர்களுக்கும், ஐரோப்பியருக்கும் தமிழகம் அடுத்தடுத்து அடிமைப்பட்டிருந்த காலத்திலே தமிழ் மூவேந்தர்களின் அரசியல் சின்னங்கள் போற்றுவாரற்றுப் போயின. தமிழர் பெயரால் அரசியல் கொள்கைகளைச் சொல்லிக்கொண்டு கழகங்களும் கட்சிகளும் தமிழகத்தில் தோன்றின வென்றாலும், அவற்றில் எதுவும் தமிழ் மூவேந்தர்களின் அரசியல் சின்னங்களை ஏற்கவில்லை. முதன்முதலில் தமிழரசுக் கழகம்தான் அதைச் செய்தது" இவ்வாறு ம.பொ.சி. சாற்றியுள்ளதும் அவருடைய மூவேந்தர் மரபுப் பற்றை விளக்க வல்லது.[13]

## எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்

ம.பொ.சி.யின் பார்வையில் தமிழ் மொழி எனும் நோக்கில் பார்க்கும் பொழுது அவருடைய தமிழ் இயக்கத்திற்காக உருவாக்கிய முழக்கம்தான் 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்' என்பதாகும். இன்று பரவலாக ஒலிக்கப்பெறும் இந்தத் தமிழ் முழக்கத்தை முதன் முதலில் அவர்தான் வழங்கினார்.

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு தஞ்சாவூரில் 1995 இல் நடைபெற்ற பொழுது 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்" எனும் முழக்கம் ஒலித்ததைக் குறித்து ம.பொ.சி. தமது செங்கோல் வார இதழில்

எழுதிய பொழுது, இந்த முழக்கத்தின் தோற்றத்தை விளக்கினார். இது குறித்து அவர் எழுதியதில் ஒரு பகுதி வருமாறு:

"நான் போகாவிட்டாலும் என் கோஷம் ஒலித்திருக்கிறது. எங்கும் தமிழ்; எதிலும் தமிழ் எனும் என் கோஷத்தை முதல்வரும் மற்ற அமைச்சர்களும் பிரதிநிதிகளும் ஒலித்தது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். மந்திரிகள் கட்சி உணர்வால் அந்த கோஷம் யாருடைய தென்பதை மறைத்தாலும் அதை 40 ஆண்டுகளுக்கு முன் ஒலித்தது தமிழரசுக் கழகந்தான். ஒலிக்கத்தூண்டியது நான்தான் என்பதைத் தஞ்சையில் கூடியிருந்த பிரதிநிதிகள் - செய்தித்தாள்களில் படித்தவர்கள் உணர்ந்திருப்பார்கள் அல்லவா? எங்கும் தமிழ்; எதிலும் தமிழ் என்ற கோஷம் முதலில் எழுந்தது இருசப்பகிராமணி தெருவிலிருந்துதான் என்று நானேனும் நினைத்து மகிழ்ச்சி யடையலாமல்லவா?

"எங்கும் தமிழ்; எதிலும் தமிழ் என்ற கோஷம் யாரிடமிருந்து பிறந்ததென்பது பிரச்சினையல்ல. அதற்கு வெற்றி தேடித் தருமா அ.தி.மு.க. அரசு?"[12]

இந்தக் கட்டுரை வெளிவந்த அதே இதழில் 'தமிழினத்துக்கு வாழ்த்து' எனும் பொருளில் எழுதிய தலையங்கத்திலும் தாம் முதன் முதலில் எழுப்பிய கோஷத்தைப் பற்றிப் பின்வருமாறு இதழாசிரியர் ம.பொ.சி. எழுதியுள்ளார்.

"யான் எழுப்பிய மற்றொரு கோஷமும் தஞ்சை மாநாட்டிலே ஒலித்தது. இது 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்' என்பதாகும். இதுவும் 14-1-1946 இல் தமிழர் திருநாள் மேடையிலே யான் எழுப்பியதாகும். ஆனால், இன்றைய தமிழினம் ஒன்றுபட்டா இருக்கிறது? இந்த லட்சணத்தில் எங்கும் தமிழ்; எதிலும் தமிழ் என்ற இரவல் கோஷம் வெற்றி பெறுவது எப்படி? தமிழினம் ஒன்றுபட்டாலன்றி எங்கும் எதிலும் என்றும் தமிழுக்கு இடமேது? இதை மகிழ்ச்சியோடு நான் சொல்லவில்லை. இரத்தக் கண்ணீர் வடித்தவண்ணம் சொல்லுகிறேன்.

"குட்டிக் குட்டி கட்சிகளின் பெயரால் பிஞ்சுப் பருவமுடைய தலைவர்களைக் கொண்டு பிளவுபட்டுவிட்ட தமிழினம் எங்கும் தமிழ்; எதிலும் தமிழ் என்று கோஷித்தது வெற்றி பெறுமா? எனது ஐயம் பொய்யாகி வெற்றி பெறுமானால் யான் பூரிப்படைவேன். பெற்றவளுக்குத்தானே தெரியும், பிள்ளையின் அருமை! போகட்டும், தஞ்சையை மறப்போம், தமிழினம் இனி ஒன்றுபடுமென்றே

நம்புவோம்! அதற்கு உதவி புரியுமாறு இறையருளைப் பிரார்த்திப்போம்".[14]

## "தமிழினமே ஒன்று படு"

கட்சிஅரசியல் பேசாமல் பொது அரசியலைப் பேசவே தமிழரசுக்கழகத்தைத் தோற்றுவித்த ம.பொ.சி. தமிழர்களுக்குப் பொதுவான கோரிக்கைகளை நிறைவேற்றத் "தமிழினமே ஒன்றுபடு" எனும் முழக்கத்தையும் எழுப்பினார்.

1946 சனவரி 14 இல் இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பு - சென்னை கோகலே மன்றத்தில் ம.பொ.சி. தலைமையில் தமிழர் திருநாள் விழா நிகழ்ந்தது. இந்த விழாவில் ராஜாஜி, காமராஜ், திரு.வி.க. முதலானோர் கலந்து கொண்டனர். அன்று ராஜாஜியும் காமராசரும் பிணக்குற்று இருந்தனர். கருத்து வேற்றுமையுடை யோரிடையே தமிழ், தமிழர் நலன்களில் ஒற்றுமை காண வேண்டியே ம.பொ.சி., அன்றைய விழாவில் 'தமிழினமே ஒன்றுபடு' எனும் காலத்தேவைக்கேற்ற கோஷத்தைக் கொடுத்தார். இது பற்றி அவர், 'தமிழினத்துக்கு வாழ்த்து' எனும் 'செங்கோல் தலையங்கத்தில் (15-1-1995) எழுதியதாவது:

"அந்த மேடையில் யான் எழுப்பிய கோஷம் 'தமிழினமே ஒன்றுபடு' என்பதாகும். ஆம்; கனவு கண்டேன்; தமிழினம் ஒன்றுபட்டு ஒரு புதிய தெய்வீகத் தமிழகத்தைப் படைக்கும் என்று; ஆனால், இன்று நாம் காண்பது என்ன? பத்து லட்சம் பேர் தஞ்சையில் கூடினார்கள் என்று சொல்லப்படுகிறது. பிணக்குற்றிருந்த அரசியல் தலைவர்கள் தமிழின் பெயரால் அந்த மேடையிலே காண வேண்டியவர்களைக் கண்டு மகிழ முடியவில்லையாம்! . . . . யான் 14-1-1946 இல் எழுப்பிய கோஷம் பொய்த்தே போய் விட்டது.

எனினும், ம.பொ.சி. வடக்கெல்லை, தெற்கெல்லை தலைநகர் தமிழ்நாடு பெயர் வைத்தல் பயிற்றுமொழி, ஆட்சிமொழி முதலான பிரச்சினைகளில் 'தமிழினமே ஒன்றுபடு' எனும் கோஷத்தை வைத்துத்தான் பாடுபட்டார்.

## தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய ம.பொ.சி.யின் பார்வையை 1951 இல் 'தமிழ் முரசு' இதழில் (ஆகஸ்டு, செப்டம்பர்) அறிகின்றோம்.

'எழுத்து மாற்றம்' எனும் தலைப்பில் வெளி வந்த அவருடைய கட்டுரையின் சுருக்கம் வருமாறு

"தமிழ், தெய்வமொழி, ஆதிசிவன் பெற்று, அகத்தியனார் வளர்த்த மொழி, முதலையுண்ட பாலனை அழைத்த மொழி; எலும்பைப் பெண்ணுருவாக்கிய இன்ப மொழி என்றெல்லாம் கதைகள் கூறிக் களிப்படையலாம். ஆனால், இந்தக் கற்பனைச் செய்திகளை வைத்துக் கொண்டு தமிழ் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுவது அறிவுடையார் செய்கையன்று. "தெய்வத்தமிழைத் திருத்துவதா?" என்று கேட்கிறது ஒரு எதிர்ப்புப்பிரசுரம். இந்தப் பிரசுரத்தை வெளியிட்ட தமிழ் மகனார் தமிழ் எழுத்துகள் இன்றுள்ள வடிவத்தில்தான் என்றென்றும் இருந்ததென்று நம்புகிறாரா? 'ஆம்' என்றால் அவரைப் பற்றி நாம் அனுதாபப் படுகிறோம். தமிழ் எழுத்துகள் எத்தனையோ முறை திருத்தப்பட்ட பின்னர்தான் இன்றுள்ள வடிவத்தை அடைந்திருக்கிறது. கல்வெட்டுகளில் காணப்படும் வட்டெழுத்துகளுக்கும், இன்று நாம் கையாண்டு வரும் எழுத்துகளுக்கும் உள்ள வேற்றுமையே இந்த உண்மையை விளக்கப் போதுமானது. முன்பெல்லாம் தமிழ் எழுத்துகள் திருத்தப்பட்டதால், அதன் தெய்வத்தன்மை குறைந்து விடவில்லை என்றால் இப்போதும் குறையாது என்று அந்த அன்பர் ஆறுதலடையலாம்".

ம.பொ.சி. முற்கூறிய கட்டுரையில், "தமிழ் எழுத்துகளைச் சீர்திருத்த வேண்டியது அவசியமா? அவசியமானால், சீர்திருத்தம் எவ்வகைத்து? சீர்திருத்தத்தினால் ஏற்படும் பலன்கள் யாவை? என்பன குறித்துப் பன்மொழிப்புலவர் மீனாட்சி சுந்தரனார் எழுதியுள்ள கட்டுரையைப் பிறிதோரிடத்தில் பிரசுரித்திருக்கிறோம்" என்று குறிப்பிட்டார். தெ.பொ.மீ. யின் கட்டுரை 'குடியாட்சித்தமிழ்' எனும் தலைப்பில் வெளிவந்துள்ளது.

செய்தித்தாள்களில் "லினோடைப்பிற்காகப் பரிந்துரைக்கப் பட்ட எழுத்துச் சீர்திருத்தத்தை அன்றைய அரசு அறிஞர் பலர் அடங்கிய குழுவின் பரிந்துரைகளை ஏற்று ஆணை பிறப்பித்தது. தெ.பொ.மீ. இந்த லினோ அச்சு வார்ப்பை ஆதரித்து எழுதியுள்ளார்.

அச்சு வரி வடிவமைப்பு (லினோடைப்) முறையிலானு எழுத்துச் சீர்திருத்தத்தை, 'சுதேசமித்திரன்' இதழில் அதன் ஆசிரியர் சி.ஆர். சினிவாசன் புகுத்தினார். நாளிதழ், வாரப்பதிப்பில் சில

பகுதிகளில் இந்த முறையைப் புகுத்தினார். அரசாங்கமும், பிற தமிழ் இதழ்களும் 'லினோ டைப்' எழுத்துச் சீர்திருத்தத்தை மேற்கொள்ளாத தினாலும், வாசகர்கள் ஆதரவு இல்லாததினாலும் இந்த எழுத்துச் சீர்திருத்தம் சுதேசமித்திரனில் விலக்கிக் கொள்ளப்பெற்றது.

"அச்சு யந்திரம், எழுத்து எழுத்தாக உருக்கிக் கோத்த காலம் போய் வரிவரியாகப் பக்கம் பக்கமாக உருக்கி வார்க்கும் காலம் வந்துள்ளது" என்பதைச் சுட்டிக்காட்டி எழுத்துச் சீர்திருத்தத்தை விளக்கியுள்ளார்.

உயிர் எழுத்துகளான ஐ, ஔ இரண்டையும் 'அய்', 'அவ்' என்று எழுதலாம் என்பதைத் தெ.பொ.மீ. ஏற்கவில்லை.

"இகரத்திற்கும், ஈகாரத்திற்கும் மெய்யெழுத்தின் மேல் முறையே சுழியாத மேல் விலங்கும், சுழித்த மேல் விலங்கும் இடுகிறோம். இவற்றையெல்லாம் மேலே ஒட்டிக்கொண்டு இராதபடி தனித்து மெய்யெழுத்தின் பக்கத்திலேயே எழுதுவதினால் இகரத்திற்கு 18, ஈகாரத்துக்கு 18 என முப்பத்தாறு வேண்டியதில்லை. சுழியாத மேல் விலங்கு ஒன்று, சுழித்த மேல் விலங்கு ஒன்று ஆக இரண்டு போதும். அப்படியே 'கு' முதலியவற்றிற்கும் 'கூ' முதலியவற்றிற்கும் இரண்டிருந்தால் போதும்" எனும் தெ.பொ.மீ.யின் எழுத்துச் சீர்திருத்தக் கருத்தையும் டாக்டர் வா.செ. குழந்தைசாமி எடுத்துக்காட்டியுள்ளார்.[15]

ம.பொ.சி. பிற்காலத்தில் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி அவருடைய 'செங்கோல்' வார இதழில் 1989இல் எழுதிய கட்டுரைகள் அவர் மறைவிற்குப் பிறகு தொகுக்கப்பெற்று" எழுத்துச் சீர்திருத்தம் தேவையா' எனும் தலைப்பில் வெளிவந்துள்ளது.[16]

'தினமணி'யும் டாக்டர் வா.செ. குழந்தைசாமியும் பரிந்துரைத்த எழுத்துச் சீர்திருத்தத்தைப் பற்றி ம.பொ.சி. எழுதியதைக் குறித்து டாக்டர் வா.செ. குழந்தைசாமி பின்வருமாறு தொகுத்துக் கூறி விமர்சித்துள்ளார்.

"சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் எழுத்துச் சீரமைப்பைத் தொடர்ந்து எதிர்த்து வந்தவரேயாவர். (டாக்டர் வா.செ.கு.விற்கு ம.பொ.சி.யின் முற்கூறிய 'தமிழ் முரசு' கட்டுரை பார்வைக்கு வரவில்லை போலும்.) ஆனால் அடிப்படையில் அவர் 'எந்த மாற்றத்தையும் ஏற்கேன்" என்ற குழுவில் இருந்தவர் அல்லர். மாற்றம் தேவையா. இல்லையா என்பது ஒரு புறம் இருக்க, மொழியில் மாற்றம் எதையும் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் வழிமுறைகளும்

முக்கியம் என்பது அவர் கருத்து. வரி வடிவம் மாற்றம் என்பது ஒரு கட்சி அரசு தானாகச் செய்யும் தரத்தது அன்று. அதற்குப் பரவலாக ஏற்புத் தேவை என்பதை வலியுறுத்தினார். இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாட்டுப் பிரதிநிதிகளுடன் கலந்து பேச வேண்டும் எனக் கருதினார். அதில் நமக்கு மாறுபட்ட கருத்தில்லை. இரண்டாவதாக, பலரும் கூறும் சீரமைப்புக் கருத்துகள் ஏதோ மனம் போன போக்கில் மரபுகளை மாற்றும் முயற்சியாக அழிக்கும் செயலாக அவருக்குத் தோன்றின. ஆனால், கொள்கை அளவில் அவர் உயிர், மெய், இகரம், ஈகாரம், உகரம், ஊகாரம் இவற்றில் கவனத்தோடும் கவலையோடும் செய்யப்படும் மாற்றத்தை ஏற்றவரேயாவார்."[17]

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய விவாதங்களில் பெரும்பாலும் கண்டன நோக்கோடு வெளிவந்த நூல்களுள் ம.பொ.சி.யின் எழுத்துச் சீர்திருத்தம் தேவையா? என்பதொன்றாகும்.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் தொடர்பாகப் பெரியார் எழுத்துச் சீர்திருத்த ஆதரவு நோக்குடன், வெளிவந்த நூல்களுள் டாக்டர் வா.செ. குழந்தைசாமியின் 'தமிழ் எழுத்துச் சீரமைப்பு' என்பதொன்றாகும்.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் வேண்டிப் பெரியார் 1934 முதல் பிரச்சாரம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். 30-12-1934 "பகுத்தறிவு" இதழில் 'தமிழ் எழுத்தில் சீர்திருத்தம்' எனும் தலைப்பில் பெரியார் எழுதியுள்ளார். இதில் ஒரு பகுதி வருமாறு:

"தமிழ்ப் பாஷை எழுத்துகள் வெகுகாலமாகவே எவ்வித மாறுதலும் இல்லாமல் இருந்து வருகின்றன. உலகிலுள்ள பாஷைகள் பெரிதும் சப்தம், குறி, வடிவம், எழுத்துகள் குறைப்பு. அவசியமான எழுத்துகள் சேர்ப்பு ஆகிய காரியங்களால் மாறுதல் அடைந்து கொண்டே வருகின்றன. காலவர்த்த மானங்களுக்கு ஏற்ப சப்தங்களும், பாஷைகளும், உச்சரிப்புகளும், வடிவங்களும் மாறுவது இயல்பேயாகும். வார்த்தைகள் காலத்தை வெளியிடுவதற்கு ஏற்பட்டவைகள் என்பது போலவே, எழுத்துகள் சப்தத்தை உணர்த்த ஏற்பட்டவைகளேயாகும். ஆனால், நம் பண்டிதர்களும் தாராளமாய் அறிவைச் செலுத்த இடமில்லாமல் மதம், பழக்க வழக்கங்கள் ஆகியவைகள் குறுக்கிட்டு விட்டதால், எழுத்துகளுக்கும், அதன் கோடுகளுக்கும், வடிவங்களுக்கும் தத்துவார்த்தம் கற்பிக்க வேண்டிய அவசியமேற்பட்டு, எழுத்துகளையே தெய்வமாகவும் - தெய்வ வடிவமாகவும் கருத வேண்டிய நிலை நம் நாட்டில் ஏற்பட்டுவிட்டது.

சில எழுத்துகளை மாற்ற வேண்டியதும், சில எழுத்துகளைக் குறைக்க வேண்டியதும், சில குறிகளை மாற்ற வேண்டியதும் அவசியம் என்றும், அனுகூலமென்றும் பட்டால் அதைச் செய்ய வேண்டியது தான் அறிவுடைமையே ஒழிய - அதன் தத்துவார்த்தத்துக்கு ஆபத்து வருகின்றதே என்பது அறிவுடைமையாகாது என்பது நமது கருத்து".[18]

20-1-1935ஆம் 'குடிஅரசு' இதழின் தலையங்கத்தில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிப் பெரியார் கூறிய கருத்துகளில் சில, பின்வருவன:

"இப்போது உயிர்மெய் எழுத்துகள் என்று சொல்லப்படும் 18 எழுத்துகளிலும் ஒவ்வொன்றுக்கும் உள்ள இ-கரம், ஈ-காரம், உ-கரம், ஊ-காரம் ஆகிய நான்கு சப்தங்கள் கலந்த எழுத்துகள் தனித்தனி வடிவம் கொண்டு அதாவது கி, கீ, கு, கூ என்பது மாதிரியே 18 எழுத்துகளும் தனித்தனி உருவம் பெற்று 18 x 4 = ஆக மொத்தம் 72 எழுத்துகள் அதிகமாக, அனாவசியமாக இருந்து வருகின்றன. இந்தத் தனித்தனி வடிவங்கள் எதற்காக இருக்க வேண்டும்? எல்லா உயிர் மெய் எழுத்துகளுக்கும் ஆ-காரம், ஏ-காரம் ஆகிய சப்தங்களுக்கு ா ே, ஆகிய குறிப்புகளைச் சேர்த்து எப்படி கா, கே, என்று ஆக்கிக் கொள்ளுகின்றோமோ அது போலவே, மேற்கொண்ட கி, கீ, கு, கூ, முதலிய சப்தங்களுக்கும் ஒரு தனிப்பட்ட குறிப்பு அடையாளத்தை ஏன் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்பது மிகவும் யோசிக்கத்தக்க விஷயமாகும். . . . . . . உயிரெழுத்துகள் என்பவைகளில் ஐ, ஔ என்கின்ற இரண்டு எழுத்துகளும் தமிழ்பாஷைக்கு அவசியமில்லை என்பதே எனது வெகு நாளைய அபிப்பிராயமாகும்."[19]

பெரியாருக்கு முன்பும், பின்பும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை ஆதரித்து உருவான வரலாற்றை டாக்டர் வா.செ. குழந்தைசாமி குறிப்பிட்டுள்ளார்.

18-9-1987இல் ஈரோட்டில் பெரியார் நூற்றாண்டு விழாவினைத் தொடங்கி வைத்து அன்றைய தமிழக முதல்வர் எம்.ஜி. ராமச்சந்திரன், பெரியார் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைத் தமிழக அரசு செயற்படுத்துமென அறிவித்தார். இதற்கான அரசாணை நிலை எண் 1875, நாள் 19-10-1978 வெளியிடப்பெற்றது.

"இச்சீர்திருத்திய தமிழ் எழுத்து வடிவங்கள் அனைத்து அரசு அலுவலங்களிலும், பள்ளிகள், மற்றும் கல்லூரிகளிலும், உள்ளாட்சித் துறை வரம்பிற்குட்பட்ட நகராட்சி, மாநகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களிலும், தமிழக அரசின் வரம்பிற்குட்பட்ட வாரியங்கள்

கழகங்கள், நிறுவனங்களிலும் பின்பற்ற வேண்டும்" என அரசாணை விதித்தது.

இந்த அரசாணையில் ஐ, ஔ இரண்டும் 'அய்', 'அவ்' என சீர்திருத்திய எழுத்துகள் என அறிவிக்கப்பட்டது. இவை தவிர 13 சீர்திருத்திய எழுத்துகளும் குறிப்பிடப்பெற்றன.

ஐ, ஔ எழுத்துகளில் திருத்தம் கண்டதற்குத் தமிழறிஞர்கள் பலரிடையே கடும் எதிர்ப்புத் தோன்றியது. இதனால் முன்பு வெளியிடப்பெற்ற அரசாணைக்கு ஒரு திருத்தம் செய்யப் பெற்றுக் குறிப்பாணை என் 17-4/தவ/79-2, நாள் 23-5-1979 வெளி வந்தது. "ஏற்கெனவே வழக்கில் இருந்த 'ஐ', 'ஔ' ஆகிய உயிரெழுத்துகளின் வடிவங்கள் கைவிடப் படாமல் முன்பு போலவே தொடர்ந்து நடைமுறையில் வழக்கில் இருந்து வரும்" என்று குறிப்பாணை திருத்தம் அறிவித்தது.

இது குறித்து ம.பொ.சி. எழுதியதாவது:

"உயிரெழுத்துகளில் திருத்தம் காண்பதைத் தமிழ் அறிஞர்களில் பலரும் எதிர்த்தனர். 'ஐ' எழுத்தானது தலைமையைக் குறிக்கும் பொருள் பொதிந்த சொல்லாகவும் இருந்து வருவதால் அதனைக் கை விடுவதற்கு அறிஞருலகம் விரும்பவில்லை. அத்துடன் 'ஐ' என்னும் எழுத்தை உயிரெழுத்துகள் பட்டியலிலிருந்து அகற்றாமலேயே 'அய்' என்று எழுதும் வழக்கமும் நடைமுறையும் இருப்பதால், அதை அப்படியே விட்டு விடலாம் என்றும் ஆலோசனை கூறினர்.

"ஔ' என்னும் எழுத்தானது 'ஒ' 'ள' என்னும் கூட்டெழுத்துகளைக் கொண்டதாலாயே இதனை அகற்றிய பின்னரும், 'ஒ'வும், 'ள'வும் உயிரெழுத்தாகவும், உயிர் மெய்யெழுத்தாகவும், நீடிக்குமாதலால் எழுத்துக்களைக் குறைக்கும் வேலைக்கு இந்தச் சீர்திருத்தம் பயன்படாது என்பது தெளிவு படுத்தப்பட்டது".[21]

இதைத் தொடர்ந்து ம.பொ.சி. மேலும் கூறியதாவது.

"இந்தக் கருத்தை ஏற்று 'ஐ'யும், 'ஔ'வும் அகற்றப்பட மாட்டாது என்று அரசு மறு ஆணை பிறப்பித்தது. இதற்கு மேல் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்கவோ, அவற்றின் வடிவங்களை மாற்றவோ அரசு ஆர்வம் காட்டவில்லை. ஆயினும் எழுத்துச் சீர்திருத்தங்களின் பிரச்சாரம் தொடர்கிறது".[22]

தமது பிரச்சாரத்தை பின்வருமாறும் வெளிப்படுத்தியுள்ளார், ம.பொ.சி.

"முன்னர் திரு. டி.எஸ். அவிநாசிலிங்கனார் கல்வி மந்திரியாக இருந்த போதும் இப்போது நடைமுறையிலுள்ள எழுத்துச் சீர்திருத்தம் ஆராயப்பட்டு, அரசால் ஏற்கப்பட்டது. ஆனால், கல்வியமைச்சர் மாறியதன் பின் அதுவும் குப்பைக் கூடையில் எறியப்பெற்றது."[23]

## "தமிழில் எழுத்துக்குறை"

பாரதியின் "தமிழில் எழுத்துக் குறை" யென்னும் கட்டுரையை வ.உ.சி. எதிர்த்ததையும் ம.பொ.சி. பின்வருமாறு பயன்படுத்திக் கொண்டார். "தமிழிலேயே க ச ட த ப என்னும் எழுத்துகளுக்கு நான்கு வர்க்க எழுத்துகளைப் படைக்க வேண்டும் என்றார் மகாகவி பாரதியார். அதைக் கப்பலோட்டிய தமிழர் முழுமூச்சுடன் எதிர்க்கவே பாரதியின் வர்க்க எழுத்துச் சீர்திருத்தமும் பிறந்தபோதே செத்துப் போய் விட்டது".[24]

வடிவம் பற்றிய சீர்திருத்தம் வேறு; எழுத்துக்குறை என்பது வேறு என்றாலும் மேலே ம.பொ.சி. எடுத்துக் காட்டிய பாரதியார் - வ.உ.சி. கருத்து வேற்றுமையைக் குறித்து அறிதல் அவசியமாகின்றது.

"வீரமுரசு சுப்பிரமணிய சிவா" எனும் எனது நூலில் (1984) பாரதியார் - வ.உ.சி. இருவருக்கும் இடையே எழுத்துச் சீர்திருத்தம் தொடர்பாக நிகழ்ந்த விவாதத்தை விரிவாக எழுதியுள்ளேன்.

"ஞானபாநு'வில் பாரதி - வ.உ.சி. கருத்துப் போர்" எனும் தலைப்பில் எழுதியுள்ளேன். இதன் சுருக்கம் வருமாறு:

"1915 ஜூலை ஞானபாநுவில் பாரதியாரின் "தமிழில் எழுத்துக்குறை" எனும் கடிதம் வெளிவந்தது. புதுச்சேரியில் அரவிந்தர் தோழமையால் தூண்டப் பெற்ற சிந்தனையின் விளைவால் 'தமிழில் எழுத்துக் குறை' எனும் கடிதம் உருப்பெற்றது போலும்.

"சம்ஸ்கிருத மொழியில் உள்ள வர்க்க எழுத்துகளைக் கருத்தில் கொண்டு தமிழில் எழுத்துக்குறை பற்றி சொல்லப் பெற்றது. தமிழில் இஃது ஒரு குறையே அன்று எனப் 'பரிதிமாற்கலைஞர்' வி.கோ. சூரியநாராயணசாஸ்திரியார் சாற்றியுள்ளார்.

"வருக்க எழுத்தில் ஒலிக்க வேண்டிய சொற்கள், அவ்வாறில்லாமல் தமிழில் ஒலிப்பது, ஒரு குறையெனக் கண்டு

அரவிந்தர் ஒரு கதையைச் சொன்னாராம். அதையும் மேற்கோள்களாகக் காட்டிய பிறகு பாரதியார் தமது கருத்துகளை விளக்கினார். இவற்றுள் முக்கியமானவை வருமாறு:

“இங்கிலீஷ் அக்ஷரத்தில் ப்ரெஞ்ச், அரபி, பார்ஸி, ஸம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளின் பதங்கள் சிலவற்றை எழுதுவதற்கு இங்கிலீஷ் அரிச்சுவடி இடங்கொடாததைக் கருதிச் சில புதிய குறிகள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எல்லா ஐரோப்பிய பாஷைகளுமே அந்நிய பாஷைகளிலுள்ள விசேஷ உச்சரிப்புகளுக்கு இணங்கும்படி சில தனிக்குறிகள் ஏற்பாடு செய்து வைத்துக் கொண்டிருக்கின்றன. நாமும் அப்படியே சில விசேஷக் குறிகள் ஏற்பாடு செய்து கொள்ளுதல் மிகவும் அவசியமாகும்.

ஏற்கனவே நான் இந்தக்குறையை நீக்கும் பொருட்டாக மிகவும் சுலபமாக ஐந்து நிமிஷங்களில் யாரும் கற்றுக் கொள்ளக் கூடிய சில குறிகள் தயார் செய்து வைத்திருக்கிறேன். ஆனால் இப்புதிய வழியைத் தமிழ் நாட்டுப் பத்திராதிபர்களும் பிறரும் அறியும்படி துண்டுப் பத்திரிகைகள் போட்டு வேலை செய்வதற்கு வேண்டிய சௌகர்யங்கள் எனக்கு இன்னும் சில மாதங்கள் கழித்த பிறகுதான் ஏற்படும்.

இப்புதிய உபாயத்தை அனுஸரிப்பதால் இப்போது நாமெல்லோரும் எழுதி வரும் முறைமைக்கு யாதொரு ஸங்கடமும் உண்டாகாது. புதிய குறிகள் தெரியாதவர்கள் கூட வழக்கம் போலவே படித்துக் கொண்டு போவார்கள். யாருக்கும் எவ்விதமான சிரமமும் ஏற்படாது. நமது பாஷைக்கு நமது அரிச்சுவடி போதும். அந்நிய தேசப் பெயர்கள் முதலியவற்றுக்காக மாத்திரமே இப்புதிய முறை ஏற்பட்டது”.

## வ.உ.சி.யின் மறுப்புரை

மேற்காணும் பாரதியார் கருத்தை மறுத்து வ.உ.சி. எழுதியது சுப்பிரமணிய சிவாவின் ஞானபாநு இதழில் (1915 செப்டம்பர்) வெளிவந்தது. அதன் சுருக்கம் வருமாறு:

“நமது நண்பர் ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதியவர்கள் சென்ற ஆடி மாதத்தில் வெளி வந்த நமது ‘ஞானபாநு’வில் தமிழில் எழுத்துக்குறை’ என்னும் தலைப்பெயரோடு ஒரு நிருபம் வரைந்துள்ளார்கள். அந்நிருபத்தில் மேற்கண்ட சேர்க்கையைச் செய்ய வேண்டுமென்பதற்காகக் கூறப்பட்டுள்ள காரணம் ஒன்றே. அஃதாவது பிறபாஷைகளின் மனிதப் பெயர், நகரப்பெயர்,

முதலியவற்றிற் சிலவற்றை அப்பாஷையாளர் உச்சரிக்கும் சப்தத்தில் நாம் உச்சரிக்குமாறு செய்யத்தக்க சில எழுத்துகள் நமது தமிழ்ப் பாஷையில் இல்லையென்பதே . . . . .

தெய்வ பாஷையென்றும், பூரண பாஷையென்றும் பல பாஷைகளுக்கும் தாய் பாஷையென்றும் சொல்லப்படுகிற சம்ஸ்கிருத பாஷை எழுத்துக்களோடு ழ, ற, ன, F, Z என்னும் எழுத்துகளையாவது அவற்றின் ஒலிகளைக் குறிக்கும் குறிகளையாவது சேர்ப்பதற்கு நண்பரவர்களும், அரவிந்தரவர்களும் முயற்சி செய்து வெற்றி பெறுவார்களாயின், அவர்கள் நமது தமிழ் மக்களுக்கு ஒப்பற்ற வழிகாட்டிகளாவர்கள். பின்னர் நமது தமிழ் மக்கள் அவர்களைப் பின்பற்றத் துணிவார்கள்".

## பாரதியார் விளக்கம்

மேலே வ.உ.சி., பாரதியார் பெயரைக் குறிப்பிட்டு எழுதிய கட்டுரைக்குப் பாரதியார் வ.உ.சி. பெயரைக் குறிப்பிடாமல் தமது விளக்கத்தை அக்டோபர் 1915 ஆம் மாத "ஞானபாநு"வில் பின்வருமாறு அளித்தார்.

"ஜ, ஷ, ஸ, க்ஷ என்ற எழுத்துகளைத் தமிழ் அரிச்சுவடியில் நமது பூர்வீகர் சேர்த்திருக்கிறார்கள். இவற்றைச் சேர்க்காவிட்டால் தமிழ் நேரே பேச முடியாமலும், எழுத முடியாமலும் போய் விடுமென்று அரிச்சுவடி போதா வண்ணமாக நமது பாஷை வளர்ச்சி பெற்றவுடனே நமது முன்னோர்கள் மேற்காட்டிய எழுத்துகளையும் சேர்த்தார்கள். நாமும் அப்படியே நமக்கு இக்காலத்தில் ஏற்படும் உச்சரிப்புக் கஷ்டங்களை நிவிருத்தி செய்து கொள்ளுவதற்கு கிரந்த எழுத்துகளைச் சேர்க்கலாமென்ற சில பெரியோர் கருதுகிறார்கள். ஆனால் **அதைக் காட்டிலும் அடையாளங்கள் போடுவது சுலபமான வழி**" (அழுத்தக்குறியீடு இந்நூலாசிரியருடையது).

"எனது புதிய முறையை இப்போதே அறிந்து கொள்ள விரும்புவோர் கீழ்கண்ட என் விலாசத்துக்கு (புதுச்சேரி) இரண்டணா தபால் முத்திரை வைத்தனுப்பினால் அவர்களுக்கு இம்முறையை நல்ல கையெழுத்தில் தெளிவாக எழுதுவித்து அனுப்புகின்றேன்" என்று மாத ஞானபாநுவில் குறிப்பிட்டார். ஆனால், அவ்வாறு அறியப்பட முயற்சியெடுக்கப்பட்டதாகவோ அல்லது பாரதியாரே அடையாளக் குறிப்புகளை அறிவித்ததாகவோ செய்தியில்லை.

வ.உ.சி.யும் "பல காரியங்களின் நிமித்தமாகப் பல பாஷையினரோடு பலவகைச் சம்பந்தங்களை வைத்துக்

கொண்டிருக்கிற யானும் நமது நண்பர் ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதி அந்நிய பாஷைச் சொற்களைத் தமிழில் எழுதுவதற்குக் கண்டுள்ள புதிய முறையின் வரவை எதிர்நோக்கியிருக்கிறேன்" என்று சுதேசமித்திரனில் 29-10-1915இல் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.[25]

'ஞானபாநு'வில் நிகழ்ந்த தமிழ்மொழி எழுத்துக்குறை பற்றிய விவாதத்தின் தொடர்பாகப் பாரதியார் கூறிய அடையாளக் குறிப்புகள் வெளிப்படாமற் போனது வருந்தத்தக்கது.

## "எழுத்துக்குறையும் புதிய குறியீடுகளும்" பற்றிய ஒரு மதிப்பீடு

இலங்கைத் தமிழ்ப் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் பாரதி - வ.உ.சி. இடையே நிகழ்ந்த விவாதத்தின் மீது தமது மதிப்பீட்டை "எழுத்துக்குறையும் புதிய குறியீடுகளும்" எனும் தலைப்பில் எழுதியதில் பின்வருமாறு வெளியிட்டுள்ளார்.

"வ.உ.சி. பாரதிபோல் மொழியை ஒரு மாறும் சாதனமாகக் கருதவில்லை. தமிழுக்கு எழுத்துத் திருத்த வேண்டும் என்று பாரதி கூறும்போது, முதலில் சம்ஸ்கிருதத்திலே அதை அவர் செய்து விட்டு பிறகு தமிழுக்கு வரட்டும் என்று அவர் கூறுவது இதனால்தான். சம்ஸ்கிருதம் ஒரு இறந்தமொழி. தமிழ் ஒரு வாழும் மொழி. இறந்த மொழிக்கு மாற்றமும் இல்லை; வளர்ச்சியும் இல்லை. வாழும் மொழியே மாறும்; வளரும். அவ்வகையில் சம்ஸ்கிருதத்தில் எழுத்துச் சீர்திருத்தம் அவசியமில்லை. தமிழுக்கே அவசியமாகும் என்பதை வ.உ.சி. புரிந்து கொள்ளவில்லை.

வெளிநாட்டு ஊர்களின் பெயர்களையும் மனிதர்களின் பெயர்களையும் நாம் சரியானபடி சொல்ல வேண்டுமா? வேண்டாமா? என்ற பாரதி தமிழில் எழுத்துக்குறை' என்ற அதே கட்டுரையில் கேள்வி எழுப்புகிறான். இவ்வினா முக்கிய கவனத்துக்குரியது. இது தொடர்பாக இரண்டு எதிர்நிலைப்பட்ட விடைகள் உள்ளன. ஒன்று, பிறமொழிச் சொற்களை ஒலிச்சிதைவின்றி எழுதவேண்டும் என்பதும் அதன் பொருட்டும் புதிய எழுத்துகளை அல்லது குறியீடுகளைப் பயன்படுத்த வேண்டும் என்பதுமாகும். இதுவரை நோக்கியதில் இருந்து பாரதியே இக்கருத்தின் முன்னோடி என்பது பெறப்படும். பாரதி வழிவந்த மறுமலர்ச்சியாளர்கள் சிலரும் குறிப்பாக டி.கே. சிதம்பரநாத முதலியார் போன்றவர்களும் தற்கால மொழியியலாளர் சிலரும் வெவ்வேறு அளவில் இக்கருத்தின் ஆதரவாளர்களாக உள்ளனர்."[26]

## எழுத்துச் சீர்திருத்த முயற்சி மேலும் தொடர்ந்தது

1996 இல் தமிழ்நாடு அரசு தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் குறித்து அரசாணை (நிலை) எண் 73, நாள் 15-3-1996 என்பதை வெளியிட்டது. தமிழ் வளர்ச்சி மன்றத்தின் மூன்றாவது கூட்டத்தில் எழுத்துச் சீரமைப்புத் தொடர்பாகக் கீழ்காணும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"வளர்ந்து வரும் அறிவியலுக்கு ஈடு கொடுக்கும் வகையிலும் தமிழைப் பயில்வோர்க்கு உறுதுணைபுரியும் வகையிலும் இதுவரை மேற்கொள்ளப் பெற்ற தமிழ் எழுத்துச் சீரமைப்புக்குக் கூடுதலாக வேண்டப்படும் சீரமைப்புக்குறித்து ஆய்ந்து கருத்துகளைக் கூற வல்லுநர் குழு ஒன்றை அமைக்க இம்மன்றம் அரசுக்குப் பரிந்துரைந்துள்ளது.

டாக்டர் வா.செ. குழந்தைசாமி தலைமையில் ஐராவதம் மகாதேவன், டாக்டர் தி. முத்து கண்ணப்பர், கொண்டல் சு. மகாதேவன், டாக்டர் மோ. இசரயேல், தமிழ் வளர்ச்சி இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்களாகக் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

இந்தக்குழுவை நியமித்தது அன்றைய அ.தி.மு.க. அரசு. குழுவின் அறிக்கை இறுதி வடிவம் பெற்று அரசிடம் வழங்கப்பட்ட பொழுது தி.மு.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது.

தி.மு.க. அரசு இலங்கை, சிங்கப்பூர், மலேசிய நாடுகளில் உள்ள தமிழறிஞர்களின் கருத்துகளைக் கேட்க வேண்டும் எனக்குறிப்பிட்டு அறிக்கையை ஏற்பதைத் தள்ளி வைத்தது. இதைத் தொடர்ந்து எந்த முடிவும் ஏற்படவில்லை.[26அ] டாக்டர் வா.செ. குழந்தைசாமி அவர்களின் முயற்சிகள் தொடருகின்றன. தேக்க நிலையே இப்பணி வெற்றி பெறாமைக்குக் காரணமாக உள்ளது.

"இது கணிப்பொறி யுகம். கணிப்பொறி பயன்படுத்தப்படாத துறைகளே இல்லை. இன்று அச்சு முழுவதும் கணிப்பொறி மயமாகி விட்டது. தட்டச்சில் மின்னியல் புரட்சியும், கணிப்பொறிகளின் கூறுபாடும் இடம் பெற்றுவிட்டன. இந்த மாற்றங்கள் நமது கதவு ஒவ்வொன்றையும் தட்டிக் கொண்டிருக்கின்றன. நாம் தாளிட்டுக் கொண்டு இருட்டறையில் வாழ இயலாது, வாழக்கூடாது".[27] இவ்வாறு டாக்டர் வா.செ. குழந்தைசாமி சாற்றியுள்ளது சிந்தித்துச் செயலாற்ற வேண்டியதை வலியுறுத்துகின்றது.

### "நான்காவது தமிழாம்!"

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் வழக்கு இருக்க 'அறிவியல் தமிழ்' என்று கூறி அதை நான்காவது தமிழாகப் பெயர் சூட்ட எழுந்த முயற்சியை ம.பொ.சி. கண்டித்தார். "நான்காவது தமிழாம்!" என்று எள்ளலுடன் பின்வருமாறு சாடினார்.

"அறிவியல் தமிழ் என்பதாக ஒரு புதிய தமிழைப் புகுத்துவதாக எழுத்துச் சீர்திருத்தவாதிகள் கூறுகிறார்கள். இது, இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்பவற்றிற்கப்புறம் நான்காவது தமிழாம்! அறிவியல் கலையைத் தமிழில் கொண்டு வருவது அரசியல் கலையைத் தமிழில் கொண்டு வருவது போலத்தான்! அதனால் பின்னதற்கு அரசியல் தமிழ் எனப் பெயர் வைத்து ஐந்தாவது தமிழ் என்பதா?"[28]

"இயலிசை நாடகமென்பது சொல்லிய மூன்று தமிழுக்குயர்வான தமிழுமில்லை" என்று பொருள் பெறும். 'முத்தமிழ் தமக்கு மூப்புமில்லை' எனும் களவியலாரின் கல்வியொழுக்க மூதுரையும் இங்கு நினைவுகூரத்தக்கது.[29]

### மொழிக்கலப்பு
### ம.பொ.சி.யின் கொள்கை

"தமிழ் தனித்தியங்கும் மொழி. இன்னொன்றின் கிளை மொழியன்று. எனவே, தேவையில்லாத இடத்தில் பிறமொழிச் சொற்களைப் பிடிவாதமாகப் புகுத்துவது தமிழுக்குத் தீங்கு செய்வதாகும்" என்பது ம.பொ.சி.யின் மொழியுணர்வுச் சிந்தனைகளில் ஒன்றாகும்.[30]

மொழி உணர்வு சமூக, அரசியல் நிலைமைகளின் வெளிப்பாடாக அமைவதும், ஒவ்வொரு மொழி இயக்கத்துக்குப் பின்னாலும் சில சமூக அரசியல் காரணிகள் அமைவதும் உலக மொழிகள் பலவற்றின் வரலாறுகளில் அறியப்படும் உண்மைகளாகும்.

இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டுணர்வு, காலனியாதிக்க எதிர்ப்புணர்வு ஆரிய-திராவிட இனவாத எதிர்ப்புணர்வு, பிராமணர் - பிராமணரல்லாதர் சமூகவுணர்வு, ஆத்திக-நாத்திக வாதவுணர்வு வரலாற்றுணர்வு முதலானவற்றின் பின்புலத்தில் ம.பொ.சி. தமது மொழிக் கலப்புக் கொள்கையை வகுத்துக் கொண்டார்.

தமிழில் சம்ஸ்கிருத மொழிக் கலப்பு, ஆங்கில மொழிக்கலப்பு இரண்டும் பெரும் அறைகூவல்களாக, பிரச்சினைகளாக இருந்து வருகின்றன.

“தனித்தமிழ்க் கொள்கை' இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் தோன்றியது. தனித்தமிழ்க் கருத்து, மறைமலையடிகளுக்குத் தமிழ்த் தொல் பழநூற் பயிற்சியால் இயல்பாக வாய்த்தது. அதனைக் கொள்கையாக்கி இயக்கமாக்கி வளர்க்கச் செய்தது பலரும் செய்த மொழிக் கலப்பும், மொழிச் சிதைப்புமாம்!" என்று ஆய்வாளர் புலவர் இரா. இளங்குமரன் குறிப்பிட்டுள்ளார்.[31]

கலப்பு என்னும் பொழுது சம்ஸ்கிருதம், ஆங்கிலம் இரண்டுமே எதிர்ப்பதற்குரியன. ஒன்றின் எதிர்ப்பில் தீவிரவாதத்தையும், பிறிதொன்றில் மிதவாதத்தையும் மேற்கொள்வது முறையாகாது. தனித்தமிழ் இயக்க முன்னோடி மறைமலையடிகளாரின் பின்வரும் கருத்துப் போற்றுதலுக்குரியது.

“ஆரியம் ஆங்கிலம் முதலான பிறமொழிச் சொற்களைக் கலவாமற்றனித் தமிழிற் பேசவும் எழுதவும் கடைப்பிடியாய்ப் பழகி வரல் வேண்டும்”.[32]

பிரிட்டிஷ் காலனியாதிக்க எதிர்ப்பும் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ்த் தலைவர்களில் சிலர் மொழிக் கலப்பை எதிர்ப்பதில் தீவிரவாதம் பேசினர்.

## விடுதலைப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவா

பிறமொழிச் சொற்கள் கலப்பில்லாத தனித்தமிழை ஊக்குவிக்க வேண்டும் எனும் கொள்கையைப் பரப்ப சிவா ஒரு திட்டமிட்டார். தமது 'ஞானபாநு' மாத இதழில் வெளியிடத் தக்க ஒரு கட்டுரை 'தனித்தமிழ்ச் சொற்களையே கொண்டதாக இருக்க வேண்டும். இதற்கு ஐந்து ரூபாய் பரிசளிக்கப் படும் எனும் விளம்பரத்தை 'ஞானபாநு'வில் (ஜூலை, 1915) வெளியிட்டார். 'இனாம் ஐந்து ரூபா' எனும் தலைப்பில் வெளியிடப் பெற்ற விளம்பரத்தின் முழு வடிவம் வருமாறு:

“உங்களால் தனித்தமிழ் எழுத முடியுமா? முடியுமானால் முந்துங்கள். சம்ஸ்கிருதம் முதலிய அன்னிய பாஷைச் சொற்களில் ஒன்றும் கலவாது தனித்தமிழில் நமது 'ஞானபாநு'வில் எட்டுப் பக்கத்திற்குக் குறையாது வரும்படியாகத் தமிழ்ப் பாஷையின் சிறப்பைப் பற்றியாவது, திருவள்ளுவ நாயனாரின் சரித்திரத்தையாவது

எழுதுவோருக்கு ரூபா ஐந்து இனாமளிப்பதாகத் தமிழபிமானி யொருவர் முன் வந்திருக்கிறார்.

சம்ஸ்கிருதச் சொல்லாகிய கஜம் திரிந்து தமிழில் கயம் என்றாயிருப்பது போன்ற திரிபுச் சொற்களுக்கும் சம்பந்தமில்லாத தனித்தமிழ்ச் சொற்களே உபயோகிக்கப்பட வேண்டும்.

வியாசங்கள் வருகிற ஆவணி மாதம் 15 ஆம் தேதிக்குள் நமது 'ஞானபாநு' காரியஸ்தலத்திற்கு அனுப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்படுகிறது. வெகுமதிப்புக்குரித்தாகிய வியாசமானது நமது பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். இவ்விஷயத்தைப் பற்றி மற்ற விவரங்கள் ஏதேனும் வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்க.

காரியஸ்தர்<br>
'ஞானபாநு'<br>
மைலாப்பூர், சென்னை.

## ம.பொ.சி.யின் பார்வையில் 'ஞானபாநு' விளம்பரம்

'விடுதலைப் போரில் தமிழ் வளர்த்த வரலாறு' எனும் அரிய ஆய்வு நூலில் சிவாவின் 'ஞானபாநு' ஆற்றிய தமிழ்த்தொண்டையும், பாரதி - வ.உ.சி, சுதேசமித்திரன் - ஞானபாநு கருத்துப் போர்களையும் முதன் முதலாக ஆய்ந்தவர் தமிழரசுக்கழகத் தலைவர் ம.பொ.சி. "தேசிய விடுதலை இயக்க வழி வந்த தனித்தமிழ் இயக்கத்தை ஆய்வு செய்பவர்களுக்கு 'விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு' மிக முக்கியமானதாகும்" என்று பேராசிரியர் டாக்டர் கா. சிவத்தம்பி சுட்டிக்காட்டியுள்ளார்.[33]

சம்ஸ்கிருதம் அந்நிய மொழியெனச் சிவா எழுதியதைப் பற்றி ம.பொ.சி. பின்வருமாறு விமர்சனம் செய்துள்ளார்.

"இந்த விளம்பரத்திலே 'சம்ஸ்கிருதம் முதலிய அந்நிய பாஷைச் சொற்கள்' என்று சிவம் குறிப்பிட்டிருப்பது சிந்தனைக் குரியதாகும். சிவம் ஆசாரத்தால் அந்தணர், ஆன்மிகத்தால் வேதாந்தி; கொண்ட கோலத்தால் துறவி. இப்படியிருந்தும் அந்தண வருணத்தவர் போற்றும் சம்ஸ்கிருத மொழியினை அவர் 'அந்நியமொழி' என்று குறிப்பிட்டிருப்பது நமக்கு வியப்பைத் தரும். கலாசாரத்துறையிலே இந்திய மொழிகளையெல்லாம் - அம்மொழி பேசும் இந்துக்களையெல்லாம் - பிணைக்கும் பொது மொழி சம்ஸ்கிருதம். அன்று மட்டுமல்ல, இன்றுங்கூடத்தான். இந்து சமயப்

பற்றுதலும். அந்த சமயத் தத்துவங்களிலே ஆர்வமும் கொண்டவர்கள் - அவர்கள் அந்தணராகட்டும் அந்தணரல்லாதவர்களாகட்டும் சம்ஸ்கிருதமொழியைக் கலாச்சார அளவிலேனும் தம் சொந்த மொழியாகக் கொள்வர். சுப்பிரமணிய சிவம் அவர்களுக்கும் இது உடன்பாடுதான். ஆயினும், ஆன்மீகத்திற்குப் புறம்பான உலகியல் வாழ்விலே தமிழ் ஒன்றுதானே அவரது தாய்மொழி. அதனால் தமிழல்லாத பிறமொழிகளையெல்லாம் அவர் உலகியலில் அந்நிய மொழிகளாகக் கருதியதில் தவறில்லைதான்"[34]

சிவாவின் தனித்தமிழ்க் கொள்கையைப் பற்றி மேலும் விளக்கமாக அறிய அவருக்கும் 'சுதேசமித்திரனுக்கும் இடையே நிகழ்ந்த கருத்துப் போரையும் உற்று நோக்க வேண்டும். இதன் விவரம் என்னுடைய 'வீரமுரசு' சுப்பிரமணிய சிவா' எனும் நூலில் (1984) கூறப்பெற்றுள்ளது.

சுதேசமித்திரனில் ஆங்கிலச் சொற்கள் மிகுதியாகப் பயன்படுத்தப்படுவதைச் சிவா கண்டித்து 'ஞானபாநு'வில் எழுதியுள்ளார்.[35]

அக்டோபர் 1915 இல் 1, 6, 15 - ஆம் தேதிகளில் வெளிவந்த சுதேசமித்திரன் இதழ்களில் 'ஞானபாநு'விற்குப் 'பாரதபுத்ரன்' என்பவர் பெயரில் பதிலளிக்கப்பெற்றுள்ளது.

இதற்குப் பதிலளித்து 'ஞானபாநு'வில் (நவம்பர், 1915- ப. 201) "நாமும் சுதேசமித்திரன்" எனும் தலைப்பில் சிவா எழுதியுள்ளார். இதன் ஒரு பகுதி, வருமாறு:

" 'பாரத புத்திரன்' அவர்கள் நமது அபிப்பிராயங்களை நன்றாக கிரஹிக்கவில்லையென்று தோன்றுகிறது. ஆங்கிலச் சொற்கள் கலவாத தமிழ் எழுதவேண்டுமென்று எப்பொழுதும் நாம் கூறி வருகின்றோமேயொழிய சம்ஸ்கிருதச் சொற்களும் கலவாத தனித்தமிழ் எழுதவேண்டுமென்று நாம் ஒரு பொழுதும் கூறினதில்லை. சம்ஸ்கிருத சொற்களே கலவாத தனித்தமிழில் எல்லோரும் சர்வ சாதாரணமாக தற்காலத்தில் வியாசங்கள் எழுத முடியுமென்று நாம் நினைக்கவில்லை. ஆனால், தமிழ் பாஷை தனிப்பாஷையென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. தமிழர்களுக்கு ஆரியர்களுடன் ஏற்பட்ட நெடுநாட் பழக்கத்தால் எண்ணற்ற சம்ஸ்கிருதச் சொற்கள் கலவாமல் தனித்தமிழில் வியாசங்கள் எளிதில் எழுத முடியுமென்றால் நாம் அப்படி எழுதுவோருக்கு இனாம் கொடுப்பதாக விளம்பரம் செய்வோமா?"

சிவாவின் இக்கருத்தை, இந்நூலாசிரியர் (பெசு. மணி) 1984 இல் பின்வருமாறு விமர்சனம் செய்துள்ளார்.

"மேலே மிகத்தெளிவாகச் சிவாவின் 'தனித்தமிழ்'க் கொள்கையை அறிகிறோம். ஆங்கிலச் சொற்களை தமிழ்நடையில் களைவதே வலியுறுத்தப்பட்டுள்ளது; சம்ஸ்கிருதச் சொற்களையல்ல. இந்த நிலையில் சிவாவின் 'தனித்தமிழ்'க் கொள்கை நிறைவெய்தியதாக அமையவில்லை. மறைமலை அடிகளாரின் தனித்தமிழ் இயக்கம் 1916 இல் சம்ஸ்கிருதச் சொற்களின் ஆதிக்கத்தைத் தமிழ்மொழியில் முற்றிலுமாக எதிர்த்தது என்பதும் இங்கு நினைவிற்குரியது"[36]

சிவாவிடம் வெளிப்பட்ட இந்த முரண்பாடு, ம.பொ.சி.யின் பார்வைக்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வ.உ.சி.யின் பார்வையில்

'தமிழ்ப்பாஷையும் சுதேசமித்திரனும்' எனும் தலைப்பில் சுதேசமித்திரனில் 'பாரதபுத்ரன்' எழுதியதற்கு விரிவாக வ.உ.சி. பதிலளித்து எழுதியது 29-10-1915 இல் சுதேசமித்திரனில் வெளியிடப்பெற்றது. இதில் பின்வரும் வ.உ.சி.யின் கருத்து இங்கு மிகப் பொருத்தமாக அமைகின்றது.

" 'பாரதபுத்ரன்' எழுதிய நிருபத்தின் எட்டாம் உறுப்பில் நம் தமிழ்ப் புலவர்கள் சம்ஸ்கிருதச் சொற்களை உபயோகித்தலைப் பற்றிக் கூறுகிறார். சம்ஸ்கிருதச் சொற்களும் தமிழ்ச் சொற்களும் ஒரு பாஷைச் சொற்களேயென்ற சம்ஸ்கிருத பண்டிதர்களில் ஒரு திறத்தாரும் தமிழ்ப் பண்டிதர்களில் ஒரு திறத்தாரும் கூறுகின்றமையால் அச்சொற்களை அப்பண்டிதர்கள் உபயோகித்தலைப் பற்றிக் குறை கூறுதல் தகுதியன்று. அவ்விரு பாஷைகளும் வெவ்வேறு பாஷை என்று கருதுகின்றவர்கள் முதலில் தமிழ்ப் பாஷையில் ஆங்கிலச் சொற்கள் முதலியவற்றைக் கலந்து எழுதுவதை நம்மவர்கள் நிறுத்துமாறு செய்து பின்னர் (தற்காலத்தில் என் போன்றோர் ஆங்கிலச் சொற்களை உபயோகிக்க வேண்டிய இடங்களில் அவற்றின் பக்கங்களில் அவற்றிற்குரிய ஆங்கிலச் சொற்களையும் உபயோகித்து வருதல் போல சம்ஸ்கிருதச் சொற்களை உபயோகிக்க நேரும் இடங்களில் அவற்றின் தமிழ்மொழி பெயர்ப்புச் சொற்களை அவற்றின் பக்கங்களில் அவற்றிற்குரிய சம்ஸ்கிருதச் சொற்களையும் உபயோகித்து, தற்காலம் நம் தமிழ்நாட்டில் வழங்கிவரும் சம்ஸ்கிருதச் சொற்களுக்கெல்லாம் சரியான தமிழ்ச் சொற்களை நம் தமிழ் மக்களுக்குக் கற்பித்து நாளடைவில் சம்ஸ்கிருதச் சொற்களை

தமிழிலிருந்து வேரோடு களைந்துவிடக் கருதியுள்ளார்கள். இவர்கள் ஒரு பாஷையிற் பிறபாஷைச் சொற்களைக் கலத்தல் அவ்வொரு பாஷைக்குத் தீங்கு இழைத்ததாகுமென்று கருதுகின்றார்கள்.

இலக்கண இலக்கியங்கள் இல்லாத பாஷைகளிற்கூட வேறுபாஷைச் சொற்களை மொழிபெயர்த்தல் கூடுமென்றால், சம்ஸ்கிருதச் சொற்களைத் தமிழில் மொழிபெயர்த்தல் கூடுமென்பது சொல்லாமலே வணங்கத்தக்கது."[37]

'ஞானபாநு'வில் சம்ஸ்கிருதச் சொற்கள் பயன்படுத்தப் பெற்று வந்ததைப் 'பாரதபுத்ரன்' தமது கட்டுரையில் சுட்டிக் காட்டியுள்ளார். இதற்கு வ.உ.சி. பின்வருமாறு பதிலளித்துள்ளார்.

" 'பாரதபுத்ரன்' எழுதிய நிருபத்தின் பத்தாம் உறுப்பு. 'ஞானபாநு' சம்ஸ்கிருத மொழிகளை உபயோகித்து வருகிறதைப் பற்றிக் கூறுகின்றது. 'ஞானபாநு' சம்ஸ்கிருதச் சொற்களைத் தமிழ்ப் பத்திரிகைகள் உபயோகித்தல் கூடாதென்று இன்னும் கூறத் தொடங்கவில்லை. அவ்வாறு அது கூறுமாயின் பின்னர் சம்ஸ்கிருத மொழிகளை உபயோகிக்காதென்றே யான் நம்புகின்றேன்."

'தனித்தமிழ்' என்றால் ஆங்கிலச்சொற்களை மட்டும் விலக்குவதன்று. சம்ஸ்கிருத மொழிச் சொற்களும் விலக்குவதற்குரியன எனும் கொள்கையில் உள்ள நியாயத்தை வ.உ.சி. நயம்பட உரைத்து உணர்த்தியுள்ளது உளங்கொளத்தக்கது.[38]

"மறைமலை அடிகளாரின் தனித்தமிழ்க் கொள்கை" எனும் ஆய்வு நூலில், நூலாசிரியர் புலவர் இரா. இளங்குமரன் வரலாற்றுப் பின்னணியாக எழுதியதில் 'ஞானபாநு'வில் வெளிவந்த 'இனாம் ஐந்து ரூபாய்' விளம்பரம் எடுத்தாளப் பெற்றுள்ளது. ''தனித்தமிழில் அறிக்கை இல்லையென்றாலும், அத்தமிழில் எழுதத் தூண்டல் உள்ளது. 'சம்ஸ்கிருதம்' முதலிய அந்நிய பாஷை' என்ற குறிப்பும் உண்மை எண்ணத் தக்கது'' என்று கூறியுள்ளார். புலவர் இரா. இளங்குமரன் கூட சிவாவின் சம்ஸ்கிருத மொழிக் கலப்பு பற்றிய முழுமையான கருத்தை - மேலே எடுத்துக்காட்டப் பெற்றதை - அறியவில்லை - வ.உ.சி.யின் கருத்தும் அவர் பார்வைக்குக் கிடைக்கவில்லை போலும். எவ்வாறாயினும் தனித்தமிழ் இயக்க வரலாற்றில் மறைமலையடிகளுக்கு முன்பாக பாரதி, சிவா - பாரதபுத்ரன் - வ.உ.சி. நிகழ்த்திய கருத்துப் போர் மிக முக்கியமானதாகும். இது இல்லாமல் எந்த ஆய்வும் நிறைவு பெறாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தமிழும் கலப்படமும்

தமிழில் பிறமொழிக் கலப்பு பற்றிக் குறிப்பாகச் சம்ஸ்கிருத மொழிக் கலப்புப் பற்றி தனிக்கவனம் செலுத்தி ம.பொ.சி.யின் இரு நூல்கள் வெளிவந்துள்ளன. முதலாவதாகத் 'தமிழும் கலப்படமும்', இரண்டாவதாகத் 'தமிழும் சம்ஸ்கிருதமும்' என்பன அவ்விரு நூல்களாகும்.

'தமிழும் கலப்படமும்' 1960-இல் வெளிவந்தது. நூலில் ஆசிரியர் முன்னுரை இல்லை. பதிப்புரை மட்டும் உள்ளது; எழுதியவர் பதிப்பாளர் இன்ப நிலையம் சோம. சுவாமிநாதன். பதிப்புரையில் நூலின் தோற்றம் குறித்துப் பின்வருமாறு கூறப்பெற்றுள்ளது.

"தமிழில் பிறமொழிச் சொற்கள் வரம்பின்றிக் கலக்கத்தான் வேண்டும். அது முத்தும் பவளமும் கலந்தது போல் இருக்குமென்று சிலர் கூறுகின்றனர். தமிழில் பிற மொழிச் சொற்கள் கலக்கவே கூடாது. அது தமிழை உருக்குலைத்து விடும். தமிழின் தனிமையை - தூய்மையைக் காக்க வேண்டும் என்கின்றனர் சிலர். மேற்கண்ட இரு சாராரின் கூற்றிலும் இருக்கும் உள்நோக்கங்களையும், அதனால் ஏற்படும் நன்மை - தீமைகளையும் விளக்கித் திரு. ம.பொ.சி. அவர்கள் 'செங்கோல்' வார இதழில் "தமிழும் கலப்படமும்" என்ற தொடர் கட்டுரையை எழுதி வந்தார்கள்."

இந்த நூலின் தோற்றம் குறித்து ம.பொ.சி., 1984 இல் வெளிவந்த 'தமிழும் சம்ஸ்கிருதமும்' எனும் நூலின் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'இந்தியாவில் புராதன மொழிகளான தமிழ், சம்ஸ்கிருத மொழிகளிடையில் பூசல்கள் நீடிப்பதானது, இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டிற்குக் கேடிழைத்து வருகிறது. ஆகவே, தமிழ் - சம்ஸ்கிருதமொழிகளைப் பற்றித் தமிழரிடைய நிலவி வரும் தவறான எண்ணங்களைப் போக்குவதற்கான நூல் ஒன்றை எழுதித் தமிழர் கைகளிலே தர வேண்டுமென்ற எண்ணம் எனக்கு நீண்ட காலமாக இருந்து வந்தது. அதன் விளைவாக, 1960 இல் 'தமிழும் கலப்படமும்' என்னும் நூலை எழுதி வெளியிட்டேன்".

இந்நூலில் ம.பொ.சி. கலப்பு வேறு, கலப்படம் வேறு என்பதைப் பின்வருமாறு தெளிவுபடுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

"கலப்பு வேறு; கலப்படம் வேறு. கலக்கப்படும் பொருளின் அசல் தன்மையை அழிப்பது கலப்படம். அதுபோலவே தமிழின்

தனித்தன்மையை அழிக்கும் வகையிலோ அல்லது அந்த மொழிக்கே உரிய அழகைக் குறிக்கும் வகையிலோ பிறமொழிச் சொற்களைத் திணிப்பது கலப்படம் தான். அந்தக் கலப்படத்திற்கு நான் எதிரி - ஆனால், தமிழின் வளர்ச்சியைக் கருதி, தமிழ் மக்களின் வாழ்க்கை நலனை ஒட்டி, தமிழின் தனித்தன்மையையும் அழகையும் கெடுக்காமல், பிறமொழிச் சொற்களை வரவேற்பதில் தவறில்லை; வரவேற்கவும் வேண்டும்."

வாழும் மொழியில், பல்வேறு இன, சமூக, சமய உறவுகள் ஊடாடும் பொழுது 'கலப்பு'த் தவிர்க்க முடியாதது என்பதை அறிந்த ம.பொ.சி., 'கலப்படம்', தமிழின் தனித்தன்மையை அழித்து விட அனுமதிக்கக் கூடாது என்பதில் மிக்க உறுதி காட்டினார்.

'தனித்தமிழ்' தோன்றக் காரணம் பற்றி அவர் விளக்குமிடத்தில் 'மணிப்பிரவாள' மொழி கலப்படமாக ஊடுருவி விளைவித்த கேடுகளைச் சாடாமல் விடவில்லை. அவர் விளக்கமாக விரிவாகக் கூறியதாவது:

"தமிழ் மொழியில் போதிய அன்பில்லாமையாலோ, அல்லது வடமொழியில் அதிக அளவு பற்று வைத்திருந்ததாலோ, தமிழை வடமொழி மயமாக்கிவிட முயன்றனர் வைதிகர்கள்! அன்னார், மிகுதியும் சம்ஸ்கிருதச் சொற்களைப் பெய்தும், கிரந்த எழுத்துக்களைக் கலந்தும் எழுதிய கலப்படத்துக்கு 'மணிப்பிரவாளம்' என்னும் பெயர் வைத்தனர். இந்தப் 'புண்ணியவான்கள்' தான் 'தனித்தமிழ்'க் கிளர்ச்சி தோன்றக் காரணமாயினர். இது பற்றிப் பரிதிமாற் கலைஞர் கூறுவதைப் பார்ப்போம்.

சைனர், ஆரியரது ஆச்சாரங்களுட் பலவற்றை மேற்கொண்டனர்.. வடமொழியின் பதங்களையும் அவற்றினிலக்கணங் களையும் நன்குணர்ந்து கொண்டனர். இத்தகைய சைனப் புலவர்கள் தமிழ் மொழிய்யும் அப்பியசிக்கப் புகுந்து, தமிழின் கண்ணே அளவிறந்த வடசொற்களையேற்றினர். அத்துணையோடமையாது 'மணிப்பிரவாளம்' என்றதோர் புதிய பாஷையை வகுத்து விட்டனர். அஃதாவது தென்மொழியும், வடமொழியும் சரிக்குச் சரி கலந்த பாஷையாம். மணியும், பவளமும் கலந்து கோத்ததோர் மாலை காட்சிக்கின்பம் பயத்தல் போலத் தமிழுஞ் சம்ஸ்கிருதமுங் கலந்த பாஷை கேள்விக்கின்பம் பயக்கும் போலி எண்ணம் இத்தகைய ஆபாச பாஷையொன்று வகுக்குமாறு தூண்டிற்று. 'ஸ்ரீபுராணம்' என்னும் சைன நூல் முழுவதும் மணிப்பிரவாள மென்னும் இவ்வாபாச நடையின் இயன்றதாமாறு காண்க. மற்றொரு புறத்தில்

ஆரியப் புலவர் சிலர் தமிழ்மொழியை அப்பியசித்துக் கொண்டு, நீதி மார்க்கத்தையும் சமய சாஸ்திரங்களையும் தமிழர்க்குப் போதிப்போ மெனப் புகுந்து, தமது கருத்துகளையெல்லாம் மேற்கூறிய மணிப்பிரவாள பாஷையில் வெளிப்படுத்துரைப்பாராயினர் என்று கூறுகிறார் சாஸ்திரியார். இவர் வடமொழியிடம் காழ்ப்பற்றவர். தேவைப்படுமிடத்து, வடமொழிச் சொற்கள் இலக்கண வரம்புகளுக்கு உட்பட்டுத் தம் தாய்மொழியில் கலப்பதை வரவேற்பவர் என்றாலும் - தமிழின் தனித்தன்மையை அழிக்க முயன்ற கலப்படங்களின் நாச வேலையை அவர் வெறுத்தார். 'மணிப்பிரவாள' மொழியைத் தோற்றுவித்தோர் தமிழின் மீது கொண்ட பகைமையால் அப்படிச் செய்தார்கள் என்று சொல்லுவதற்கில்லை. அன்னாரின் வைதீக மதப் பற்றே அதற்குக் காரணமாக இருக்க வேண்டும். காரணம் எதுவாயினும், தமிழருடைய நெஞ்சங்களிலே வடமொழி மீது வஞ்சம் வளருவதற்கும், 'தனித்தமிழ்'க் கிளர்ச்சி தோன்றுவதற்கும் 'மணிப்பிரவாள மொழியே காரணமானதை மறைப்பதற்கில்லை."[39]

1856 இல் கால்டுவெல் பாதிரியாரின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (A Comparative Grammar of the Dravidian Languages) என்ற அற்புதமான ஒப்பாய்வு நூல்" சம்ஸ்கிருதத் துணை வேண்டாத் திராவிடத் தனித்தன்மை"யை நிறுவித் தனித் தமிழ் இயக்கத்திற்கு வழி காட்டியது.

"திராவிட மொழிக் கூட்டத்தைப் பற்றியும் அதன் தொன்மையைப் பற்றியும் அது வடமொழியினின்றும் முற்றிலும் வேறுபட்டிருப்பதைப் பற்றியும் கால்டுவெல் கூறியவையே சுந்தரம் பிள்ளையின் நோக்குக்கும் வாக்குக்கும் மூலமாயின. அது மட்டுமல்ல; மொழியியற் கருத்துகளினூடே அவற்றுக்குப் புறம்பான சமூகக் கருத்துகளும் கால்டுவெல் பாதிரியாராற் கூறப்பட்டன. அவற்றுள் ஒன்று பார்ப்பனர் பால் காழ்ப்பு. இது ஊன்றிக் கவனிக்க வேண்டியது; 'விஞ்ஞான' அடிப்படையில் அமைந்த பல கூற்றுக்கள் எளிமை நயமுடைய வகையிலே, தீமை விளைவிக்கத் தக்க கருத்துகளையும் உடன் கலந்தூட்டி விடுகின்றன என்பதற்குக் கால்டுவெல் பாதிரியாரது நூல் சிறந்த எடுத்துக்காட்டு"[40] இவ்வாறு பேராசிரியர் கலாநிதி க. கைலாசபதி சம்ஸ்கிருத வெறுப்பில் சாதிய வெறுப்பும் இணைந்த ஒரு போக்கைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

தனித்தமிழ் உணர்வு பிராமண எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்டிருந்தமை பற்றிப் பேராசிரியர் கா. சிவத்தம்பி விரிவாகத்

'தனித்தமிழ் இயக்கத்தின் அரசியல் அடிப்படைகள்' எனும் அவருடைய நூலில் (1970) ஆய்வு செய்துள்ளார்.

மேலே பேராசிரியர் கைலாசபதி எடுத்துக்காட்டியதைப் போல, ம.பொ.சி.யும் சற்று வித்தியாசமாக, 'முற்றிலும் மொழி சம்பந்தப்பட்ட இந்தப் பிரச்சினையில் கட்சி உணர்ச்சியையும், நாத்திகப் புத்தியையும் கலப்பதற்கு அனுமதிக்காமல் இருப்போமாக" என்று குறிப்பிட்டுள்ளார்.

'பரிதிமாற் கலைஞர்' வி.கோ.சூ., மனோன்மணியம் சுந்தரனார் இருவரின் மொழிக்கொள்கையை ஆய்வு செய்து, "இருவரும் தமிழ் தனித்தியங்கும் உயர்தனிச் செம்மொழி என்ற உண்மையை வலியுறுத்தியதன்றி, தமிழில் பிறமொழிச் சொற்கள் தேவையை முன்னிட்டுக் கலக்கக்கூடாதென்று கூறினாரிலர்'' எனும் தமது முடிவையும் குறிப்பிட்டுள்ளார் ம.பொ.சி.

## மதமும் மொழியும்

கலப்பு - கலப்படம் பற்றிய ஆய்வில் ம.பொ.சி., 'மதமும் மொழியும்' எனும் நோக்கிலும் ஆய்வு செய்துள்ளார். இந்த நோக்கில் தனித்தமிழ்க் கட்சியினர் பார்க்கவில்லை என்பதையும் பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

''பேசும் மொழிவழிபட்ட இனம் வேறு; தெய்வமாக வழிபட்ட மதம் வேறு. ஒவ்வொரு மதமும் பல்வேறு மொழிகளைப் பேசும் வெவ்வேறு இனங்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கின்றன. அதனால் மத வழிபட்ட பொதுமொழி ஒன்றையும், ஒவ்வொரு மதமும் பெற்றிருக்கின்றது. இஸ்லாமியருக்கு அரபும், கிறிஸ்தவருக்கு லத்தீனும் மதமொழிகளாக உள்ளது போல, இந்துக்களுக்குச் சம்ஸ்கிருதம் மத மொழியாக இருக்கிறது. இந்த உண்மையைத் தனித்தமிழ்க் கட்சியார் மறந்து விடுகின்றனர்".

மதமும் மொழியும் எனும் நோக்கில் பார்க்கும் பொழுது 'கலப்புத் தவிர்க்க முடியாது' என்பதையும் பின்வருமாறு விளக்கியுள்ளார் ம.பொ.சி.

'இஸ்லாமியத் தமிழர்களால் இயற்றப்படும் சமய நூல்களில் அரபுச் சொற்கள் கலப்பது போலவும், கிறிஸ்தவத் தமிழர்களிடையே லத்தீன் அல்லது ஆங்கிலச் சொற்கள் வழங்கப்படுவது போலவும், இந்துத் தமிழரிடையே தோன்றும் சமய நூல்களில் வடமொழிச் சொற்கள் கலந்து விடுகின்றன. மதத்தில் ஆழ்ந்த பற்றுடையவர்கள்

இதைக் குற்றமாகவோ அல்லது குறையாகவோ கருதாதது இயற்கை. தனித்தமிழ்க் கட்சியின் தலைவர் எனப்படும் மறைமலையடிகளார் கூட சமயச் சம்பந்தமான கலைச்சொற்களை வடமொழியிலுள்ள படியோ அல்லது தமிழ் இலக்கண வழியில் திருத்தியோ கையாண்டுள்ளது கவனிக்கத்தக்கதாகும்.

"பொதுவாக, தமிழகத்தைத் தாயகமாகக் கொண்டு வாழும் தமிழர்களாயுள்ள இந்துப் புரோகிதர்களோ, இஸ்லாமிய மௌல்விகளோ, கிறிஸ்தவப் பாதிரிகளோ, தமிழை வெறுப்பவர்களல்ல. அன்னாளில் தமிழின் வளர்ச்சிக்குப் பணியாற்றியுள்ள அறிஞர் பெருமக்கள் பலருண்டு. அவர்கள் சம்ஸ்கிருதம், அரபு, லத்தீன் ஆகிய மொழிகளில் உள்ள வேத, ஆகம நூல்களிடம் பற்றும் பக்தியும் வைத்திருப்பதற்குக் காரணம், அவை சமய நூல்கள் என்பதேயாகும். மற்றபடி தமிழின்பால் உள்ள வெறுப்போ, தாங்கள் தமிழரல்லர் என்ற உணர்வோ காரணமன்று".

இந்தக் கண்ணோட்டத்தில் தமது ஆய்வை வளர்த்தெடுத்துச் செல்லும் பொழுது ம.பொ.சி. பின்வரும் கருத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

"இந்த உண்மையை உணராமல், தமிழகத்திலுள்ள இஸ்லாமியரையும், கிறிஸ்தவரையும் தமிழ் இனத்திற்குப் புறம்பானவராகப் பிரித்து வைத்து விட்டுத் 'தனித்தமிழ்க்கட்சி' பேசுவது இனவரலாற்றுக்குப் பொருந்தாத வாதமாகும். அரபு, உருது, லத்தீன், ஆங்கில மொழிகளின் கலப்படங்களை மறந்து, வடமொழிக் கலப்பு ஒன்றை மட்டுமே வெறுப்பதும் நேர்மையான செயலன்று. பொதுவாக, எந்த ஒரு மொழியிலும், தமிழகத்தில் வாழும் மக்களிலே எந்த ஒரு மதத்தார் அல்லது வகுப்பார் மீதும் வெறுப்பின்றி, இந்தப் பிரச்சினையை ஆராய வேண்டுமென்பதைத் திரும்பவும் வலியுறுத்துகிறேன்".

மொழி, இனம், மதம் இவற்றிடையே உள்ள சமூக உறவுகள் பற்றிய ஆய்விலே ஆழங்கால் பட்ட ம.பொ.சி. "தமிழகத்தில் பிறமொழியினர்" எனும் அரும்பெரும் வரலாற்றாய்விலும் வெளிப்படுத்தியுள்ள பின்வரும் விளக்கமும் இங்கு இணைத்துச் சிந்திப்பதற்குரியது.

"இனம் வேறு; மதம் வேறு. இவை ஒன்றுக்கொன்று விரோதமானவையல்ல. ஆகவே, மதத்தை மறுத்துப் போர் செய்வதற்கு இனத்தையே கேடயமாக்க வேண்டாம். கடவுள் உண்மையை

மறுப்பதும், மதத்தின் தேவையைப் புறக்கணிப்பதும் அறிவியக்கமாக இருக்கலாம்; இருக்கட்டும். ஆனால் தமிழர் இனவழிப்பட்ட இயக்கமாக அது இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. தெய்வத்தை நிந்திப்பதைத் தமிழ் இனவழி இயக்கமாக ஏற்பதற்கில்லை; ஏற்பது தமிழினத்துக்கே கேடு செய்வதாகும்".

"தனித்தமிழ்க் கட்சியினரில் சிலர், சமய நம்பிக்கை இல்லாதவர்கள் - ஏன்? தெய்வ நம்பிக்கையும் அற்றவர்கள் அவர்கள் கொண்டுள்ள வடமொழிப் பகைமை, நாத்திக உணர்வின் எதிரொலியே" என்று ம.பொ.சி. சாற்றியுள்ளதில் 'நாத்திக உணர்வைக் குறித்துச் சற்று மிகைப்படுத்துதல் இருக்கின்றதே என ஐயமுறுவோர் ம.பொ.சி.யின் 'மதமும் மொழியும்' எனும் அணுகுமுறையின் சாராம்சத்தை உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

'தமிழினமே ஒன்றுபடு' எனும் முழக்கத்தைத் தமிழ் முரசொலியாக ஒலிக்கச் செய்த ம.பொ.சி., இந்த நோக்கிலும் தூயதமிழ்க் கொள்கையைக் குறித்துப் பின்வருமாறு உணர்த்தியுள்ளார்.

"தூய தமிழிலே எனக்குப் பற்றுண்டு. ஆயினும், அதை விடவும் தமிழினத்தாரின் ஒற்றுமையை நான் முக்கியமாகக் கருதுகிறேன். ஆகவே, இந்து (பிராமணர்) - இஸ்லாம் - கிறித்தவத் தமிழர் தூய தமிழில் ஆர்வம் காட்டியதைச் சகித்துக் கொண்டு, தமிழினத்தாரிடையே ஒற்றுமையைக் கட்டி வளர்க்கவே நான் அவசரப்படுகிறேன்."[42]

"பிறமொழி பகைமை என்னும் நஞ்சை எருவாக்கித் தமிழ்ப் பயிரை வளர்க்க முயன்றால் அது வளராது" என்பார் ம.பொ.சி. அதே சமயத்தில் எந்த ஒரு மொழியின் ஆதிக்கத்தை எந்த வடிவிலும் எதிர்த்தவர் ம.பொ.சி. மொழிப்பற்று, மொழிப்பகைமை குறித்த அவரின் நடுநிலைமைக் கண்ணோட்டம் அவருடைய எழுத்திலும் பேச்சிலும் பரந்துள்ளது.

இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டுணர்வு நோக்கிலும் ம.பொ.சி. பிறமொழி வெறுப்பகன்ற தமிழ் மொழிப்பற்றையும் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

"இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டின் அவசியம் கருதியும் நான் சம்ஸ்கிருதத்தை வெறுக்க மறுக்கிறேன். அதுபோல, உலக ரீதியான ஒருமைப்பாட்டைக் கருதித் தமிழ்நாட்டு முஸ்லீம்கள் தங்கள் மதவழிப்பட்ட அரபு மொழியினிடத்தும், கிறித்தவத் தமிழர்கள் தங்கள் மதவழிப்பட்ட லத்தீன் மொழியினிடத்தும் பற்றுக்

கொண்டிருப்பதை நான் மதிக்கிறேன். இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டுக்கோ, உலக ஒருமைப்பாட்டுக்கோ ஆதரவு அளிக்க விரும்பாதவர்களின் நிலைவேறு".[43]

கிரந்த எழுத்துகளுக்குப் பதிலாக தமிழ் எழுத்துகளைப் பயன்படுத்துவதில் தவறில்லையென்றாலும் ஒலியின்பழும், பொருளும் கெடாத வகையில் செய்ய வேண்டும் என்பதும் அவருடைய மொழியுணர்வின் ஒரு கூறாகும். "கிரந்த எழுத்துக்கள் மிகக் குறைந்த அளவில்தான் தேவைப்படுகின்றன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழிற் புலமையுடையோர் இந்த எழுத்துக்களின் தேவையை வெகுவாகக் குறைத்து விட முடியும்" என்று ம.பொ.சி. கூறியுள்ளார்.

"தமிழுக்குரிய "உயர்தனிச் செம்மொழி" என்ற பெருமையை முடிந்தவரை காக்க வேண்டும் என்பதில் யாரொடும் எனக்குக் கருத்து வேற்றுமை இல்லை. ஆனால் பிறமொழிச் சொற்களே தமிழில் கலக்கக் கூடாதென்று கூறுவது தமிழின் வளர்ச்சிக்குத் தடை போடுவதாகும்" என்று ம.பொ.சி. தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

'தமிழும் கலப்படமும்' எனும் நூல் "போதுமானதல்ல" என்று கருதித் "தமிழும் சம்ஸ்கிருதமும்" எனும் நூலை ம.பொ.சி. எழுதினார். இது, 1984 இல் வெளிவந்தது. இவ்விரண்டு நூலையும் இணைத்துப் படித்தால் தமிழ் - சம்ஸ்கிருத உறவு பற்றிய ம.பொ.சி.யின் கருத்தை முழுமையாகத் தெரிந்து கொள்ள முடியும் என்று அவரே குறிப்பிட்டுள்ளார்.[44]

தமிழ் - சம்ஸ்கிருத உறவு எவ்வாறு பேணப்படவேண்டும் என்று ம.பொ.சி. இந்நூலில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"சம்ஸ்கிருத மொழியில் புலமையுடையவர்களிலே சிலர் புலமை இல்லாமலேயே கூட, அம்மொழியிடத்துப் பற்றுக் கொண்டவர்களாக வெளிக்குக் காட்டிக் கொள்பவர்கள் சம்ஸ்கிருதம் ஒன்றுதான் தெய்வமொழி என்றும், தமிழ் உள்ளிட்ட மற்ற மொழிகள் எல்லாம் மானுட மொழிகள் என்றும் கூறி, தமிழ்ப்புலவர்களுக்கு - புலமையில்லா விட்டாலும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு - வருத்தத்தை ஏற்படுத்துகின்றனர். மனதைப் புண்படுத்துகின்றனர் என்றும் சொல்லலாம். இது தேவையற்றவாதம். . . . .

"சம்ஸ்கிருதத்தைத் தேவ மொழியாக ஏற்கும் போது நம் தாய்மொழியான தமிழை வெறும் மானுட மொழிதான் என்று

வாதிடுபவரை மறப்பதோ, மன்னிப்பதோ சாத்தியமில்லை.... சம்ஸ்கிருதத்தில் பற்றுடையவர்களுக்கும் தமிழ் தாய்மொழியாக இருக்குமானால் அத்தகையவர்கள் தமிழைத் தாழ்த்தி சம்ஸ்கிருதத்தை உயர்த்த முயல்வது முறையோ நெறியோ ஆகாது. அதுபோல, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் மதத்தால் இந்துக்களாக இருப்பார்களானால் - அவர்களுக்கு இந்து மதத்தில் பற்றும் இருந்து விடுமானால், அத்தகையவர்கள் தங்கள் வேத மொழியான சம்ஸ்கிருதத்தை வெறுப்பது முறையோ நெறியோ ஆகாது"[45]

## ஆங்கிலமொழி ஆதிக்கத்திற்கு எதிர்ப்பு

இந்தியாவில் ஆங்கிலம் புகுந்ததும், அது ஆதிக்க சக்தியாக வளர்ந்ததும், இந்திய மொழிகளை அடிமைப்படுத்தியதும், ஆங்கிலக் கல்வி வழியே மேல்தட்டு வர்க்கத்தில் எழுந்த நவீனத்துவமும், புதிய விழிப்பும் தனிப்பெரும் ஆய்விற்குரியது.

1600 டிசம்பர் 31 இல் லண்டனில் 80 வர்த்தகர்கள் உருவாக்கிய பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி எனும் நிறுவனத்திற்கு அக்காலத்தில் பிரிட்டனை ஆண்ட எலிசபெத் மகாராணி உரிமைச் சாசனம் வழங்கினார். இந்தக் கம்பெனி 1612 இல் இந்தியாவில் வந்திறங்கியது. வர்த்தகக் கோட்டைகளை அமைத்தவர்கள் பல வரலாற்றுக் காரணங்களால் இந்தியாவின் பல பாகங்களில் ஆட்சியுரிமைப் பெற்றார்கள்.

பிரிட்டிஷ் நாடாளுமன்றம் கி.பி. 1813 இல் நிறைவேற்றிய பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனிக் கட்டுப்பாட்டுச் சட்டப்படி, இந்தியர்களின் கல்விக்காக ஒரு லட்ச ரூபாயை ஒதுக்க வேண்டுமென்ற விதி இருந்தது. சில ஆண்டுகள் இந்த நிதி பயன்படுத்தப்படாமல் இருந்தது.

1823 இல் கல்கத்தாவில் (அன்றைய கம்பெனி ஆட்சியின் தலைமையிடம்) அரசு, சம்ஸ்கிருதக் கல்விக்கு முன்பு ஒதுக்கப்பெற்ற தொகையைச் செலவிடக் 'கம்பெனி' அதிகாரிகள் விரும்பினர். 1823 இல் கல்கத்தாவில் பாரம்பரியக் கல்விக்காகக் 'கம்பெனி' நிறுவிய கல்லூரியில் ஐரோப்பிய விஞ்ஞானத்தையும், ஆங்கில மொழியையும் கற்பிக்க வேண்டுமென்று வங்காளிகளில் சிலர் கோரிக்கை விடுத்தனர். இந்தியப் புத்தெழுச்சியின் விடிவெள்ளியாக வரலாற்றுப் பாத்திரத்தை ஏற்ற ராஜாராம் மோகன்ராய் (1772 - 1883) கவர்னர் ஜெனரல் ஆம்ஹர்ஸ்ட் பிரபுவிற்கு 11-12-1823 இல் எழுதிய கடிதத்தில் பாரம்பரியக் கல்வி ஊடகங்களை விலக்கிக் கொண்டு நவீன

விஞ்ஞானக்கல்வி முறையை வலியுறுத்தினார். அவருடைய கடிதத்தின் ஒரு பகுதி வருமாறு:

"இந்திய குடிமக்களுக்குக் கல்வி கற்பிக்க இங்கிலாந்து அரசு ஆண்டுதோறும் குறிப்பிட்ட ஒரு தொகையை ஒதுக்கியிருப்பதாக அறிகிறோம். இந்தத் தொகை இந்தியக் குடிமக்களுக்கு, தக்க கல்வியறிவும் ஆற்றலும் கொண்ட ஐரோப்பியர்களை வேலைக்கு அமர்த்தி, கணக்கு, இயற்கை மெய்யறிவியல், வேதியியல், உள்ளமைப்பியல் (Anatomy) மற்றும் பயனுள்ள விஞ்ஞானப் பாடங்களைக் கற்பிக்கப் பயன்படுத்தப்படும் என்று நம்புகிறோம்."[46]

பாரம்பரியக் கல்வி முறையான சம்ஸ்கிருதக் கல்வி தேவையில்லையெனிலும், அதை நீடிக்கச் செய்தால் அந்த வழிமுறை இந்தியாவை அறியாமை இருளிலேயே நிறுத்திவிடும் என விளக்கியுள்ளார், தமது கடிதத்தில் இங்கிலாந்தில் பிரான்ஸிஸ்பேகன் (1561 - 1626) எவ்வாறு, இடைக்காலத்தில் நிலவிய தத்துவ சமய நுணுக்கக் கல்வி முறையை எதிர்த்து விஞ்ஞான கல்விமுறைக்கு வழிவகுத்தானோ, அவ்வாறு இந்தியாவிலும் வழி வகுக்க முன்வர வேண்டும் என்றும் தமது கடிதத்தில் குறிப்பிட்டார், ராஜாராம் மோகன்ராய். கவர்னர் ஜெனரல் ராஜாராம் மோகன்ராயின் வேண்டுகோளை ஏற்கவில்லை.

## மெக்காலேயின் கல்விக் குறிப்புகள் – 1835

முற்கூறிய கம்பெனியின் நிதி ஒதுக்கீட்டை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை முடிவு செய்ய ஆட்சியின் கல்வித்துறை இயக்குநர் ஒரு குழுவை அமைத்தார். அரபு, சம்ஸ்கிருதக் கல்வி முறைக்குச் சரிபாதி உறுப்பினர்களும், மற்ற சரிபாதி உறுப்பினர்கள் ஆங்கிலத்திற்கும் ஆதரவு தெரிவித்தனர். குழுவின் தலைவரான மெக்காலே இருதரப்பு வாதங்களையும் கேட்டுத் தமது முடிவை 1835 இல் சமர்ப்பித்தார். இந்த முடிவு மெக்காலே கல்விக் குறிப்புகள்" என்று வரலாற்றில் புகழ் பெற்றது. இந்தக் குறிப்புகளில் ஒரு பகுதி, வருமாறு:

"கீழை நாட்டு மொழிகளில் உள்ள இந்திய, அராபிய இலக்கியங்கள் அவ்வளவும் ஐரோப்பிய மொழியில் உள்ள ஒரு நூலகத்தில் சிறு அடுக்கிற்குக் கூட காணாது. மேற்கு ஐரோப்பிய மொழிகள், ரஷ்யாவையும், தாத்தாரிய இன மக்களையும் நாகரீகப் படுத்தியது போல ஆங்கிலம் இந்திய மக்களை நாகரீகப்படுத்தும்.

"நமக்குள்ள சாதனங்களை வைத்துக் கொண்டு வெகுஜனக் கல்வி கற்பிக்க முடியாது. தற்சமயம் நமக்கும் நம் ஆட்சிக்கும் உட்பட்டுள்ள கோடிக்கணக்கானவர்களுக்கும் இடையே மொழிபெயர்ப்பாளர்களாக ஒரு புதிய வர்க்கத்தைச் சிருஷ்டி செய்யலாம். அந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் நிறத்தாலும், இரத்தத்தாலும் இந்தியர்களாவும், அறிவு, விருப்பங்கள், அபிப்பிராயங்கள் நியதிகளில் ஆங்கிலேயர்களாகவும் இருப்பார்கள்.

"ஆங்கிலம் படித்த அந்த வர்க்கம் தங்கள் பிரதேச மொழிகளைச் செம்மைப்படுத்தி மேலை நாட்டுத் தொடர்பால் கடன் பெற்ற விஞ்ஞானச் சொற்களைப் பயன்படுத்தி மாபெரும் ஜன சமுதாயம் முழுமைக்கும் அறிவு புகட்டத் தகுதியான சாதனங்களாக மொழிகளை உருவாக்கும்."[47]

மெக்காலேயின் கல்விக்குறிப்புகளை அதிகார வர்க்கத்தினரின் சார்பில் கவர்னர் ஜெனரல் பெண்டிங்கு பிரபு ஏற்றுக் கொண்டார். "ஐரோப்பிய இலக்கியங்களையும் விஞ்ஞானக் கல்வியையும் இந்திய மக்களிடையே பரவச் செய்வதுதான் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாயிருத்தல் வேண்டும். கல்வித் துறைக்கென ஒதுக்கீடு செய்யப்படும் நிதி முழுவதும் ஆங்கிலக் கல்விக்கு மாத்திரமே உபயோகப்படுத்தப்பட வேண்டும்" என்று பெண்டிங்பிரபுவின் பிரகடனம் குறிப்பிட்டது.

1837இல் இந்திய மொழிகள், பாரசீக மொழியை நீதிமன்றங்களில் இருந்து வெளியேற்றியது. உயர்நீதி மன்றங்களின் நடவடிக்கைகள் ஆங்கிலத்திலும், கீழ் மட்ட நீதிமன்ற நடவடிக்கைகள் இந்திய மொழிகளிலும் நடைபெற்றன.

மெக்காலே பரிந்துரையின் அடிப்படையில் உருவாக்கப் பெற்ற கல்விக் கொள்கை நடைமுறையில் கொண்டு வரப்படவில்லை.

1854 இல் கம்பெனியின் நிருவாக போர்டின் தலைவராக இருந்த சார்லஸ்உட் என்பவர் உருவாக்கிய கல்வி அறிக்கை நடைமுறைக்கு வந்தது. இதன் விளைவாக ஆரம்பப் பள்ளிகளில் தாய்மொழி பயிற்று மொழியாகவும் தீர்மானிக்கப்பட்டது. கல்கத்தா, பம்பாய், சென்னை நகரங்களில் பல்கலைக்கழகங்கள் நிறுவப் பெற்றன.

ஆங்கிலக்கல்வி, மேலைநாட்டு பன்முகப்பட்ட சிந்தனைப் போக்குகள் இந்தியாவை நவீனத்துவப் பாதையில் கொண்டு செலுத்த ஒரு காரணமாக அமைந்தது. அதே சமயத்தில் அது ஆதிக்க சக்தியாக

விசுவரூமெடுத்தது. 1874 இல் புகழ்பெற்ற மராட்டிய எழுத்தாளரான விஷ்ணு கிருஷ்ண சிப்லங்கர் (1850 - 1882) என்பவர் தமது 'அமாச்ய தேஷாச் சிஸ்திதி' (நமது தேசத்தின் நிலைமை) எனும் நூலில் பிரிட்டிஷ் ஆட்சியை "ஆங்கிலக் கவிதை"யாக உருவகப்படுத்தி, "நமது சுதந்திரம் ஆங்கிலக் கவிதையால் நசுக்குண்டு அழிவுற்றது" என்று கூறியுள்ளார். ஆனால் அதே சமயத்தில் "ஆங்கிலக் கல்வியறிவு இல்லாமற் போயிருந்தால் நமது தேசம் பின் தங்கி இருக்கும், அது பரவும் பொழுது முன்னேற்றம், சுதந்திரம், மகிழ்ச்சி முதலானவை நிச்சயமாகப் பரவும்" என்றும் கூறியுள்ளார்.[48]

இந்தியத் தேசிய காங்கிரஸ் 72 ஆங்கிலப் பட்டதாரிகளைக் கொண்டு 1885இல் பம்பாயில் தோன்றியதைப் பற்றி மகாகவி பாரதியார் எழுதிய பின்வரும் வரிகள் ஆங்கில மொழி இந்திய அரசியல்வாதிகளிடம் பெற்ற ஏற்றத்தை விளக்க வல்லன.

'டிஸம்பர் 28ஆம் தேதியன்று முதற்கூட்டம் கூடிற்று. வெற்றி! பாரத ஜாதி பேசத் தொடங்கிற்று. அப்பேச்சின் முதல் உச்சாரணங்கள் அன்னிய பாஷையிலே செய்யப்பட்டன. விதியின் ரஹஸ்யங்களை உணர்தல் மிகவும் அரியதன்றோ!"[49]

திலகர் சகாப்த, காந்தி சகாப்த காங்கிரசில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பில் சுதேச மொழிகள் பற்றிய ஆதரவும் கிளர்ச்சிகளும் தோன்றி வளர்ந்தன.

"சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாதாரணப் பொது மக்கள் ஆங்கிலச் சாதியாரின் ஆதிக்கத்தால் தங்களுக்கு .ஏற்பட்ட கேடுகளை அறிந்து கொண்டது போல ஆங்கில'மொழியின் ஆதிக்கத்தால் தங்களுக்கு விளையும் கேடுகளைத் தெரிந்து கொள்ளவில்லை. ஆம், தெரிவிக்கவில்லை படித்த தலைவர்கள்". இவ்வாறு ம.பொ.சி. தமது 'தமிழா, ஆங்கிலமா?' எனும் நூலில் (1961) சுட்டிக்காட்டியுள்ளார்.

மொழியுணர்வு, இனவுணர்வு இரண்டையும் இந்திய ஒருமைப்பாட்டிற்கு எதிராகப் பயன்படுத்துவதை வன்மையாக எதிர்த்துப் போராடிய ம.பொ.சி. அவ்விருவுணர்வுகளும் ஆங்கிலமொழி ஆதிக்க எதிர்ப்பிற்குத் தமிழகத்தில் பயன்படுத்தப் படாமல் இருந்த சூழலில் 'தமிழா ஆங்கிலமா?' எனும் கேள்வியை எழுப்பி எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்னும் முழக்கத்தை எழுப்பி ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தைத் தமிழரசுக் கழக இயக்கப் போராட்டங்களில் ஒன்றாகத் தொடங்கியவர் ம.பொ.சி.

காந்தியடிகள், பாரதியார் வகுத்தளித்த ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் பாதையில் பீடுநடை போட்ட தமது மொழிப் போர் வரலாற்றை எழுத்திலும் பேச்சிலும் பதிவு செய்துள்ளார். "காந்தியடிகள் இந்திய அரசியலில் தலைமை தாங்கத் தொடங்கிய போதே ஆங்கில ஆதிக்க எதிர்ப்புணர்ச்சி இந்திய விடுதலை இயக்கத்தின் ஒரு அங்கமாகிவிட்டது." மேலும் தமிழரசுக்கழகத்தின் எந்த இயக்கப் பிரச்சாரத்திற்கும் நூல்களைப் படைத்தளிப்பதில் ம.பொ.சி. முன் நின்றார். ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் பிரச்சாரத்திற்காக ம.பொ.சி. பின்வரும் எட்டு நூல்களைப் படைத்துள்ளார்.

1. தமிழா ஆங்கிலமா? - 1961
2. காந்தியடிகளும் ஆங்கிலமும் - 1961
3. பாரதியும் ஆங்கிலமும் - 1961
4. இன்பத் தமிழா இந்தி - ஆங்கிலமா? - 1963
5. ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு வரலாறு - 1964
6. மொழிச் சிக்கலும் மாநில சுயாட்சியும் - 1968
7. கல்வி மொழி தமிழா, ஆங்கிலமா? - 1981
8. ஆங்கிலம் வளர்த்த மூடநம்பிக்கை - 1982

'தமிழும் கலப்படமும்' எனும் நூலிலேயே (1960) "ஆங்கில மோகம் ஏன்?" எனும் தலைப்பில் தனி அத்தியாயத்தை எழுதியுள்ளார், ம.பொ.சி. "ஆங்கில மோகம்" அங்கிங்கு எனாதபடி எங்கும்' தலை விரித்தாடியதைக் கண்டு மனம் மிக நொந்து பின்வருமாறு 'செங்கோல்' இதழில் (13-5-1965) எழுதியுள்ளார், ம.பொ.சி. "மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசையை விடவும் மிகவும் மோசமானதாக வளர்ந்திருக்கிறது ஆங்கில ஆசை."

ம.பொ.சி. தன் வரலாற்று நூலான 'எனது போராட்டத்தில்' (1974) தமது ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் பிரசுரங்கள் குறித்தும் எதிர் வினைகள் குறித்தும் பின்வருமாறு எழுதியுள்ளார்.

"ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் போராட்டக் காலத்திலே ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து - சிறப்பாக, தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டத்தை விளக்கி - குறிப்பாக, இந்தி எதிர்ப்பின் பெயரால், "என்றென்றும் ஆங்கிலம்" - "எங்கெங்கும் ஆங்கிலம்" என்று எழுப்பப்பட்ட கோஷங்களால் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் விளையக் கூடிய கேடுகளை விமர்சித்து ஒன்றன் பின் ஒன்றாக ஆறு நூல்களை வெளியிட்டேன். இவையன்றி, படித்தவர்களின் பறங்கி மொழி மோகத்தைக் கண்டித்துப் பாரதியார் எழுதியுள்ளவற்றைச்

சிறு சிறு சுவரொட்டிகளாகத் தயாரித்து நாடு முழுவதிலும் பரப்பியது தமிழரசுக் கழகம். ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக் கோஷங்களைச் சிறு சிறு சுவரொட்டிகளாகத் தயாரித்து, அவற்றையும் நாடு முழுவதிலும் பரப்பியது.

இந்த நூல்களுக்கும் பிரசுரங்களுக்கும் மாணவர் களிடையிலும், பொது மக்களிடையிலும் நல்ல வரவேற்பிருந்தது. "இன்பத் தமிழா, இந்தி - ஆங்கிலமா?" என்ற நூலுக்குக் 'கல்கி'யில் விரிவாக விமர்சனம் எழுதப்பட்டது. 'பாரதியாரும் ஆங்கிலமும்', 'காந்தியடிகளும் ஆங்கிலமும்' என்ற இரு நூல்களுக்குச் 'சுதேசமித்திரனிலே மதிப்புரை எழுதப்பட்டது. 'கல்கி'யும், மித்திரனும் ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக்கு எதிர்ப்புக்காட்டிடும் வகையில்தான் விமர்சனம் எழுதின. இது, நான் எதிர்பார்த்ததுதான்.

தமிழரசுக் கழகத்தின் ஆங்கில ஆதிக்க எதிர்ப்பியக்கத்தைச் சமாளிக்கக் 'கல்கி' இதழிலே "கருத்தரங்கம்" என்பதாக ஒரு பகுதி தோற்றுவிக்கப்பட்டது. அந்தப் பகுதியிலே, டாக்டர் ஆ. இலக்குணசாமி, பிராங்க் அந்தோணி ஆகிய பறங்கி மொழி பக்தர்கள், தமிழ்ப் பயிற்சி மொழிக் கிளர்ச்சிக்கு எதிராக எழுதி வந்தனர்".

## ராஜாஜியுடன் கருத்து மோதல்

"ராஜாஜியின் பால் யான் கொண்டுள்ள பக்தியிலே வேறு யாரும் என்னை விஞ்சி விட முடியாது"[50] என்று ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார். ஆனால் தமது கொள்கைகளுக்கு மாறாக ராஜாஜி செயற்பட்ட பொழுதெல்லாம் ம.பொ.சி. உறுதிபட ராஜாஜியை எதிர்த்துள்ளார்.

"1956 தொடங்கி 1965 முடியவுள்ள ஒரு காலகட்டத்தில் மொழிப் பிரச்சினை காரணமாக எனக்கு ராஜாஜியுடன் கருத்துப் பூசல் ஏற்பட்டது. அப்போது நான் மொழிப் பிரச்சினையிலே அவரது அணுகுமுறையைக் கடுமையாக விமர்சிக்கலானேன். 'தமிழுக்குக் கேடுசெய்யும் வகையிலே ஆங்கில ஆதிக்கத்தை எனது தலைவர் நிலைநிறுத்தப் பார்க்கிறார்' என்ற பாணியில் நான் பிரச்சாரம் செய்தேன். ஆங்கில ஆதிக்கத்திற் கெதிராக 1962 க்கு முன் அவர் எழுதியவற்றையும் பேசியுள்ளவற்றையும் தொகுத்துப் பிரசுரங்கள் வெளியிட்டேன்" என்று ம.பொ.சி. ராஜாஜியுடனான தமது கருத்துப் போரை விளக்கியுள்ளார்.[51]

ஒரு சமயம் 1962 இல் சென்னை சட்டக் கல்லூரியில் தி.மு.க. தலைவர் அண்ணாவைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு ராஜாஜி ம.பொ.சியின் ஆங்கில மொழி ஆதிக்க எதிர்ப்பைப் பின்வருமாறு விமர்சனம் செய்தார்.

"பேரன்பர் கிராமணியார் இப்போது ஒரு பிரச்சாரம் செய்கிறார். இந்தி எதிர்ப்புக் கூட்டம் என்பதைப் போல ஆங்கில எதிர்ப்புக் கூட்டம் போடுகிறார். 'ஆங்கில ஆதிக்கம் போய் 16 ஆண்டுகளாகி விட்டன. ஆங்கிலேயர் போன பின்தான் நமக்குச் சுதந்திரமும் வந்தது. ஆங்கில ஆதிக்கம் என்ற பெயரே சரியில்லை. மக்களை ஏமாற்ற இந்தப் பெயர் உதவும். ஆங்கில ஆதிக்கம் என்றால் என்ன? ஆதிக்கம் என்பது மக்கள் மனநிலையைப் பொறுத்தது. அது பாஷையின் உரிமையல்ல".[52]

இதற்குப் பதிலளித்து ம.பொ.சி. எழுதியதாவது.

"மூதறிஞர் ராஜாஜி, வாதில் வல்லவர். ஆனால், வழக்கைத் திரித்துக் கூறி என்னை வெல்ல முயன்றார். 'ஆங்கிலேயர் ஆதிக்கம் என்பதற்கும், 'ஆங்கில ஆதிக்கம் என்பதற்குமுள்ள வேற்றுமையை மறைத்துப் பிரச்சினையைக் குழப்பிப் பேசினார். பாமரன்கள் அடங்கிய பொதுக் கூட்டத்தில் அல்ல; பட்டதாரிகளான சட்டக் கல்லூரி மாணவர் கூட்டத்திலே".[53]

இவ்வாறு மொழிப்பிரச்சினையிலே ம.பொ.சி. ராஜாஜி யிடையே ஏழாண்டுக்காலம் கருத்துப் போர் நிகழ்ந்துள்ளது.

## பெரியார் – ம.பொ.சி. மோதல்

பெரியாருடன் கருத்துப் போர் நிகழ்ந்ததைப் பற்றி ம.பொ.சி. பின்வருமாறு எழுதியுள்ளார்.

1956 ஜனவரி 28 இல் நுங்கம்பாக்கத்தில் ஏ. சுப்பையாபிள்ளை என்பவர் வீட்டில் இந்தியாவின் ஆட்சி மொழிப் பிரச்னையைப் பற்றி ஆலோசித்து முடிவெடுப்பதற்குக் கூட்டப் பெற்ற கூட்டத்தில் ராஜாஜி, பெரியார், அண்ணா, நெடுஞ்செழியன், ம.பொ.சி. ஆகியோர் கலந்து கொண்டனர். இது பற்றி எழுதியதில் பெரியாருடன் ஏற்பட்ட கருத்துப் போரைப் பின்வருமாறு ம.பொ.சி. விளக்கியுள்ளார்.

"அற்றை நாள் வரை தமிழ்மொழிக்குப் பாதகம் ஏற்படும் வகையில் ஆங்கில ஆதிக்கத்தை ஆதரிக்கும் எண்ணம் ராஜாஜிக்கு இருக்கவில்லை. - - - நுங்கம்பாக்கம் கூட்டத்தில் ராஜாஜி, அண்ணா, நான் ஆகியோர் மொழிப் பிரச்சினையில் ஒத்த கருத்துடையவர்

களாகவே இருந்தோம். பெரியார் ஈ.வெ.ரா. ஆங்கிலம் தமிழ்நாட்டில் ஆட்சிமொழியாகவும், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பாட போதனை மொழியாகவும் நீடிக்க வேண்டுமென்பதிலே தாம் உறுதியுடன் இருப்பதாகக் கூறினார். இத்துடனன்றி, ஆங்கிலமே தமிழர் வீடுகளில் பேசும் மொழியாகவும் ஆக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

இதனால் பெரியாருக்கும் எனக்குமிடையில் சிறிது நேரம் கடுமையான விவாதம் நிகழ்ந்தது. ராஜாஜி அடிக்கடித் தலையிட்டு எங்களை அமைதிப்படுத்த முயன்றார். 'மாநிலங்களின் ஆட்சி மொழி பற்றியும் கல்லூரிகளில் போதனா மொழி பற்றியும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கத் தேவையில்லை' என்றும் கூறினார்.[54]

'குழவிக்குத் தாய்ப்பால் கட்டாய உணவாக இருப்பது போல, பள்ளி மாணவருக்குத் தாய் மொழி கட்டாயப் படிப்பாக இருக்க வேண்டியது அவசியம். தாய்ப்பால் குழவியின் உடலை வளர்ப்பது போலத் தாய்மொழிக் கல்வி மாணவரின் உள்ளத்தை வளர்க்கும்" என்று ம.பொ.சி. கூறியதைப் பெரியார் பின்வருமாறு விமர்சனம் செய்துள்ளார்.

"தமிழ்த்தாயின் பாலை நேரே அருந்தி வளர்ந்த பிள்ளைகள் இங்கிலீஷ் புட்டிப்பாலை அருந்தி இருப்பார்களேயானால் இந்த அன்பர்கள் உட்பட எவ்வளவோ சக்தியும், திறமையும் உடையவர்களாக ஆகி, இவர்கள் வாழ்க்கை நிலையே வேறாக, அதாவது அவர்கள் நல்ல பயன் அடைபவர்களாக ஆகி இருப்பார்கள் என்பதோடு மற்றவர்களுக்கும் பயன்படும் படியான நல்ல உரம் உள்ள உழைப்பாளிகளாகி இருப்பார்கள் என்று உறுதியோடு கூறுவேன்."[55]

## இந்தி மொழிச்சிக்கல்

1938 இல் அன்றைய சென்னை மாநில பிரதம மந்திரியாக (இக்காலத்தில் முதன்மந்திரி) இருந்த ராஜாஜி மாகாணம் முழுவதற்குமாக 125 உயர்நிலைப்பள்ளிகளிலே முதல் மூன்று படிவங்களில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினார். சுயமரியாதை இயக்கத் தலைவர் பெரியார் வழி நடந்த மாபெரும் இந்தி எதிர்ப்பு இயக்கம் வீறு பெறப்பரவியது. பெரியார் கைது செய்யப்பெற்று ஓராண்டுக் காலச் சிறைத்தண்டனைப் பெற்றார். அவ்வமயம் முக்கியக் காங்கிரஸ்காரராக இருந்த ம.பொ.சி. முதன் முறையாக இந்தி மொழிச் சிக்கலை நேருக்கு நேர் சந்திக்க வேண்டியதாயிற்று.

"தமிழ்மொழியின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் கேடில்லாத வகையில்தான் இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக்கியதாக

அன்று ராஜாஜி கூறினார். இதனைச் செயலிலும் காட்ட வேண்டிச் சென்னை மாநிலத்தில் உயர்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் பிரதேச மொழிகளையே பயிற்சி மொழியாக்கினார். ஆம், தமிழகத்து உயர்நிலைப் பள்ளிகளில் தமிழையும், ஆந்திர - கேரள - கன்னடப் பிரதேசங்களில் அந்தந்தப் பிரதேச மொழிகளையும் பயிற்சி மொழியாக்கினார். நடைமுறை இவ்வளவு தெளிவாக இருந்தும், இந்தி படிப்பதால் தமிழ் மொழி அழியும் என்ற எண்ணம் தமிழ் மக்களுக்கு எப்படியோ ஏற்பட்டது". இவ்வாறு தமது தன்வரலாற்றில் குறிப்பிட்ட ம.பொ.சி. இந்தி எதிர்ப்பு வலிமை பெற்றதற்கான ஒரு காரணத்தையும் பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

"இந்தித் திணிப்பை நியாயப்படுத்த அன்று ராஜாஜி கூறிய கருத்துகள் இந்தி எதிர்ப்பை வலுப்படுத்திவிட்டன. 'இந்தி படித்தால், சம்ஸ்கிருத மொழியை எளிதில் பயிலலாம்' என்று ராஜாஜி கூறினார். அதனால், இந்தித் திணிப்பானது சம்ஸ்கிருத மொழியின் செல்வாக்கைத் தமிழகத்தில் வளர்ப்பதற்கான மறைமுகமான சூழ்ச்சி என்று தமிழ்ப்புலவர்களிலே பலர் கருதினர்"

1938 இல் இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற முதல் தமிழ் மாநாட்டில் பேசிய நீதிக்கட்சித் தலைவர் ஏ.டி. பன்னீர்செல்வம் "இந்தி மொழித் திணிப்பு தமிழ் மொழியையும் பண்பாட்டையும் அழித்து விடும்" என எச்சரித்தார்.

இந்தச் சூழலில் சென்னை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டியில், கட்டாய இந்திக்கு எதிர்ப்புத் தெரிவித்து அதனை விருப்பப்பாடமாக மாற்றுமாறு ராஜாஜிக்கு வேண்டுகோள் விடும் தீர்மானத்தை ம.பொ.சி. முன்மொழிந்தார். தீர்மானம் ஏகமன்தாக நிறைவேற்றப் பட்டது. கட்சிக் கட்டுப்பாட்டுக் காரணமாகப் பத்திரிகைகளுக்குத் தீர்மானம் அனுப்பப்படவில்லை. தீர்மானத்தின் நகலை, தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் ராஜாஜியிடம் கொடுத்தார். ராஜாஜியும் சற்றுத் தாமதித்து விருப்பப் பாடமாக மாற்றினார்.

1940 பிப்ரவரி 20 இல் கட்டாய இந்திப் படிப்பு விலக்கிக் கொள்ளப்பட்டது. ம.பொ.சி. இந்தப் புதிய சூழலில் இந்தி எதிர்ப்புக்கு எதிர்ப்புக் காட்டும் பிரச்சாரப் பீரங்கியாகச் செயல்பட்டார்.

மொழிப் பிரச்சினை வரலாற்றின் ராஜாஜி இந்தி மொழி எதிர்ப்பாளராக மாறி 1963இல் 'இந்தி நெவர்' இங்கிலீஷ் எவர்' - "இந்தி எப்போதும் இல்லை, ஆங்கிலமே என்றென்றும்" எனும் புதிய முழக்கத்தை உருவாக்கி அதற்கேற்பப் பிரச்சார இயக்கத்தைத் தீவிரமாக நடத்தத்தொடங்கினார்.

ராஜாஜியின் இந்தப் பிரச்சாரத்தை எதிர்கொண்டு ம.பொ.சி. தமது கருத்தை விளக்க "இன்பத் தமிழா, இந்தி - ஆங்கிலமா?" எனும் நூலை 1963 இல் வெளியிட்டார்.

மைய அரசின் ஆட்சி மொழி இந்தியா, ஆங்கிலமா? எனும் விவாதம் கூர்மை பெற்று விட்டது. மூன்று கோணங்களில் இந்த விவாதம் ஆய்விற்குரியது என்று ம.பொ.சி. குறிப்பிட்டுப் பின்வருமாறு விளக்கம் அளித்தார்.

"ஒரு கோணத்தில் - மாநிலத்தில் ஆட்சிமொழி, பயிற்சி மொழி, நீதிமன்ற நிர்வாக மொழி ஆங்கிலமாகவே இருக்க வேண்டுமென்று முடிவு கட்டிக் கொண்டு அதற்குப் பின்பலமாக மத்தியிலும் ஆங்கிலமே என்றென்றும் ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும் என்று கூறுவோர் நிற்கின்றனர். இவர்களின் இணையற்ற தலைவர் ராஜாஜியாவார்.

இன்னொரு கோணத்தில் - மாநிலத்தில் ஆட்சி மொழி - பயிற்சி மொழி, நீதிமன்ற நிர்வாக மொழி பற்றித் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளாமல், மத்தியில் என்றென்றும் ஆங்கிலமே நீடிக்க வேண்டும் என்று கோருவோர் இருக்கின்றனர். இவர்களுடைய பலம் வாய்ந்த அமைப்புத் தி.மு. கழகம் ஆகும்.

மூன்றாவது கோணத்தில் - மாநிலங்களில் அந்தந்த மாநில மொழியிலேயே ஆட்சி மொழியாக, பயிற்சி மொழியாக, நீதி மன்ற நிர்வாக மொழியாக இருக்க வேண்டும் என்று முடிவெடுத்து, அந்த முடிவுக்குத் தடையாக இருக்கிறதென்ற காரணத்தாலும் மத்தியில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்கக் கூடாது என்று கூறுவோர் இருக்கின்றனர். அவர்களுக்கு முன்னோடியாக விளங்குகின்றது தமிழரசுக் கழகம்."[56]

26-3-1967 இல் "செங்கோல்" இதழில் "காலம் மாறுகிறது" எனும் தலையங்கத்தில் ம.பொ.சி. மைய அரசின் ஆட்சி மொழியாக இந்தி எப்பொழுது வரவேண்டும் என்பதைப் பற்றிப் பின்வருமாறு தெளிவுப்படுத்தியுள்ளார்.

"பிரச்சினை உண்மையாகவே தீர்க்கப்பட வேண்டுமாயின் தமிழ்நாட்டு மக்கள் இந்தி மொழியில் போதிய அளவு பயிற்சி பெறும் வரை, பிரதேச மொழிகள் அந்தந்தப் பிரதேசத்தில் ஆட்சி மொழியாகவும், கல்லூரிகளில் பயிற்று மொழியாகவும், நீதி மன்றங்களில் நிருவாக மொழியாகவும் வாழ்வு பெறும் வரை இந்தியை ஆட்சி மொழியாக்கும் முயற்சியை அடியோடு நிறுத்தி வைக்க வேண்டும்".

பொதுமொழி, ஆட்சிமொழி எனும் இருவேறு நோக்குகளில் இந்திமொழிப் பிரச்சினையை அணுக வேண்டும் என்பதையும் 'தமிழா, ஆங்கிலமா?' எனும் தமது நூலில் (1961) ம.பொ.சி. பின்வருமாறு விளக்கியுள்ளார்.

"ஒரு விஷயத்தை இங்குத் தெளிவுபடுத்துவது அவசியம். அதாவது இந்தியைப் பொதுமொழியாக ஏற்பது வேறு; இந்திய நடுவிடத்தின் ஆட்சிமொழியாக ஏற்பது வேறு. இரண்டையும் ஒன்றாக்கிக் குழப்புவது அறிவுடைமையல்ல.

'இந்திதான் இந்தியாவின் ஆட்சிமொழி' என்ற கொள்கை அரசியல் சட்டப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டு விட்டதாலேயே, ஆட்சி மொழிக்குரிய தகுதி இந்திக்கு வந்துவிடவில்லை. இன்றைய நிலையில், இந்தியும் மாநில மொழிகளில் ஒன்றுதான். இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களெல்லாம் அம்மொழியைப் பயின்ற பின்னரே, அது பொதுமொழிக்கான அந்தஸ்தைப் பெறுகின்றது. அதன்பிறகே, மத்தியில் ஆட்சி மொழியாகவும், மாநிலங்களிடையே தொடர்பு மொழியாகவும் இந்தி வர இயலும். அப்போதும் மொழித்துறையில் தமிழுக்குள்ள தனித்தன்மைக்கேற்ப இந்தியோடு அதற்குக் கலாசாரத் துறையில் சம அந்தஸ்து அளிக்கப்பட வேண்டும். இந்தியாவின் தேசிய ஐக்கியம் வலுப்பெறுவது, இந்தியை ஆட்சி மொழியாக்குவதில் இல்லை. குமரி முதல் இமயம் வரையுள்ள மக்கள் எல்லோரும் இந்தியைப் பயின்று தேர்ச்சி பெறுவதில்தான் இருக்கிறது".

1967இல் சென்னை சட்டக்கல்லூரியில் மாணவர் மன்றத்தின் சார்பில் இந்தித் திணிப்பு எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திலும் ராஜாஜியும் தமிழக முதலமைச்சர் அண்ணாவும் கலந்து கொண்டனர். மாணவர் மன்றச் செயலாளர் ம.பொ.சி.யைப் பற்றிக் "கண்டன ரீதியில் துடுக்காக ஏதோ சொல்லிவிட்டார்". மாணவரின் துடுக்குத்தனத்தை அதே மேடையிலேயே ராஜாஜி மறுத்துப் பின்வருமாறு பேசினார்.

"ம.பொ.சி. இந்தித் திணிப்பை ஆதரிக்கிறார் என்று மாணவர் தவறாக எண்ணிக் கொண்டு அவரைப் பற்றிக் கோபமாகப் பேசினார். ம.பொ.சி. இந்தித் திணிப்பை ஆதரிப்பவர் அல்லர். என்னையும் அண்ணாத்துரையையும் போல எதிர்ப்பவரே. ஆனால், எங்களுடைய இந்தி எதிர்ப்பானது ஆங்கில ஆதிக்கத்துக்கு உதவி புரிவதாக இருக்கிறது என்று ம.பொ.சி. கருதுகிறார். அந்தக் கருத்தைக் கட்டபொம்மன் பாஷையிலே வெளியிடுகிறார்."[57]

## மொழிச் சிக்கலும் மாநிலச் சுயாட்சியும்

"இந்தி மொழி ஆதிக்கம் ஏற்படுவதைத் தவிர்க்கின்ற அதே நேரத்தில் ஆங்கில மொழியின் ஆதிக்கத்தையும் தகர்த்தாக வேண்டும். இந்த இரு மொழிகளின் ஆதிக்கங்களிலிருந்தும் தமிழ் மொழியும், தமிழினத்து மக்களும் விடுதலை பெற்றாக வேண்டும். இதுவே தமிழரசுக் கழகத்தின் கொள்கை" என்று ம.பொ.சி. "மொழிச் சிக்கலும் மாநிலச் சுயாட்சியும்" எனும் நூலில் கூறினார்.

இந்த இரு ஆதிக்கங்களையும் 'தகர்க்க', மாநிலச் சுயாட்சித் தத்துவம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்பதும் ம.பொ.சி.யின் தீர்வாகும்.

*31-12-1967*இல் தமிழரசுக் கழகத்தின் மத்திய செயற்குழு சென்னை நகரில் கூடி ஆட்சி மொழிச் சிக்கல் குறித்து இரு தீர்மானங்களை நிறைவேற்றியது. இரண்டாவது தீர்மானம் வருமாறு:

"மத்தியில் அளவுக்கு மீறி அதிகாரங்கள் குவிக்கப் பட்டிருப்பதால் அந்த அளவுக்கு அரசாங்க உத்தியோகங்களும் மத்திய அரசின் பொறுப்பில் இருந்து வருகின்றன. இந்த நிலையில் மத்தியில் ஆங்கில மொழியே நீடிப்பதானாலும் மாறாக இந்தி மொழியே ஆட்சி மொழியாவதானாலும் தமிழருக்கு இரண்டுமே வேற்று மொழிகளாதாலால், மத்திய அரசின் உத்தியோகங்களை எதிர்பார்த்து அதிகம் பேர் அந்த மொழிகளைப் படித்தாக வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இது, ஆட்சி மொழிச் சிக்கல் தீர்வதற்குப் பெரும் தடையாக இருந்து வருகின்றது. ஆகவே, இந்தச் சிக்கலைத் தவிர்ப்பதற்காகவே பாதுகாப்பு, போக்குவரத்து, அயல்நாட்டு உறவு ஆகிய மூன்று பொறுப்புகளை மட்டும் மத்தியில் விட்டு, மற்ற பொறுப்புகளையெல்லாம் உடனடியாக மாநில அரசுகளுக்கு மாற்றித்தர வேண்டும் என்று இக்குழு அரசைக் கேட்டுக் கொள்ளுகிறது. இதன் மூலம் ஆங்கிலம் இந்தி ஆகிய இரண்டு மொழிகளின் ஆதிக்கங்களிலிருந்தும் தமிழகம் விடுபடக் கூடுமாதலால், மாநில சுயாட்சிக் கோரிக்கைக்கு ஆதரவு அளிக்குமாறு தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகளை இக்குழு கேட்டுக் கொள்ளுகிறது".[58]

பாவேந்தர் பாரதிதாசன் முற்கூறிய தீர்மானத்தை வரவேற்று ம.பொ.சி.யிடம் நேரில் பாராட்டினார். அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற தமது பிறந்தநாள் கூட்டத்திலும் "மொழிச்சிக்கல் தீரத் தமிழரசுக்கழகம் காட்டும் வழியே சிறந்தது" என்று பாராட்டிப்

பேசினார். சட்டப் பேரவை உறுப்பினராக ம.பொ.சி. இருந்த பொழுது, இந்தியாவின் மொழிச் சிக்கல் தீருவதற்கு மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்குவதுதான் வழி என்றும் ஒரு முறை விளக்கிப் பேசினார். அதன்பின் ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் சட்டப்பேரவையைத் தொடங்கி வைத்து நிகழ்த்திய உரையிலும் ம.பொ.சி. யின் கருத்து மறைமுகமாக வரவேற்கப்பட்டது. அப்போதைய முதல்வர் அண்ணா அவர்களும் சட்டப் பேரவையில் நிகழ்த்திய உரையொன்றில் ம.பொ.சி.யின் கருத்துக்கு ஆதரவு தெரிவித்தார்."[59]

"என்றேனும் ஒரு நாள் தமிழரசுக் கழகத்தின் செயற்குழு காட்டிய வழியில்தான் இந்தியாவின் மொழிச்சிக்கல் தீர்க்கப் படுவதாக இருக்கும்" என்று ம.பொ.சி. நம்பிக்கை தெரிவித்தார்.[60]

## பதினான்கு மொழிகள்

"தமிழகச் சட்டமன்றப் பேரவை இந்திய அரசியல் சட்டத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பதினான்கு மொழிகளையும் சம அந்தஸ்துடன் நடத்த வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கின்றது. இந்தக் கோரிக்கை ஆளுங்கட்சியான தி.மு.கழகத்தின் சார்பிலிருந்து மட்டுமல்லாமல் தமிழரசுக் கழகம், கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆகிய அமைப்புகளின் சார்பிலும் வற்புறுத்தப்பட்டுள்ளது" என்றும் ம.பொ.சி. கூறியுள்ளார்.[61]

"மத்தியில் உண்மையான சமஷ்டி அரசு அமையுமானால் 12 மொழிகளையும் ஆட்சிமொழிகளாக ஏற்பது சாத்தியமாகும்" என்றும் ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார். உருது, சம்ஸ்கிருதம் இரண்டும் பிரதேச மொழிகளாக இல்லை. அவை ஆட்சி மொழிகள் எனும் திட்டத்திற்கு வேண்டியதில்லை.

## குறிப்புகள்

1. நானறிந்த ராஜாஜி, இரண்டாம் பதிப்பு, 2003, (முதற்பதிப்பு, 1987), சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம், பூங்கொடி பதிப்பகம், சென்னை- 600 004, ப. 275.

2. மேலது, ப. 274.

3. சிலம்புச் செல்வரின் தலையங்க இலக்கியம், 1980, மா.ரா. இளங்கோவன், எம். ஏ., சேகர் பதிப்பகம், சென்னை - 600 078, ப. 49.

4. 'கல்கி', வரர இதழ், ஜூன் 2, 1946, ப. 44.

5. விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, இரண்டாம் பதிப்பு, 1997 (முதற் பதிப்பு 1970), டாக்டர் ம.பொ. சிவஞானம், பூங்கொடி பதிப்பகம், சென்னை - 600 004, ப. 2.

6. ம.பொ.சி. கூறுகிறார், இரண்டாம் பதிப்பு, 1960, (முதற் பதிப்பு 1956), தொகுப்பாளர் சோம. சுவாமிநாதன், இன்ப நிலையம் வெளியீடு, மயிலாப்பூர், சென்னை - 600 004, ப. 8.

7. மேற்கோள், இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், முதற் பதிப்பு, 1973, பெ.சு. மணி, பூங்கொடி பதிப்பகம், சென்னை - 600 004.

8. எனது போராட்டம், 1974, ம.பொ.சிவஞானம், இன்ப நிலையம் வெளியீடு, மயிலாப்பூர், சென்னை, ப. 81.

9. மேலது, ப. 79.

10. விவரமறியப் பார்க்கவும் - "மூவேந்தர் மரபும், ம.பொ.சி.யும்", "செங்கோல்', 28-6-1981, மறுவெளியீடு, கார்ல் மார்க்சின் இலக்கிய இதயம், கட்டுரைத் தொகுப்பு, 1986, பெ.சு. மணி, பூங்கொடி பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை - 600 004.

11. 'மறுமலர்ச்சி', 'சுதேசமித்திரன்', வருஷ அனுபத்தம் 1918, மறுவெளியீடு, வ.வே.சு. ஐயர் கட்டுரைகள், 1981, தொகுப்பாளர், பெ.சு. மணி, வெளியீடு, தியாகி எஸ்.என்.சோமயாஜுலு, திருநெல்வேலி, ப. 64.

12. "தஞ்சையில் எழுந்த குரல்' 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்', ம.பொ.சி., 'செங்கோல்', 15-1-1995, ப. 7.

13. புதிய தமிழகம் படைத்த வரலாறு, 1986, சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம், பூங்கொடி பதிப்பகம், சென்னை, ப. 169.

14. மேலது, 'செங்கோல்' கட்டுரையில் குறிப்பிடப்பெற்ற தமிழர் திருநாள் கூட்டம் சென்னை கோகலே மன்றத்தில் ம.பொ.சி. தலைமையில் நடைபெற்றது. 'இருசப்பகிராமணி தெருவிலிருந்து' எனும் குறிப்பு ம.பொ.சி.யின் இல்லம் இருந்த தெரு.

15. தமிழ் எழுத்துச் சீரமைப்பு, 1998, டாக்டர் வா.செ. குழந்தைசாமி, பாரதி பதிப்பகம், சென்னை - 600 017, ப. 12.

16. எழுத்துச் சீர்திருத்தம் தேவையா, டாக்டர் ம.பொ.சிவஞானம், முதற்பதிப்பு, டிசம்பர், 1995, பூங்கொடி பதிப்பகம், சென்னை - 600 004.

17. முற்கூறிய டாக்டர் வா.செ. கு.வின் நூல், ப. 16.

18. பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள், தொகுதி 2, பதிப்பாசிரியர் வே. ஆனைமுத்து, சிந்தனையாளர் கழகம், திருச்சிராப்பள்ளி-2, ப. 959.

19. மேலது, பக். 962-963.

20. தமிழ்நாடு அரசு ஆணை நிலை எண் 1875, நாள் 19-10-1978.

21. எழுத்துச் சீர்திருத்தம் தேவையா? டாக்டர் ம.பொ.சிவஞானம், 1995, பக். 6-7.

22. மேலது, ப. 7.

23. மேலது, ப. 35.

24. மேலது, ப. 35.

25. மறுவெளியீடு, குமரி மலர், மாத இதழ், ஆசிரியர் எ.கே. செட்டியார், ஜூலை 1968.

26. பாரதியின் மொழிச் சிந்தனைகள், ஒரு மொழியியல் நோக்கு, முதல் பதிப்பு, மே 1984, எம்.ஏ.நுஃமான், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட வெளியீடு, பக். 47-48.

26அ. நேர் காணல் டாக்டர் வா.செ. குழந்தைசாமி 17-3-2004.

27. டாக்டர் வா.செ.கு.வின் முற்கூறிய நூல், ப. 44.

28. ம.பொ.சி.யின் முற்கூறிய நூல், ப. 28.

29. ஒளவையார் அருளிச் செய்த கல்வியொழுக்கம், மூலமும் திரு. ஜே.எஸ். அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பும், பதிப்பாசிரியர், சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம், 1980, பூங்கொடி பதிப்பகம், சென்னை - 600 004, ப. 47.

30. ம.பொ.சி. கூறுகிறார், இரண்டாம் பதிப்பு, 1960, (முதற் பதிப்பு 1956), தொகுப்பாளர் சோம. சுவாமிநாதன், இன்ப நிலையம் வெளியீடு, மயிலாப்பூர், சென்னை - 600 004, ப. 7.

31. மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை - 1986, புலவர் இரா. இளங்குமரன்.

32. மேலது, ப. 91.

33. தனித்தமிழ் இயக்கத்தின் அரசியற் பின்னணி, 1979, ப. 49.

34. விடுதலைப்போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, 1970, ப. 92.

35. 'ஞானபாநு' செப்டம்பர், 1915, பக். 163-164.

36. 'வீரமுரசு' சுப்பிரமணிய சிவா, 1984, பெ.சு. மணி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை - 600 098, ப. 316.

37. மேற்கோள், மேலது, பக். 320-321.

38. மேலது, ப. 322.

39. தமிழும் கலப்படமும், 1960, ம.பொ.சிவஞானம், இன்ப நிலையம், மயிலாப்பூர், சென்னை - 600 004, பக். 20-21.

40. அடியும் முடியும், இரண்டாம் பதிப்பு 2001, (முதற் பதிப்பு 1996), க. கைலாசபதி, முன்னாள் உபவேந்தர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை - 600 026, ப. 69.

41. தமிழகத்தில் பிறமொழியினர், முதற்பதிப்பு 1976, சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம், பூங்கொடி பதிப்பகம், சென்னை - 600 004, ப. 296.

42. மேலது, ப. 297.

43. தமிழும் சம்ஸ்கிருதமும், முதற்பதிப்பு 1984, சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம், பூங்கொடி பதிப்பகம், சென்னை - 600 004, பக். 25-26.

44. மேலது, முன்னுரை, ப. 4.

45. மேலது, பக். 16-19.

46. மேற்கோள், இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், முதற்பதிப்பு, 1973, பெ.சு. மணி, பூங்கொடி பதிப்பகம், சென்னை, 600 004, ப. 51.

47. "ஆங்கிலம் புகுந்த விதமும் ஆதிக்கம் வளர்ந்த கதையும்", பெ.சு. மணி, 'செங்கோல்' வார இதழ் ஆசிரியர் ம.பொ.சிவஞானம், 13-6-1965, ப. 6.

48. The Oppressive Present, Literature and Social Consciousness In Colonial India, 1994. Sudhir Chandra, Oxford University press, Delhi. pp. 18-19.

49. பாரத ஜன சபை - காங்கிரஸ் மகாசபை சரித்திரம், பாகம் 1, 1918, சி.சுப்பிரமணிய பாரதி, சுதேசமித்திரன் வெளியீடு, ப. 4.

50. நானறிந்த ராஜாஜி, இரண்டாம் பதிப்பு, 2003, (முதற் பதிப்பு 1987), சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம், பூங்கொடி பதிப்பகம், சென்னை - 600 004, ப. 5.

51. மேலது, ப. 244.

52. எனது போராட்டம், 1974, ம.பொ.சிவஞானம், ப. 901.

53. மேலது, ப. 901.

54. நானறிந்த ராஜாஜி, பக். 240-241.

55. தாய்ப்பால் பைத்தியம், பெரியார் ஈ.வெ.ரா., தொகுதி 2, ப. 991.

56. இன்பத் தமிழா?, இந்தி - ஆங்கிலமா?, 1963, ம.பொ.சிவஞானம், மாதவி பதிப்பகம், சென்னை, பக். 5-6.

57. நானறிந்த ராஜாஜி, ப. 295.

58. மொழிச்சிக்கலும் மாநிலச் சுயாட்சியும், 1968, ம.பொ.சி., ம.பொ.சி பதிப்பகம், சென்னை - 600 005, ப. 4.

59. மாநிலச் சுயாட்சிக் கிளர்ச்சியின் வரலாறு, இரண்டாம் பதிப்பு, 1999, டாக்டர் ம.பொ.சிவஞானம், பூங்கொடி பதிப்பகம், சென்னை 600 004, பக். 88-89.

60. மேலது, ப. 89.

61. மொழிச் சிக்கலும், மாநிலச் சுயாட்சியும், ப. 43.

*****

# ம.பொ.சி. பார்வையில் தமிழ் இலக்கியம்

## அறிஞர் அண்ணா சுட்டிக் காட்டியது

அரசியலையும், இலக்கியத்தையும் இணைத்த வாழ்வைக் கொண்டவர் ம.பொ.சி. என்பதை அறிஞர் அண்ணா சுட்டிக்காட்டியுள்ளார். 26-6-1966 இல் சென்னையில் நடைபெற்ற ம.பொ.சி. மணிவிழாவில் அறிஞர் அண்ணா பேசியபொழுது கூறியதாவது.

"அரசியல் இலக்கிய வாடை அற்றதாகவும், இலக்கியம் அரசியலைப் பற்றி கவனிக்காத முறையிலேயும் ஒன்றுக்கொன்று முரண்பட்டுத் தமிழகத்திலே இருந்து கொண்டு வந்த நாட்களிலே ம.பொ.சி. அவர்கள் அரசியலையும் மறந்தாரில்லை. இலக்கியத்தையும் இழந்து விடவில்லை.அரசியலையும் இலக்கியத்தையும் ஒன்றாக அவர் தம்முடைய வாழ்க்கையிலே இணைத்துக் காட்டியிருக்கிறார் - - - - -

இலக்கியத்திலே பல பேராசிரியர்கள் அவரிடத்திலே நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். இலக்கியத்திலே உள்ள அருமைகளை ம.பொ.சி. அவர்கள் எந்த அளவுக்கு எடுத்துக் கையாளுகிறார் என்பதைப் பார்த்து அவர்களே வியப்படைகிறார்கள். 'நம்மாலே முடியவில்லையே' என்று சில பேர் கொஞ்சம் வருத்தப்படக் கூடச் செய்கிறார்கள். நல்லவர்கள் அப்படி வருத்தப்பட மாட்டார்கள். நல்லவர்களல்லாதவர்கள்தான் வருத்தப்படுகிறார்கள்".[1]

மேற்காணும் கருத்தை வேறோரிடத்தில் பின்வருமாறு வெளியிட்டுள்ளார், அறிஞர் அண்ணா.

"அவர் ஒரு விந்தையான மனிதர். இந்த இளைத்த உருவத்தை வைத்துக் கொண்டு, உடலிலே ஓராயிரம் நோய்களைத் தாங்கிக் கொண்டு, வாழ்க்கையிலே இலக்கியத்தையும் அரசியலையும் ஒரு சேர வளர்ச்சி அடையச் செய்வதும் அதிலேயே அவர்கள் ஈடுபடுவதும் விந்தை பெரிய காரியம் என்று நான் பல நேரத்திலே வியப்படைந்திருக்கிறேன்."[2]

## 'கவிமணி'யின் கணிப்பு

மாபெரும் அரசியல் இயக்கத் தலைவரான அறிஞர் அண்ணா மேற்கண்டவாறு உள்ளது உள்ளபடியே எவ்வித அரசியல் காழ்ப்புமின்றிக் கூறியிருப்பதை அறியும் அதே சமயத்தில் கட்சி

அரசியலுக்கு அப்பாற்பட்டுத் தமிழ் வளர்த்த கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்கள் கூறியுள்ள பின்வரும் கணிப்பும் இங்கு நினைவுகூரத் தக்கது.

"கிராமணியார் நாட்டின் நலன் கருதி உழைக்கும் ஓர் அரசியல் சீர்திருத்தக்காரர் மட்டுமல்ல. பண்டைத் தமிழ் இலக்கியங்களையும், பிற்கால வரலாறுகளையும் துருவி ஆராய்ந்து தமிழின் மேன்மை காட்டும் தண்டமிழ் மேதையுமாவார். **அவர் சேவை மொழி, அரசியல், பொருளாதார சமத்துவம் ஆகிய மூன்றினையும் இணைத்து நிற்பதொன்றாகும்**" (அழுத்தக்குறியீடு, நூலாசிரியருடையது)[3]

## பல்கலைச் செல்வர் தெ.பொ.மீ. பார்வையில்

1946 மே மாதம் தோன்றிய ம.பொ.சி.யின் 'தமிழ் முரசு', 1946 நவம்பர் 21 இல் ம.பொ.சி. அமைத்த தமிழரசுக் கழகம் இரண்டின் வாயிலாகவும் ம.பொ.சி.யுடன் இணைந்து அரசியல், இலக்கியத் தொண்டுகள் ஆற்றி வந்த பல்கலைச் செல்வர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், ம.பொ.சி.யின் புதிய இலக்கியப் பார்வையைப் பின்வருமாறு விதந்தோதியுள்ளார்.

"ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வழி வழித் தோன்றி வாழ்ந்து வரும் புலவர் உலகம் காணாத புதிய புதிய செய்திகளை ம.பொ.சி. காண்கிறார்கள். பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்ற எங்களுக்கும் புரிந்து கொள்ளும் வகையில் எளிய தமிழிலே சொல்லுகிறார்கள். இலக்கிய மேடைகளில் பலப்பல புதிய கோணங்களிலே இருந்து அவர் பேசுவதை நான் கேட்ட போதெல்லலாம் 'இதென்ன மாயமோ' என்றெண்ணி வியந்தேன். இன்பத்தமிழின் ஆழத்தையும், அகலத்தையும், அறிவு ஊற்றினையும் அறிந்தவர் ம.பொ.சி. தமிழ் நரம்பினை அறிந்தவர் என்று சிலரைப் பற்றிச் சொல்வார்கள். அதைப் போல ம.பொ.சி.யும் தமிழின் நாடி நரம்பினை அறிந்தவர்". (ம.பொ.சி.யின் மணிவிழாவில் பேசியது).

பள்ளிப் படிப்பை மூன்றாம் வகுப்பில் தொடர முடியாத வறுமைச் சூழலிலும், முப்பத்தொன்பதாம் வயதில் சுயமாகச் சிறைச்சாலையில் தமிழிலக்கியம் பயிலத்தொடங்கிய ம.பொ.சி. இலக்கியச் செய்திகளை அரசியல், சமூக, மொழி மாற்றங்களுக்கு இயக்கங்களாகப் பயன்படுத்தினார் என்பது வரலாற்றுண்மையாகும்.

## தமிழன் குரல்

1947 இல் ம.பொ.சி.யின் 'தமிழன் குரல்' பின்வருமாறு முழங்கியது.

"இயற்றமிழ்த்துறையில் புதுப்புது எழுத்தாளர்கள் நாளுக்கு நாள் பெருகி வருகின்றனர். புது மலர்ச்சி மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் என்றெல்லாம் போற்றப்படுகின்றனர். ஏதோ புரியாத வகையில் நூல்கள் வெளிவந்த காலம் போய் புரியக் கூடிய முறையில் எழுதும் இந்தப் புது மலர்ச்சி எழுத்தாளர்களைப் பாராட்ட வேண்டியதுதான்.

ஆனால், வெறும் எழுத்தில் மட்டும் மலர்ச்சி தோன்றினால் போதுமா? எண்ணத்திலும் தோன்ற வேண்டாமா? தற்காலத்தில் வெளிவரும் தமிழ் உரைநடை நூல்களில் பெரும்பாலானவை வெறும் பொழுது போக்குக்காகப் படிக்கும் தன்மையனவே ஒழிய, செங்குட்டுவன் வீரத்தையும், கண்ணகியின் புரட்சியையும், கம்பனின் சமதருமத்தையும் அவை நமக்குக் கற்றுத் தருவதில்லை. இந்த வரலாற்று ஆசிரியர்கள்,

> சேரன் தம்பி சிலம்பை யிசைத்ததும்
> தெய்வ வள்ளுவன் வான்மறை கண்டதும்
> பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
> பாரளித்ததும் தருமம் வளர்த்ததும்
> முன்னர்நாடு திகழ்ந்த பெருமையும்

அன்ன யாவும் அறியாதவர்களல்லர்; சூழ்நிலைக்கு அடிமைப்பட்டு அலட்சியப் படுத்துகின்றனர். இலக்கண, இலக்கியங்களில் வல்லுநராய்த் திகழும் தமிழ்ப் பண்டிதர்கள், தமிழுக்காகச் சேவை செய்கிறார்கள் என்பது நமக்கு ஓரளவு மகிழ்ச்சியைத் தருகிறது என்றாலும், இவர்களது போக்குக் காலத்தோடு ஒட்டியதாயில்லாம லிருப்பது வருந்தத்தக்கது.

"திருவள்ளுவரின் அறத்துப்பாலுக்கு விளக்கம் கூறி வெளிவந்த நூல்கள் எண்ணிலடங்காதவை. ஆனால், அரசியல் நெறியையும், ஆண்மைக் குணத்தையும், பொருளாதாரப் புது வழியையும் புகட்டக்கூடிய பொருள் ஆராய்ந்து தற்காலத்திற்குப் பொருந்தக் கூடிய வகையில் வெளியிடப்பட்ட புத்துரைகள் ஏதேனும் உண்டா? இல்லையென்றே சொல்லலாம். (ம.பொ.சி. உட்பட பல திருக்குறள் ஆய்வாளர்கள் புதுப்புதுப் பார்வைகளில் நூல்களைப் படைத்துள்ளார்கள். திருக்குறள் இயக்கம் வீறு பெற்று

நவீனத்துவமும், சமூக மாற்றமும் காண்பதில் மகத்தான பங்களிப்பு செய்து வருகின்றது என்பது புதிய வரலாறாகும் - நூலாசிரியர்).

"திருக்குறள் மட்டுமன்றி, பழைய தமிழ் இலக்கியங்கள் அத்தனையும் நம்முடைய அரசியல் பொருளாதார மறுமலர்ச்சிக்கு மிகவும் பயன்படக் கூடியவை என்பதில் ஐயமில்லை. ஆனால், அப்படிப் பயன்படாமலிருப்பதற்குக் காரணம், இன்றைய அரசியல் தலைவர்களுக்கு இலக்கிய ஞானமும், தமிழ்ப் பண்டிதர்களுக்கு அரசியல் அறிவும் இல்லாததேயாகும். இனியேனும், இந்நிலை மாறவேண்டுமானால் தமிழும் அரசியலும் ஒன்றுபட்டே தீரவேண்டும்."[4]

மேற்காணும் விரிவான கொள்கையின் இறுதிக் கருத்தை ம.பொ.சி. நடைமுறைப்படுத்தினார்.

## அரசியலும் இலக்கியமும்

இலக்கியத்தையும், அரசியலையும் இணைத்துத் தொண்டாற்ற ம.பொ.சி. நிறுவிய தமிழரசுக் கழகம் சிறந்த முன்னுதாரணமாய்த் திகழ்கிறது.

"தமிழரசுக் கழகத்தை நான் தோற்றுவித்த பின்னர், இலக்கியத்திற்கும் பொது அரசியலுக்கும் நல்லபடியான உறவு ஏற்பட்டதெனலாம். இந்த அருந்தொண்டைத் தொடங்கி வைக்கும் பேறு கிடைத்தற்காக நான் பெருமைப் பட்டுக் கொள்ளலாந்தானே".[5] இவ்வாறு ம.பொ.சி. பெருமிதமாகக் கூறியதில் வியப்பில்லை.

"இலக்கியத்திற்காகத்தான் அரசியல்" எனும் கொள்கையைப் பழங்காலத்திலேயே இலக்கியத்திற்கும் அரசியலுக்கும் உள்ள உறவைப் பற்றிச் சிந்தனையாளர்கள் கூறியுள்ளனர். கிரேக்க நாட்டுச் சிந்தனையாளர் பிளேட்டோ, "நிகழ்ச்சிகளை எண்ணங்களாக்குவது இலக்கியம், எண்ணங்களை நிகழ்ச்சிகளாக்குவது அரசியல்" எனக் கூறினார்.

"இலக்கியத்திற்காகத்தான் அரசியல்" எனும் ம.பொ.சி.யின் கொள்கை முற்கூறிய பிளேட்டோவின் சிந்தனைக்கு மேலும் ஓர் அழுத்தத்தைக் தருகின்றது.

"இத்தகைய அரசியல் - இலக்கிய இயற்கையான உறவை உய்த்துணராத சிலர், 'தாங்கள் அரசியலைக் கைவிட்டு, இலக்கியத்திற்கே ஆளாக்கிக் கொள்ளுங்கள்' எனச் சிவஞானத்திற்கு உபதேசம் புரிய முன் வருகிறார்கள். இவரது அரசியல் - இலக்கிய

வாழ்வின் வெற்றி ரகசியத்தைப் புரிந்து கொள்ளாது பின் தங்கியவர்கள் அவசரப்பட்டுத் தவறாக உதிர்க்கும் 'உபதேசம் இதுவாகும்' என்று இந்நூலாசிரியர் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.[6]

ம.பொ.சி. அவர்களின் நுண்மாண் நுழைபுல இலக்கிய ஆராய்ச்சியின் அடிப்படைக்கு அவரது நூலறிவு மட்டும் காரணம் அன்று; பின், எது? ''யாவதும் கற்றோர் அறியா அறிவினர்'' (திருமுருகாற்றுப்படை - 134) - அதாவது, பலவற்றையும் கற்றோரும் சிறிதும் அறியப்படாத **இயல்பான அறிவுடையவர்**. ஆம், அவர் **ஓர் இயற்கை அறிவினர்**.[7]

## இலக்கியக் கொள்கை

தமிழ் இலக்கியங்களை இந்தியத் தேசியத்திற்கும், தமிழ்த் தேசியத்திற்கும் பயன்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டவர் ம.பொ.சி.

பிரிவினை வாத, இனவாத, வகுப்புவாதப் பிரச்சாரங்கள் தமிழ் இலக்கிய மரபின் அசல் தன்மையை அழித்திடாமல் பாதுகாப்பதையும் அவர் இலக்கியக் கொள்கையாகக் கொண்டிருந்தார்.

" 'இலக்கியம் பொழுதுபோக்குவதற்காகவே' என்று கதைக்கும் ரசிகர்களும் உண்டு. அந்த ரசிகர்களிலே நான் ஒருவன் அல்லன்; கவிதையாயினும் சரி; காப்பியமாயினும் சரி; மக்களுடைய வாழ்க்கையைப் பண்படுத்துவதாக இருக்க வேண்டும். இதற்குப் பயன்படாத கவிதையும் காப்பியமும் குப்பையில் எறியப்பட வேண்டும். இதுவே எனது இலக்கியக் கொள்கை".[8]

இதுவே அவர் கண்ட தமிழரசு இயக்கத்தின் இலக்கியக் கொள்கையுமாகும் என ம.பொ.சி. பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"தமிழரசு இயக்கத்தாருக்கு இலக்கியம் என்பது பொழுது போக்குக்குப் பயன்படும் பொருளல்ல; கடந்த காலத் தமிழகம் எப்படி இருந்தது என்பதைக் காட்டும் கண்ணாடி, இன்றைய தமிழகத்தின் பண்பாட்டுத் தரத்தை உரைத்துப் பார்க்கப் பயன்படும் உரைகல்; எதிர்காலத் தமிழகத்திற்குத் தேவைப்படும் செல்வங்கள் எல்லாம் நிரம்பியுள்ள களஞ்சியம்."[9]

தமிழரசுக் கழகத்தின் கொள்கைகளில், இலக்கியக் கொள்கையை இடம் பெறச் செய்ததைப் பற்றியும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் ம.பொ.சி.

"தமிழ் இலக்கியங்களைப் படிப்பதிலும் ஆராய்வதிலும் எனக்கெனத் தனித்த பார்வை ஒன்று உண்டு. நான் பாரதம் முழுவதையும் தாயகமாகக் கொண்டுள்ளவன். பிள்ளைப் பருவந்தொட்டுப் 'பாரதமாதாவுக்கு ஜே', என்று ஒலி எழுப்பி நாத்தழும்பேறியவன். அந்த வகையில் மொழிப்பற்றுக் காரணமாகவும் தமிழரிடையில் பூசல் ஏற்பட அநுமதிப்பது என்னால் சாத்தியமில்லை - ஆகவே 1946 இல் தமிழரசுக்கழகத்தைத் தொடங்கியபோது அதனுடைய ஆறு கொள்கைகளில் நான்காவது இலக்கியக் கொள்கை இடம் பெறச் செய்தேன். அது 'சாதி, சமய வேற்றுமையற்ற தமிழினத்தின் பொதுக் கலைகள், இலக்கியங்கள் ஆகியவற்றைப் போற்றி, அவற்றின் வளர்ச்சிக்காகப் பாடுபடுதல்' என்பதாகும்."[10]

## இதழ்களின் வழியே இலக்கியப் பணி

ம.பொ.சி. நிர்வாக ஆசிரியராகவும், பதிப்பாசிரியராகவும் பொறுப்பேற்ற முதல் இதழ் 'கிராமணி குலம்'. இந்த இதழ், கிராமணி குல மகாஜன சங்கத்தின் ஆதரவில் வெளி வந்து மாதம் இருமுறையாக 1936 ஆம் ஆண்டு ஜூலை 20 இல் திங்கட் கிழமை முதல் இதழ் வெளி வந்தது. இதன் ஆசிரியர் த.சே. உமாபதி கிராமணி, பி.ஏ. எல்.டி. இந்த இதழ் பத்து மாதங்கள் வெளிவந்தது. இறுதி இதழ் 1937 ஏப்ரல் மாதம் முதல் நாள் வியாழனன்று வெளிவந்தது. கிராமணி குலம் தொடங்கிய போது, ம.பொ.சி. "கிராமணி குல மகா ஜன சங்கத்தின் செயலாளராக இருந்தார்.

"சாதி வழிப்பட்ட இயக்கத்திலிருந்து என்னை முற்றிலும் விடுவித்துக் கொள்ள விரும்பியதனாலேயே "கிராமணி குலம்" பத்திரிகையை நிறுத்திவிட வேண்டியவன் ஆனேன். கிராமணி குலச் சங்கத்திலிருந்தும் விலகி விட்டேன்" என்று ம.பொ.சி. அறிவித்தார்.[11]

"நான் எழுத்தாளனாக அறிமுகமானது "கிராமணி குலம்" பத்திரிகையின் வாயிலாகத்தான்" என்றும் ம.பொ.சி. தனது தன் வரலாற்று நூலான எனது போராட்டத்தில் குறிப்பிட்டுள்ளார்.

'கிராமணி குலம்' அவருடைய இதழியல் தமிழ்ப் பயிற்சிக்கான களமாக அமைந்தது. கிராமணி குலம் தொடர்பான பிரச்சினைகள் பற்றிப் பெரும்பாலும் ம.பொ.சி. எழுதி வந்தார். குறிப்பிடத்தக்க அரசியல் இலக்கியக் கட்டுரைகளை அவர் எழுதவில்லை. சிற்சிலவிடங்களில் பாரதி பாடல் வரிகளை ஆண்டுள்ளார்.

தலையங்கப் பக்கத்தில் பின்வரும் பாரதிபாடல் வரிகள் மகுடமாக அமைந்தன.

**எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்ததே - பொய்யும்**
**ஏமாற்றும் தொலைகின்ற காலம் வந்ததே - இனி**
**நல்லோர் பெரியரெனும் காலம் வந்ததே - கெட்ட**
**நயவஞ்சக் காரருக்கு நாசம் வந்ததே**

## தமிழ் முரசு

ம.பொ.சி.யின் முதல் இலக்கியக் கட்டுரை சென்னை 'ஜனசக்தி' (கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகை)யில் 1945இல் வெளிவந்தது. ஔவையாரின் தனிப்பாடல்களுள் ஒன்றான "நூலெனிலோ கோல் காயும்' என்று தொடங்கும் பாடலுக்கு ம.பொ.சி. எழுதிய விளக்கவுரை "பாட்டாளி அரசு" எனும் தலைப்பில் வெளி வந்தது.

'தமிழ் முரசு' மாதம் ஒரு புத்தகமாக 1946 மே மாதம் முதல் 1946 நவம்பர் வரையில் வெளிவந்தது. இதன் ஆசிரியரான ம.பொ.சி., "பிற எழுத்தளார்களுடைய கட்டுரைகளை நம்பித்தான் 'தமிழ்முரசு' புத்தக வெளியீட்டைத் தொடங்கினேன். ஆனால் முதல் புத்தகத்திற்கே அரசியல் கட்டுரை ஒன்றும், இலக்கியக் கட்டுரை ஒன்றும் எழுதியாக வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டது" என்று குறிப்பிட்டுள்ளார்.[12]

'தமிழகத்தில் தமிழரசு', எனும் அரசியல் கட்டுரையும், "வீரக்கண்ணகி" எனும் இலக்கியக் கட்டுரையும் வெளிவந்தன. சந்தர்ப்ப நிர்ப்பந்தம் காரணமாக எழுதப் பெற்ற இவ்விரு கட்டுரைகளும் பெற்ற வரவேற்பை ம.பொ.சி. பின்வருமாறு கூறியுள்ளார்.

"இந்தக் கட்டுரைகளுக்கு இலக்கிய வட்டாரத்திலும் அரசியல் வட்டாரத்திலும் நல்ல வரவேற்பு கிடைத்தன. 'கல்கி', 'திராவிட நாடு', 'குடியரசு' ஆகிய இதழ்களிலே 'தமிழ் முரசு' முதல் புத்தகத்திற்கு எழுதப்பட்ட மதிப்புரையிலே என்னுடைய அரசியல் - இலக்கியக் கட்டுரைகள் வெகுவாகப் பாராட்டப்பட்டிருந்தன."[13]

'தமிழகத்தில் தமிழரசு' பதினாறு பக்கங்களில் (பக். 14 முதல் பக். 30 வரையில்) வெளிவந்தது. பண்டைத் தமிழகத்தின் அரசியல், சமூக, சமய, கலைகள், வாணிபம் முதலானவற்றின் சிறப்புகளை விதந்தேறிய பின்பு அதன் வீழ்ச்சியையும் விளக்கிவிட்டுப் புதிய தமிழகத்திற்கான தோற்றத்தின் அவசியத்தை விரித்துரைத்துள்ளார், ம.பொ.சி.

1946 லேயே 'புதிய தமிழகம்' எவ்வாறு அமைய வேண்டும் என்று ம.பொ.சி. விளக்கியது இத்துறையில் வெளிவந்த முதல் கட்டுரையாகும். கட்டுரை வடிவத்திற்கு முன்பாகவே ம.பொ.சி.

சொற்பொழிவு வடிவத்தில் 'புதிய தமிழகம்' எனும் தலைப்பில் 11-11-1945 இல் சென்னை மண்ணடிப் பகுதியில் லிங்கிச் செட்டித் தெருவில் ஒரு வீட்டில் நிகழ்ந்த கூட்டத்தில் ஆறு சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.[14]

தமிழ் முரசில் வெளிவந்த முதல் இலக்கியக் கட்டுரையான "வீரக்கண்ணகி"யின் பின்வரும் இறுதிப் பகுதி ம.பொ.சி.யின் புதிய பார்வையை - இலக்கியத்தை அரசியல் நோக்கில் பார்க்கும் புதிய பார்வையாய் - விளக்க வல்லது.

"மேற்சொன்னவற்றிலிருந்து சிலப்பதிகாரம் அநீதி வயப்பட்ட அரசை அழிக்கும் புரட்சி உணர்ச்சியை மக்களுக்கு, சிறப்பாகப் பெண்களுக்குப் போதிப்பதற்காகவே எழுதப்பட்ட **அரசியல் புரட்சி நூல்** என்பதை எளிதில் உணரலாம். எனவே, அதில் நமக்குக் காட்சியளிப்பவர் மறக்கற்புடைய **வீரக்கண்ணகியே** யாவார் என்றுதான் சொல்ல வேண்டும்."

புத்தகமாக வெளிவந்த ஏழுமாத காலக்கட்டத்தில் தமிழ் முரசில் வெளிவந்த அரசியல் கட்டுரைகள் 19, இலக்கியக் கட்டுரைகள் 23. இவற்றுள் ம.பொ.சி.யின் அரசியல் கட்டுரைகள் 13, இலக்கியக் கட்டுரைகள் 4.

மாதமிருமுறையாக (1947 சனவரி 1 - 1948 மார்ச் 1) வெளிவந்த தமிழ் முரசு இதழ்களிலும் புதிய பார்வையில் இலக்கியக் கட்டுரைகளைத் தொடர்ந்தார்.

1-8-1948 முதல் 14-1-1949 வரையில் தமிழ் முரசு வார இதழாக வெளிவந்தது. பதினைந்து மாதங்களுக்குப் பிறகு 1950 மே முதல் 1951 செப்டம்பர் வரையில் தமிழ் முரசு மாத இதழாக வெளிவந்தது. இந்தக் காலக்கட்டத் தொகுப்பில் ம.பொ.சி.யின் அரசியல், இலக்கியக் கட்டுரைகளின் எண்ணிக்கை முப்பதாகும். இவற்றுள் இலக்கியக் கட்டுரைகளின் எண்ணிக்கை பன்னிரண்டாகும்.

## பெரியார் – ம.பொ.சி. கருத்துப் போர்

ம.பொ.சி.யின் சிலப்பதிகார இயக்கம் தீவிரமாகப் பரவி வந்ததை இக்காலக்கட்ட தமிழ் முரசு இதழ்களில் விரிவாக அறியலாம்.

30-3-1951 இல் காங்கேயத்தில் திராவிடர் கழகத் தலைவர் பெரியார் சிலப்பதிகாரத்தைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார். "சிலப்பதிகாரமென்பது ஆரியத்தைப் பரப்புகிற ஒரு நூலென்பது

அல்லாமல் வேறு என்ன? ஆரம்பம் முதல் இறுதி வரையில் ஒரே ஆரியந்தானே காட்சியளிக்கிறது" என்பது பெரியார் தொடுத்த தாக்குதல்களில் ஒன்றாகும்.

பெரியாரின் மேற்காணும் பிரச்சாரத்திற்குப் பதிலளித்து 1951 ஏப்ரல் மாத 'தமிழ் முரசு' இதழில் 'கண்ணகியைப் பழிக்கும் கருஞ்சட்டைத் தலைவர்' எனும் தலையங்கத்தை எழுதினார். இதில் ஒரு பகுதி வருமாறு:

"கொடுங்கோலனை எதிர்த்துப் போராடும் கண்ணகியின் புரட்சி, "ஆரியம்!". அறியாது செய்த பிழைக்கு தனது உயிரையே அர்ப்பணிக்கும் நெடுஞ்செழியன் தியாகம் "ஆரியம்!". அரசன் உயிர்நீத்த அக்கணமே தானும் உயிர்நீத்த கோப்பெருந்தேவியின் அன்பு நிறைந்த காதல் "ஆரியம்!". வாய்கொழுத்துப் பேசிய வடவேந்தருடன் போரிட்டுத் தமிழரின் ஆற்றலைப் புலப்படுத்திய செங்குட்டுவன் செயல் "ஆரியம்!".

"மூன்றாகப் பிளவுபட்டுக் கிடந்த தமிழகத்தை ஒன்றாகப் பிணைத்துக் காட்டிய இளங்கோவின் சித்திரம் "ஆரியம்" விலை மகளுக்குப் பிறந்தும் ஒருவனையே காதலித்து வாழ்ந்து அவன் இறந்த பிறகு வாழ்விற்குரிய இன்பங்கள் அனைத்தையும் இழந்து விட்ட மாதவியின் மனப்பண்பு "ஆரியம்!" பார்ப்பனத் தோழியின் கருத்து வழிக் காமன்கோயில் சென்று வழிபட மறுக்கும் கண்ணகியின் செயல் "ஆரியம்!" இத்தனையும் தமிழ்ப் பண்பிற்கு எதிரான 'ஆரிய'ப் பண்புதான் என்றால், அந்த ஆரியப் பண்பு நீடுழி வாழ்வதாக! - - - ஒரு கோடி ஈ.வெ.ரா.க்கள் புறப்பட்டாலும், தமிழ் மக்களிடையே சிலப்பதிகாரத்திற்குள்ள செல்வாக்கைக் குறைக்க முடியாது".

ம.பொ.சி.யின் தமிழ் முரசின் தலையங்கங்களைத் தொகுத்துத் திறனாய்வு செய்த தமிழறிஞர் மா.ரா. இளங்கோவன் மேற்படி தலையங்கத்தின் சிறப்பைப் பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

"மிகச் சிறந்த இலக்கிய நயம் கொண்ட தலையங்கம், இது. இது போன்ற தலையங்கங்களை இதழுலகம் காண்பது அரிது."[15]

1951 சனவரி இதழில் "முரசு வாசகர்களுக்கு" எனும் தலைப்பில் எழுதிய கட்டுரையில், "காவியத்துறையிலும் ஒரு புரட்சிக்கரமான கண்ணோட்டத்துடன் பணிபுரிந்திருக்கிறது. 'முரசு' வள்ளுவர் குறளையும், இளங்கோவின் சிலம்பையும் அரசியல் கண்ணோட்டத்தோடு மக்களுக்கு அறிமுகப்படுத்தும் பணியைத் துவக்கி வைத்தது 'முரசே'யாகும்" என்று ம.பொ.சி. முழங்கியுள்ளார்.

**'செங்கோல்'**

"தமிழ் முரசு" கடைசி இதழில் ஏழு மாதங்களுக்கு முன்பே 1950 டிசம்பர் முதல் தேதியன்று 'செங்கோல்' வார இதழை ம.பொ.சி. தொடங்கினார். ஆரம்பத்தில் சில ஆண்டுகள் வரையில் ஆசிரியர் பொறுப்பை ஏற்கவில்லை, ம.பொ.சி. 1955 இல் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார்.

ம.பொ.சி.யின் அரசியல் பணி மட்டுமன்று, இலக்கியப் பணியும் செங்கோலில் செழிப்புற்றது.

'செங்கோல்' இலக்கியப் பணியின் தனிச்சிறப்பை ம.பொ.சி. பின்வருமாறு விளக்கியுள்ளார்.

"தமிழ் இனக்கண் கொண்டு பழைய தமிழ் இலக்கியங்களை ஆராயும் பணியைச் 'செங்கோல்' தான் தொடங்கி வைத்தது. அரசியல் நோக்குடனும் சமூகச் சீர்திருத்தக் கண் கொண்டும், சோஷலிசப் பார்வையிலும் இலக்கியங்களை ஆராய்ந்து இலக்கியத் துறையிலே மறுமலர்ச்சி ஏற்படுத்தும் தொண்டையும் 'செங்கோல்' தான் தொடங்கியது. அதுவும் ஆக்க வழியிலே; அழிவு முறையில் அல்ல"[16]

'செங்கோல்' இதழிற்கே தமது வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட அதன் நிருவாகி எனதருமை நண்பர் வே. கணபதி, முற்கூறிய கருத்திற்கு மேலும் விளக்கமளிக்கும் வகையில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

"மொழி, சமயம் - கலை ஆகியவற்றிலே தமிழரசுக்கழகத்திற் கெனத் தனியான ஒரு பார்வை உண்டு. உயர்வு - தாழ்வுடைய சாதி வேறுபாடுகளை, சமயப் பகைமைகளை, வர்க்கச் சுரண்டல்களை அகற்றிப் புதிய தமிழகத்தைப் படைக்கும் வகையில் தமிழரசுக் கழகம் தன்னுடைய அரசியல் - பொருளாதார - சமூகக் கொள்கைகளை வகுத்துக் கொண்டிருக்கிறது. இந்தக் கொள்கைகளுக்கேற்பத் தமிழ் இலக்கியங்களைக் கழகத்தவர் ஆராய்கின்றனர். இந்த முற்போக்குக் கொள்கைகளுக்கு ஆதரவாகப் பழைய இலக்கியங்களில் அங்குமிங்குமாகக் காணப்படும் கருத்துகளை எடுத்துக் காட்டும் கட்டுரைகளே 'செங்கோலில்' இடம் பெறுகின்றன. இந்தக் கொள்கைகளுக்கு எதிராகவுள்ள கருத்துகளும் எடுத்துக் காட்டப் பெற்று அவற்றைப் புறக்கணிக்குமாறு தமிழ் மக்களைத் தூண்டும் வகையில் உள்ள கட்டுரைகளும் 'செங்கோலில்' இடம் பெறுகின்றன"[17]

மேற்கண்டவாறு 'புதிய பார்வை'யில் தமிழ் இலக்கியங்களை ஆய்வு செய்ய வேண்டும் என்று ம.பொ.சி. 16-4-1947 இல் சென்னை

வானொலி நிலையத்தில் 'புதிய கற்பனை' எனும் தலைப்பில் உரையாற்றியுள்ளார். இதன் ஒரு பகுதி, வருமாறு:

"இது இலக்கிய மறுமலர்ச்சிக் காலம். உலகமெங்கும் புதுப்புது இலக்கியங்கள் தோன்றுகின்றன. தமிழ் இலக்கியங்கள் மட்டும் இதற்கு விதிவிலக்காக இருப்பது கூடாது. பழைய இலக்கியங்களைப் புதிய பார்வையில் ஆராய்ந்து அவற்றிலுள்ள பயனற்ற கருத்துகளுக்குச் சீட்டுக் கொடுத்து மக்களது வாழ்க்கையில் தோன்றும் புதுப் புதுப் பிரச்சினைகளுக்குப் பொருந்துமாறு வழி நூல்கள் செய்ய வேண்டும். பழமையில் புதுமையைப் புகுத்தும் வழியைப் பாரதியாரும் கையாண்டிருக்கிறார்"[18]

சங்க இலக்கியம் முதல் பாரதி இலக்கியம் வரையிலான ஆழ்ந்தகன்ற இலக்கியப் பரப்பை அறிந்தவர் ம.பொ.சி. தமிழ் இலக்கிய மரபைப் போற்றிப் பெருமிதம் கொண்டவர்.

பெரியார் அவர்கள் "தாய்ப்பால் பைத்தியம்" எனும் வெளியீட்டில் தமிழ் இலக்கியங்களில் 'அறிவு' இல்லை என்பதைப் பின்வருமாறு கூறியுள்ளார்.

"நண்பர் சிவஞானம் கூறும் தமிழ்த்தாய் உண்ட உணவெல்லாம் சிந்தாமணி, சிலப்பதிகாரம், முதலிய பஞ்ச காவியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பாரதம், இராமாயணம், பாகவதம், கந்தபுராணம், திருவிளையாடல் புராணம், பெரியபுராணம் முதலிய இவைகள் தானே? இவைகளில் சுவை இருக்கலாம்; அழகு இருக்கலாம் முன்னேற்றத்துக்கான 'அறிவு' இருக்கிறதா?"[19]

முற்கூறிய பெரியாரின் கருத்திற்கு மாறுபட்ட வகையில் ம.பொ.சி. தமிழ் இலக்கியங்கள் பலவற்றை செங்கோலில் எழுதியுள்ளார். செங்கோல் வெள்ளி விழா மலரில், செங்கோலின் இலக்கியப் பணியைக் குறித்து எழுதியதாவது.

"செங்கோலி"ல் சிலப்பதிகாரம் பற்றிய கட்டுரைகளைப் பெரும்பாலும் நான்தான் எழுதி வந்திருக்கிறேன் என்றாலும், அந்தப் பணியை எனக்கே ஏக போகமாக்கிக் கொள்ளவில்லை; பிறருக்கும் வாய்ப்பளித்து வந்திருக்கிறேன். இதுவரை 28 பேர் ஆராய்ச்சியாகவோ, விமர்சனமாகவோ எழுதிய சிலப்பதிகாரக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றின் எண்ணிக்கை 43 ஆகும்.

"கடந்த கால் நூற்றாண்டுக் காலத்தில் "செங்கோலில்" வெளிவந்த இலக்கியப் பேச்சுகளின் - கட்டுரைகளின் மொத்த

எண்ணிக்கை 431. இலக்கியங்கள் பெயராலும் கவிஞர்கள் பெயராலும் அவற்றைப் பிரித்துப் பார்ப்போம்.

சங்க இலக்கியம் 14, சிலப்பதிகாரம் 143 (நூல் முழுவதற்கும் எழுதிய உரை நீங்கலாக), திருக்குறள் 49; மணிமேகலை 6; முத்தொள்ளாயிரம் 7; கம்ப ராமாயணம் 46; திருத்தொண்டர் புராணம் 2; நந்திக்கலம்பகம் 5; கலிங்கத்துப்பரணி 20; வள்ளலார் - திருவருட்பா 33; பாரதியார் 71; பாவேந்தர் பாரதிதாசன் 4; நாமக்கல் கவிஞர் 4; மாணிக்க வாசகர், மனோன்மணியம் சுந்தரனார், பட்டினத்தார் மற்றும் பல புலவர் பற்றியவை 27.

1976 க்குப் பிறகு செங்கோலில் வெளி வந்த ம.பொ.சி.யின் இலக்கியக் கட்டுரைகள் பிற இலக்கியக் கட்டுரைகளின் எண்ணிக்கை தொகுத்து, வகுத்து அறியப்பட வேண்டும். செங்கோலின் கடைசி இதழ் 13-8-1995 இல் வெளிவந்தது. இந்த இறுதி இதழில் "என் இலக்கிய வாழ்க்கை' எனும் ம.பொ.சி.யின் ஆறாவது கட்டுரை வெளி வந்துள்ளது. செங்கோலில் வந்த ம.பொ.சி.யின் கட்டுரைகள் நூல்களாக வெளிவந்தன.

## தமிழன் குரல்

செங்கோல் வெளிவரத் தொடங்கிய பின் - மூன்றாண்டுகள் கழித்து - 1954 ஆகஸ்ட்டில் 'தமிழன் குரல்' என்ற மாத ஏட்டிற்கு ஆசிரியரானார். ம.பொ.சி. இந்த இதழை ம.பொ.சி. நூல்களை வெளியிட்டு வந்த 'இன்பநிலையம்' சோம. சுவாமிநாதன் ம.பொ.சி.யின் தூண்டுதலின் பேரில் தொடங்கினார். 'தமிழன்குரல்' தொடர்ந்து பன்னிரண்டு மாதங்கள் வெளி வந்தது. இந்த இதழ் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட இலக்கிய இதழாகவே வெளி வந்தது.

'நாம்' எனும் தலைப்பில் எழுதப் பெற்ற தலையங்கத்தின் ஒரு பகுதி, பின்வருவது:

'தமிழகம் தனி ஆட்சி பெற வேண்டும்; துண்டுபட்ட தமிழ்ப் பகுதிகளெல்லாம் தாய்த் தமிழகத்தோடு ஒன்று படவேண்டும்; தமிழகத்தில் தமிழ் ஒன்றே ஆட்சி மொழியாதல் வேண்டும்; இந்தியக் குடியரசில் 'தமிழர் ஒரு தனித்தேசிய இனமாக, தமிழாட்சி ஒரு சுயாட்சி அங்கமாக விளங்க வேண்டும். இவையே தமிழ் இனத்தவரின் தேசியக் கோரிக்கைகள். இந்தக் கோரிக்கைகளுக்காகக் குரல் கொடுப்பதே நமது கொள்கை.

சுருங்கச் சொன்னால், மொழி, கலை, இலக்கியம், அரசியல், சமூகம், பொருளாதாரம் ஆகிய எல்லாத்துறைகளிலும் தமிழ் இனத்தின் நலன்களைக் காக்கவும், அவற்றை வளர்க்கவுமே 'தமிழன் குரல்' விடுதலைத் திருநாளன்று வெளிவருகின்றது".[20]

முதல் இதழில் வெளி வந்த ம.பொ.சி.யின் "இளங்கோவின் இன உணர்ச்சி" ('ஞானம்' எனும் புனைபெயரில் எழுதப்பெற்றது) எனும் இலக்கியக் கட்டுரையில் தமிழ் இனக்கண் கொண்டு புதிய பார்வையில் சம கால அரசியல் ஒருமைப்பாட்டுணர்விற்குத் தேவைப்படும் விளக்கத்தை ம.பொ.சி. அளித்துள்ளார். இதில், ஒரு பகுதி, வருமாறு:

"பிளவுபட்டுப் பிணக்குற்றுக் கிடந்த தமிழகத்தைக் கலாச்சார வழி ஒன்றாக்கி, 'தமிழகம் ஒரே நாடு - தமிழர் ஒரே இனத்தவர்' என்ற உணர்ச்சிகளைத் தமிழ் மக்களிடையே உண்டாக்கிய பெருமை இளங்கோவடிகளின் தனி உரிமை. ஆம், இளங்கோவடிகளை ஐக்கிய தமிழகத்தின் தந்தை எனலாம். . . . . .

இன உணர்ச்சி காரணமாகத் தமிழர் சாதி, சமய, வருண வேற்றுமைகளின்றி ஒற்றுமைப்பட்டு ஒரே குடும்பமாக வாழ்ந்த செய்திகளைச் சிலப்பதிகாரத்தில் காதைகள் தோறும் காணலாம். இளங்கோ அடிகள் இயற்றிய சிலப்பதிகாரக் காப்பியத்தின் உயிராக இருப்பது 'தமிழர்' என்ற இன உணர்ச்சிதான்.[21]

## "இலக்கியத்தின் எதிரி ஈ.வெ.ரா."

தமிழன் குரலில் ம.பொ.சி.யின் இலக்கியக் கட்டுரைகள் பல வெளிவந்தன. 'தமிழ்முரசு' இதழொன்றில் பெரியார் சிலப்பதிகாரக் காப்பியத்தைத் தாக்கிப் பேசியதை எழுதியது போல, 'தமிழன்குரல்' இதழில், பெரியார் கம்ப இராமாயணத்தை எதிர்த்துப் பேசி வந்ததற்கு ம.பொ.சி. பதிலளித்துள்ளார். "இலக்கியத்தின் எதிரி ஈ.வெ.ரா." என்னும் கட்டுரையின் தலைப்பு ம.பொ.சி.யின் இலக்கியப் பற்று ஆவேசத்தை உணர்த்துகின்றது. கட்டுரையின் சில பகுதிகள் பின்வருவன:

"பெரியார் ஈ.வெ.ரா. அரசியலில் நல்ல அனுபவமுடையவர். சமூகச் சீர்கேடுகளைப் பற்றியும் வெகுவாக ஆராய்ந்திருக்கிறார். இந்த இரண்டு துறைகளிலும் அவருடைய திறமைக்கு இன்னொருவரை ஈடாகச் சொல்ல முடியாது. ஆம், அந்தத் திறமையை வேண்டுமென்றே தீய வழியில் பயன்படுத்துகிறார் என்று குற்றம் சொல்லலாம். ஆனால் திறமையைக் குறை கூற முடியாது.

இலக்கியத்துறையில் அதுவும் ஆராய்ச்சி வழியில் ஈ.வெ.ரா.வுக்குப் போதிய அறிவோ அனுபவமோ இருப்பதற்கில்லை. பண்டைத் தமிழ் இலக்கியங்களைப் பற்றியே அவருக்கு நல்லெண்ணம் கிடையாது. பழைமை எனப்படும் அனைத்துமே பயனற்றவை; தீயிலிட்டுப் பொசுக்கப்பட வேண்டியவை என்பது அவருடைய திடமான கருத்து. ஆகவே, தமிழ்க் காப்பியங்களில் நல்லெண்ணமும் நம்பிக்கையுமில்லாத ஈ.வெ.ரா.வுக்கு அவற்றைப் பற்றி ஆழ்ந்த அறிவோ, அனுபவ ஞானமோ இருக்குமென்று எப்படி நம்பமுடியும்?

ஆயினும், இலக்கியத்துறையில், எல்லாம் உணர்ந்தவர் போல அடிக்கடி அபிப்பிராயம் கூறமுற்படுவதும், 'ஆராய்ச்சி' என்ற பெயரால் ஆபாசக் கருத்துகளை வெளியிடுவதும் ஈ.வெ.ரா.வுக்குத் தொழிலாகி விட்டது. வேறு வேறு துறைகளில் அவருடைய கருத்துகளையும் செயல்களையும் வரவேற்பவர்கள் கூட இலக்கியத்துறையில் அவருடைய போக்கை ஏற்றுக் கொள்வதில்லை.

இப்போது ஈ.வெ.ரா. கம்ப ராமாயணத்தையும் அதில் கடவுளாக வர்ணிக்கப்படும் ராமனையும் எதிர்த்துப் பிரச்சாரம் செய்ய முற்பட்டிருக்கிறார்.

ஈ.வெ.ரா. தற்போதைக்கு ராமாயணத்தை மட்டுமே எதிர்த்தாலும் தமிழ் இலக்கியங்கள் எனப்படும் எல்லா நூற்களுக்குமே எதிரிதான். முன்னொரு சமயம் சேக்கிழார் இயற்றிய சைவ சமயக் காப்பியமான பெரிய புராணத்தை எதிர்த்தார். தீயிலிட்டுக் கொளுத்தவும் தேதி நிச்சயித்தார். பின்னொரு காலத்தில் சிலப்பதிகாரத்தைத் தமிழரசுக் கழகத்தார் போற்றுகிறார்கள் என்பதற்காக ஈ.வெ.ரா. வாயில் வந்தபடி தூற்றினார். இதற்கெல்லாம் முன்பு பெண்கள் அடிமைப்பட்டதற்கே திருக்குறள்தான் காரணம் என்று அவர் நூல் எழுதியதும் உண்டு.

ஆம், சுருங்கச் சொன்னால், ஈ.வெ.ரா. இலக்கியங்களின் எதிரி - கடவுள் நெறியின் எதிரி. ஒரு வார்த்தையில் சொன்னால் நாட்டில் நடைமுறையிலிருக்கும் நல்லதற்கெல்லாம் எதிரி"[22]

'தமிழன் குரல்' எனும் பெயரில் தோன்றிய இதழிற்கு முன் 1947 இல் வெளிவந்த ம.பொ.சி.யின் ஒரு நூலின் பெயரும் 'தமிழன் குரல்' என்பதாகும். இந்நூலில் 'தமிழன் குரல்' இதழிற்கு முன்னோட்டமான ம.பொ.சி.யின் அரசியல் இலக்கியப் பிணைப்புக் கோட்பாடு பின்வருமாறு கூறப்பெற்றுள்ளது.

"திருக்குறள் மட்டுமன்றி, பழைய தமிழ் இலக்கியங்கள் அத்தனையும் நம்முடைய அரசியல், பொருளாதார மறுமலர்ச்சிக்கு மிகவும் பயன்படக் கூடியவை என்பதில் ஐயமில்லை. ஆனால், அப்படிப் பயன்படாமலிருப்பதற்குக் காரணம் இன்றைய அரசியல் தலைவர்களுக்கு இலக்கிய ஞானமும், தமிழ்ப் பண்டிதர்களுக்கு அரசியல் அறிவும் இல்லாததேயாகும் - இனியேனும் இந்நிலை மாற வேண்டுமானால் தமிழும் அரசியலும் ஒன்றுபட்டே தீர வேண்டும்"[23]

தமிழ் முரசு, செங்கோல், தமிழன் குரல் - எனும் மூன்று இதழ்களில் ம.பொ.சி.யின் புத்தெழுச்சிக்கான இலக்கியக் கொள்கைகள், கட்டுரைகள் நிறைந்திருக்கின்றன.

## சிலப்பதிகார இயக்கம்

சிலப்பதிகார மாநாடுகள் சிலப்பதிகார வகுப்புகள், சிலப்பதிகாரப் பேருரைகள், ஆய்வுகள் மூலம் ஓர் இயக்கத்தையே உருவாக்கிய பெருமை, முன்னுரிமை ம.பொ.சி.க்கே உரியது.

தமிழ் இலக்கியங்கள் பற்றிய மாநாடுகள் ம.பொ.சி. இலக்கிய இயக்கத்திற்கு முன்பு நடைபெற்றுள்ளன. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், அதன் நிறுவனர் வ. சுப்பையா பிள்ளையின் வழிகாட்டுதலின் பேரில் பல இலக்கிய மாநாடுகளை நடத்தி, சொற்பொழிவுகளையும் நூல்களையும் வெளியிட்டுள்ளது. 1945 முதல் 1960 வரையில் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், பெரியபுராணம் முதலானவற்றிற்கு இலக்கிய மாநாடுகளைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நடத்தியுள்ளது.

1940-41 களில் மறைமலை அடிகள், தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதையர், புலவர்கள் - அறிஞர்கள் தளத்தில் திருக்குறள் மாநாடுகளை நடத்தியுள்ளார். 1946 இல் பெரியார் பரந்துபட்ட மக்கள் தளத்தில் திருக்குறள் மாநாடு நடத்தியுள்ளார்.

சிலப்பதிகாரத்திற்காக முதன் முதலில் ஒரு மாநாட்டை ம.பொ.சி. தான் நடத்தினார். 24-3-1951 இல் சென்னை இராயப்பேட்டையில் கண்ணகி பந்தலில் டாக்டர் மு.வ. தலைமையில் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், பேரறிஞர் ரா.பி. சேதுப்பிள்ளை, டாக்டர் ந. சஞ்சீவி முதலான தமிழறிஞர்கள் பங்கேற்ற முதல் சிலப்பதிகார மாநாடு நடைபெற்றது, "தமிழின் வரலாற்றில் முதன் முதலாக நடந்த சிலப்பதிகார மாநாடு" என்று ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார்.[24] தலைமை ஏற்ற டாக்டர் மு.வ.வும், "பல நூற்றாண்டுகளாகத் தமிழ்ப் பொது மக்கள் மறந்திருந்த கண்ணகி

புகழ் மீண்டும் விளங்கத் தொடங்குகிறது. அத்துறையில் இது முதல் முயற்சி" என்று சாற்றியுள்ளார்.[25]

முதல் நாள் சிலப்பதிகார மாநாடு, அடுத்த நாள் அரசியல் மாநாடு என்று ம.பொ.சி. ஏற்பாடு செய்தது அக்காலத்தில், புதிய முயற்சியாகவும் பேசப்பட்டது. இரண்டு மாநாட்டிற்கும் தனித்தனி வரவேற்புக் குழுக்கள் அமைந்தன.

ம.பொ.சி. நடத்திய சிலப்பதிகார மாநாடுகளுக்கும், இவற்றிற்கு முந்திய பிற இலக்கிய மாநாடுகளுக்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு உண்டு. சிலப்பதிகார மாநாடுகள் இலக்கியச் சுவை, இலக்கியச் செய்திகளை மட்டும் மக்களிடையே பரப்பவில்லை. இந்தியத் தேசிய ஒருமைப் பாட்டிற்கும், தமிழ் இனப்பற்றுடன் ஐக்கியத் தமிழகத் தத்துவ உருவாக்கத்திற்கும் ஆதரவு திரட்டும் வகையில் சிலப்பதிகார மாநாடுகள் நிகழ்த்தப்பட்டன என்பது தான் குறிப்பிட்ட வேறுபாடாகும்.

தமிழ் இலக்கியங்களில் சிலப்பதிகாரத்தைத் தேர்வு செய்து அதன் பிரச்சாரத்தை ஓர் இயக்கமாக நடத்தியதற்கான காரணத்தை ம.பொ.சி. பின்வருமாறு விளக்கியுள்ளார்.

"தமிழரசுக்கழகத்தின் சார்பில் காங்கிரஸ் பாரம்பரியத்தின் பிரதிநிதியாகவும் நின்று சிலப்பதிகாரக் காப்பியத்தை மக்கள் மத்தியிலே கொண்டு வர நாம் விரும்பியதற்குக் காரணமுண்டு. திருக்குறளையோ, கம்ப ராமாயணத்தையோ நான் விரும்பாத வனல்லன், மனமார விரும்பக் கூடியவன். ஆயினும் இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டிற்குக் கேடில்லாத வகையில் தமிழினத்தை ஒன்று படுத்த நான் எடுத்துக் கொண்ட முயற்சிக்கும் பயன்படக் கூடிய ஒரு இலக்கியம் தமிழில் உண்டென்றால், அது சிலப்பதிகாரம்தான் வேறில்லை.

இளங்கோ தந்த சிலம்பு தமிழினத்தின் பொதுச் சொத்து. இந்தியாவின் தேசிய இலக்கியம். அதனால்தான் சிலப்பதிகாரத்தை ஒரு கருவியாகக் கொண்டு பொது மக்கள் நடுவில் இலக்கிய இயக்கத்தைத் தொடங்கி வைத்தேன்".[26]

'இயக்கம்' எனும் சொல்லிற்குரிய ஆழ்ந்த பொருட் செறிவும், வினைத்திட்பமும் ம.பொ.சி.யின் சிலப்பதிகார இயக்கத்தில் விளக்கமுற்றது. இவ்வுண்மையை ம.பொ.சி.யின் பின்வரும் கருத்து வழியும் அறியத்தக்கது.

“சென்னையில் சிலப்பதிகார மாநாடு நடந்ததன் பின்னுள்ள இருபதாண்டுக் காலத்திலே, தமிழ்நாட்டில், பட்டினங்களில் மட்டுமின்றிப் பட்டிதொட்டிகளிலெல்லாம் சிலப்பதிகார மாநாடு நடத்தியிருக்கின்றனர். தமிழரசுக் கழகத்தார்”.

கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் சிலப்பதிகார மாநாடுகளை பிற அரசியல் கட்சிகளும் நடத்த முற்படவில்லையே எனும் தமது ஆதங்கத்தைச் ‘சிலம்புச் செல்வர்’ ம.பொ.சி. பின்வருமாறு வெளியிட்டுள்ளார்.

“கலாச்சாரத் தொடர்புடைய அரசியல் இயக்கமான தமிழரசுக் கழகம் எடுத்துக் கொண்ட இந்தப் புது முயற்சியை மற்ற அரசியல் கட்சிகள் பின்பற்றியிருக்குமானால், தமிழினம் இதற்குள் புது வாழ்வு பெற்றிருக்கும். ஒன்றிரு சந்தர்ப்பங்களில் காங்கிரஸ் மாநாட்டோடு இலக்கிய விழாவும் நடத்தப்பட்டதுண்டு. ஆனால், அந்த முயற்சி நீர்மேல் குமிழி போல் தோன்றி மறைந்து விட்டது”.[27]

‘அரசியலும் இலக்கியமும்’ எனும் கட்டுரை ‘தமிழ் முரசு’ ஏப்ரல் 1951 இதழில் வெளிவந்துள்ளது. முதல் சிலப்பதிகார மாநாட்டிற்குத் தலைமை தாங்குமாறு டாக்டர் மு. வரதராசனாரைக் கேட்டுக் கொண்டு ம.பொ.சி. ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கத்தின் கட்டுரை வடிவம் ‘அரசியலும் இலக்கியமும்’.

இலக்கிய மேடைகளில் கட்சிக் காழ்ப்புப் பிரச்சாரத்திற்கு இடமளிக்கக் கூடாது என்னும் கருத்தை முற்கூறிய கட்டுரையில் ம.பொ.சி. பின்வருமாறு உணர்த்தியுள்ளார்.

“காங்கிரசுக்கு மாறுபட்ட கட்சியினரும் இலக்கிய மாநாடுகள் கூட்டுகின்றார். ஆனால், நான் நினைத்தவரை கட்சி மாநாட்டிற்கும் இலக்கிய மாநாட்டிற்கும் அங்கே வேற்றுமை காண முடியவில்லை. கட்சிக் கருத்துகளை வற்புறுத்துவது பிழையன்று. ஆயினும் பிடிக்காத சாதியினரை - கட்சியினரைப் பழித்துப் பேசுவதற்கென்றே இலக்கியங்களைப் பயன்படுத்துவது கேவலமான செயல் என்பதை கூறித்தான் ஆக வேண்டும்.

“அப்படிப்பட்டவர்களுக்கும் நல்வழி காட்டுவதற்காகவே தேசியவாதிகளாகிய நாங்கள் இந்த இலக்கிய மாநாட்டைக் கூட்டியிருக்கிறோம். இன்றைய மாநாட்டுப் பேச்சாளர்கள், எந்த ஒரு தனி மனிதருடைய மனதைப் புண்படுத்தும் வகையில் ஒரு வார்த்தை கூட யாரும் பேசமாட்டார்கள் என்று உறுதி கூற முடியும்.

இலக்கியத்தைத் தவறான வழிகளில் பயன்படுத்துவோரோடு திருத்தும் வகையில் பேசுவோமே ஒழிய , திட்டிப் பேசமாட்டோம்.

1946 இல் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ம.பொ.சி. ''சிலப்பதிகாரமும் தமிழரும்'' எனும் தலைப்பில் உரையாற்றினார். அரசியல், சமூக மாற்றத்திற்கான புதிய கண்ணோட்டத்தில் ம.பொ.சி. சிலப்பதிகாரத்தை எவ்வாறு பார்த்தார் என்பதைப் பின்வருமாறு அவ்வுரையில் விளக்கியுள்ளார்.

"நான் ஓர் அரசியல் வாதி, அது மட்டுமல்ல; ஆளப் பிறந்த மக்களை அடிமை கொண்ட அந்நிய ஆட்சியை, வாழப் பிறந்த மக்களைச் சாக வைக்கும் முதலாளித்துவத்தை எதிர்க்கும் போராட்டவாதி! ஆகவே, நான் சிலப்பதிகாரத்தை அரசியல் கண்கொண்டே நோக்குகின்றேன். அடிமையைத் தகர்க்கும் ஆண்மைமிக்க போராட்டத்திற்கு அது உணர்ச்சி ஊட்டுகிறதா என்றும் பார்க்கின்றேன். சிலப்பதிகாரம் மட்டுமல்ல; வேறு எந்தக் காவியமாயினும் அவை அனைத்தையும் கூட இந்தக் கண்கொண்டே பார்க்கிறேன். . . . .

தமிழ் இலக்கியங்களைச் சுதந்திரப் போராட்டத்திற்குப் பயன்படுமாறு செய்ய வேண்டியது நம் கடமை. அந்த உரிமை நமக்கு உண்டு. இதைத் தவிர பேரின்ப வீட்டிற்கு வழிகாட்டும் எந்தப் பேரிலக்கியமும் இப்போது நமக்குத் தேவையில்லை. நம்மவர் நாடு நசியுங்காலை வானவர் நாடு வலியவரினும் அதை நான் வேண்டேன்....

சிலப்பதிகாரத்தில் நான் காண்பது கதிரவனைச் சாட்சிக் கழைத்த வெட்டுண்ட கணவனை உயிர் பெற்றெழச் செய்த அறக்கற்புடைய கண்ணகியன்று. குற்றமற்ற கோவலனைக் கொன்று குவித்த கொடுங்கோலனை அழித்து மதுரையைத் தீக்கிரையாக்கிய மறக் கற்புடைய புரட்சிக் கண்ணகியே எனக்குக் காட்சியளிக்கிறாள்..

'சிலப்பதிகாரத்தில் அல்வழிப்பட்ட அரசை ஒழிப்பேன்' என்று உறுத்தெழுந்து புரட்சி செய்த கண்ணகி போன்று இன்று நம் தமிழ்ப் பெண்கள் ஆகி விடுவார்களானால் இந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மட்டுமல்ல, வேறு எந்த ஏகாதிபத்தியத்தையும் கூட அரை நொடியில் அழித்து முடிக்கலாம். தமிழகத்தில் தமிழரசு நிறுவலாம்.

இளங்கோவடிகள், அநீதியை எதிர்த்து நிற்கும் ஆண்மையை - அரசியல் வெறியை - புரட்சி வழியைப் போதிக்கத்தான் சிலப்பதிகாரத்தைச் செய்திருப்பார். மற்றபடி ஊழின் வலியை

உணர்த்துவதற்கோ, செத்தாரை எழுப்பும் கற்பின் பெருமையைச் செப்புவதற்கோ செய்திருக்க மாட்டார். ஏனெனில் இத்தகைய கதைகள், நீதி நூல்கள் இளங்கோ காலத்திலும் இருந்தன. திருக்குறளை விட இன்னொரு நீதி நூல் இயற்ற இளங்கோ எண்ணி யிருப்பாரோ?"[28]

ம.பொ.சி.யின் இவ்வுரை அவருடைய முதல் இலக்கிய நூலாகும் என்பதும், அவருடைய சிலப்பதிகார இயக்கத்தின் ஊற்றுக் கண்களுள் ஒன்றாகும் என்பதும் கருத்தில் நிறுத்தத் தக்கன. சொற்பொழிவுகள், மாநாடுகள், ஆய்வு நூல்கள் முதலானவற்றைக் கொண்டு அவர் தலைமை தாங்கி நடத்திய சிலப்பதிகார இயக்கம் ஏற்படுத்திய தாக்கங்கள் தனி ஆய்விற்குரியன.

## அறிஞர் அண்ணாவின் பாராட்டு

ம.பொ.சி. சாதனை செய்து காட்டிய முதல் சிலப்பதிகார மாநாட்டை அறிஞர் அண்ணா அவருக்கேயுரிய நையாண்டி பாணியில் பன்னிரண்டு பக்கங்கள் கொண்ட 'திராவிட நாடு' இதழில் ஏழு பக்கங்களில் விமர்சனம் செய்துள்ளார். அண்ணாவின் விமர்சனத்தின் மீதான விமர்சனத்தைச் 'சிலம்பொலிக்கு எதிரொலி' எனும் தலைப்பில் தமிழ் முரசு இதழில் (சிலப்பதிகார மலர், ஏப்ரல் 1951) எழுதியுள்ளார்.

காலப்போக்கில் அறிஞர் அண்ணா, சிலம்புச் செல்வரின் சிலப்பதிகார இயக்கச் சாதனையைப் பாராட்டியுள்ளார். 16-6-1967 இல் ம.பொ.சி.யின் 62 வது பிறந்த நாள் விழாவில் தமிழ்நாடு அரசு முதலமைச்சரான அறிஞர் அண்ணா மனந்திறந்து பின்வருமாறு பாராட்டினார்.

"தமிழர் இதற்கு முன்னாலே கேட்டுக் கேட்டு, எப்படி இருக்குமோ, எப்படி இருக்குமோ? என்று வியந்து கொண்டிருந்த - ஆனால், ஆராயத் தவறிய; ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்த - ஆனால் அறிந்து கொள்ளத் தவறிய சிலப்பதிகாரம் போன்ற தமிழ்ப் பெருங்காப்பியங்களை, தமிழ்ப் பெரும் புலவர்கள் தாங்கள் படித்த பத்து நூல்களோடு இது பதினொன்றாவது நூல் என்ற அளவில் அடுக்கி வைத்திருந்த சிலப்பதிகாரத்தை ம.பொ.சி. அவர்கள் மக்கள் மன்றத்தின் முன்னாலே கொண்டு வந்தார்கள். அதனுடைய உட்பொருளை, விரிவுரையை, அதிலே ஆழ்ந்த பொருளோடு தரப்பட்டிருக்கிற அற நெறிகளை, அரசியல் முத்துக்களை மக்கள் மன்றத்திலே ம.பொ.சி. அவர்கள் எடுத்து வைத்தார்கள்.

அதே நேரத்தில் பெரியாரும் நானும் கம்பராமாயணத்தை எரிக்கின்ற கிளர்ச்சியிலே ஈடுபட்டிருந்தோம். அப்பொழுது நான் அவரிடத்தில் வாதாடினேன்.

தமிழருக்கு இலக்கியத்திலே உள்ள சுவையைப் போல் வேறெந்த நாட்டினருக்கும் இருக்க முடியாது. கம்பராமாயணம் தமிழனுக்குத் தேவைப்படாத கருத்துகளை அளிக்கிறது என்பதற்காக அதனை நீக்குவதனால், போக்குவதானால், அழிப்பதானால், அவனுக்குப் பற்றுக்கோடாக இருப்பதற்குத் தனிப் பெரும் காப்பியமாகச் சிலப்பதிகாரத்தை அவன் கரத்திலே தர வேண்டும் என்று நான் சொல்லிக் கொண்டிருந்தேன்.

நான் அப்படி ஒரு கூட்டத்திலே சொன்னவுடன் பெரியாருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்து ஒரு அரை மணிநேரம் கண்ணகியைப் படாதபாடு படுத்தி விட்டார்.

நான் திராவிடர் கழகத்தின் மூலமாக எந்தச் சிலப்பதிகாரத்தை மக்கள் மன்றத்திற்கு அளிக்க வேண்டும் என்று எண்ணி அளிக்க முடியாமல் ஏமாற்றத்தைக் கண்டேனோ, அந்தச் சிலப்பதிகாரத்தைத் தமிழரசுக் கழகத்தலைவர் - என் மதிப்புமிக்க நண்பர் - ம.பொ.சிவஞானம் அவர்கள் தமிழர்களுக்குத் தந்ததற்காக நான் உள்ளூரில் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறேன்."[29]

## இளங்கோ விழா

ம.பொ.சி.யின் சிலப்பதிகார இயக்கத்தில் அவர் இளங்கோவடிகளுக்கு விழா எடுத்தது குறிப்பிடத்தக்கது. 1956 இல் சித்திரா பௌர்ணமியில், செயிண்ட் மேரிஸ் மண்டபத்தில் தமிழரசுக் கழகத்தின் சார்பில் "இளங்கோவிழா" வை நடத்தினார் ம.பொ.சி. இந்த விழா ஒரு மாநாடு போலவே நடந்தது. இளங்கோவடிகள் பெயரில் முதன் முறையாக இலக்கிய விழா என்பது குறிப்பிடத்தக்கது. அழைப்பிதழ்கள் ராஜாஜிக்கும் பெரியாருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

## ராஜாஜி – பெரியார் வாழ்த்துச் செய்திகள்

முதல் இளங்கோ விழாவிற்கு ராஜாஜியும், பெரியாரும் வாழ்த்துச் செய்திகளை அனுப்பியது, விழாவின் முக்கியத்துவத்தை உணர்த்தியது. ராஜாஜி 21-4-1956 தேதியிட்டு அனுப்பிய வாழ்த்துச் செய்தி வருமாறு:

"பெரியோர்கள் சேர்ந்து நடத்தும் இளங்கோவடிகள் விழாவுக்கு என் வாழ்த்துக்கள்.

அறமும், அறத்தைச் சார்ந்த பொருளும், இன்பமும், வீடும், இவற்றைக் கோரும் மக்களுக்கு எல்லாச் சமயங்களும் ஒன்றே. சைவம், வைஷ்ணவம், பௌத்தம், ஜைனம், அனைத்தும் அறத்தின் வழி நடக்கும் மார்க்கங்கள். இந்த இளங்கோவடிகள் விழா சிறப்பாக நடைபெற்று இலக்கிய இன்ப உணர்ச்சியும் பக்தியும் ஒன்று கூடி ஆண்டவன் திருவடிகளுக்குத் தமிழ் மக்களை இட்டுச் செல்வதாக! அந்த வழியில் இடையே அனைத்தையும் பெறலாம்.

இராஜகோபாலாச்சாரி.[30]"

இலக்கிய இன்பமும் பக்தியுணர்ச்சியும் வேண்டி ராஜாஜி வாழ்த்துச் செய்தியனுப்ப, பெரியார் 20-4-1956 தேதியிட்டு விழாவை வாழ்த்தும் அளவில் பின்வருமாறு செய்தியனுப்பினார்.

"அன்புள்ள நண்பர் திரு. ம.பொ.சிவஞானம் அவர்களுக்கு ஈ.வெ.ராமசாமி வணக்கம்.

தாங்கள் அன்புடன் அனுப்பித் தந்த சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் விழா அழைப்பிதழ் கிடைக்கப்பெற்றேன். மிக்க நன்றி. மேற்படி இளங்கோவிழா சீரும் சிறப்புமுற நடைபெற வேண்டும் என்ற ஆசையைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

-ஈ.வெ. ராமசாமி"[30அ]

இந்த விழாவில் அன்றைய தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி, நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார், பி.டி. ராஜன், கவிஞர் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை, பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இலக்கியங்களில் இனவுணர்ச்சி

இலக்கிய ஆய்வில் ம.பொ.சி.யின் புதிய பார்வைக்கும், புதுமை முயற்சிக்கும் இந்நூலும் ஒரு சான்று. மானுடவியல் ஆய்வின் ஒரு பகுதியான இனவியல் ஆய்வை ம.பொ.சி. முதன் முதலில் இந்நூலில் நிகழ்த்தியுள்ளார். தமிழிலக்கிய ஆய்வுலகில் ம.பொ.சி.க்கு முன் எவரும் இனவியல் ஆய்வு குறித்துச் சிந்தித்ததாகத் தெரியவில்லை. ம.பொ.சி. தான் துணிந்து இந்த ஆய்விற்கு வழி வகுத்தார்.

10-2-1975 முதல் 27-7-1976 வரையில் செங்கோலில் தொடராக வெளிவந்த இந்த ஆய்வு 1976 இல் தனி நூலாக வெளிவந்தது. மொழிவழி மாநிலமாகத் தமிழ் மாநிலம் 1956 நவம்பர் 1 இல்

தோன்றிய பிறகு தமிழினம் பற்றிய வரலாற்றாய்வின் தேவையை ம.பொ.சி. நிறைவு செய்தார்.

"இந்தியத் தேசிய ஒருமைப் பாட்டின் அடிப்படையில் இன ஒருமைப்பாடு எய்தவும், வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.. . . . . இந்த இன ஒருமைப்பாட்டை அழித்து இந்தியத் தேசிய ஒருமைப்பாடு வாழ்வதோ, இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டை அழித்து இன ஒருமைப்பாடு நிலைப்பதோ இனி சாத்தியமில்லை" இந்த நல்ல சூழ்நிலை உருவாகியிருக்கும் நேரத்திலே தமிழ் இனவுணர்ச்சியை வளர்க்கப் பாடுபடுவது தமிழர் கடமையாகிறது. இந்தியத் தேசிய ஒருமைப் பாட்டில் நம்பிக்கையுடைய தேசியவாதிகளுக்கோ இது தவிர்க்க முடியாத - தவிர்க்கவும் கூடாத ஒரு கடமையாகிறது" இவ்வாறு விளக்கமளித்துள்ளார் ம.பொ.சி.[31]

தமது இனவியல் ஆய்வில் தமிழ்த் தேசியத்தையும், இந்தியத் தேசியத்தையும் இணைத்துச் செல்வதில் ம.பொ.சி. அசைக்க முடியாத உறுதியுடன் இருந்தார் என்பதற்குப் பின்வரும் அவருடைய கருத்து ஒரு சான்றாகும்.

"இனவுணர்ச்சியும், இந்தியத் தேசிய உணர்ச்சியும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை என்று சொல்லலாம். சாதி, மத, வருண, குல, கோத்திரங்களையெல்லாம் இணைப்பதற்கு மொழிவழி இனவுணர்ச்சியைப் போன்ற வலிமை மிக்க சாதனம் இன்னொன்று இருப்பதாக நம்புவதற்கில்லை. தமிழ் இனவுணர்ச்சிக்கும் இந்தியத் தேசிய உணர்ச்சிக்குமிடையே பகையை வளர்க்க முயல்வது தேசத்துரோகம் மட்டுமல்ல, தமிழ் இனத்துரோகமும் ஆகும்".[32]

மேற்காணும் பின்னணியில் ம.பொ.சி.யின் இனவியல் ஆய்வின் நடுநிலைமைப் பாட்டினையும், நம்பகத்தன்மையையும், தகுதிச் சிறப்பினையும் தேர்ந்து தெளிய வேண்டும்.

"தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் தமிழ் இன உணர்ச்சிக் கண்கொண்டு ஆய்வது இந்நூலின் மூலம் தொடங்கும் முதல் முயற்சி" என்று முன்னுரையில் சுட்டிக்காட்டி ம.பொ.சி. கூறியதாவது.

"சங்க காலத்திலும், இடைக்காலத்திலும், தற்காலத்திலுமாகத் தோன்றிய தமிழ் இலக்கியங்களில் காணப்படும் மொழிப்பற்றையும் இனப்பற்றையும் தொகுத்துத்தரும் ஒரு நூல் இதுவரை வெளிவந்ததாகத் தெரியவில்லை. இந்த சூன்யத்தை இட்டு நிரப்புவதற்காகவே இந்நூலை யான் எழுதியுள்ளேன்.

மேலே குறிப்பிடப்பெற்றுள்ள "தொகுப்பு"ப் பணி மட்டுமன்று, இலக்கியங்களைப் படைத்த ஆசிரியர்கள் தமிழ்மொழி, தமிழ் இனம் என்ற உணர்ச்சியோடு இயற்றியுள்ளார்களா என்ற வினாவை எழுப்பி, அதற்கு ஆதரவாகவும் - இல்லாமலும் உள்ள காரணங்களைப் பல கோணங்களிலிருந்தும் சூழ்ந்து திறனாய்வு செய்துள்ளார் ம.பொ.சி.

பின்வருவன, ம.பொ.சி. இனவியல் ஆய்விற்கு எடுத்துக் கொண்ட நூல்களாகும். சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம் மணிமேகலை, முத்தொள்ளாயிரம், நந்திக்கலம்பகம், கலிங்கத்துப் பரணி, கம்பராமாயணம், திருத்தொண்டர் புராணம், வில்லிபாரதம், தேசிய இலக்கியங்கள்.

மேற்குறிப்பிட்ட நூல்களை இனக்கண் கொண்டு ஆய்வு செய்த பொழுது, தாம் கடைப்பிடித்த அணுகுமுறையைப் பற்றியும் ம.பொ.சி. பின்வருமாறு கூறியுள்ளார்.

"தமிழிலுள்ள பண்டைய இலக்கியங்களில் என்ன சொல்லப்பட்டிருந்தாலும் சரி, இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டிற்கு எதிராக எந்த ஒரு இலக்கியத்தையும் பயன்படுத்துவது தமிழினத்தார் இந்திய சமுதாயத்தோடு இணைந்து வாழ்வதற்குக் கேடு செய்வதாகும். ஆகவே இந்நூலில் இனவுணர்ச்சியை வலியுறுத்திக் கூறும் இடந்தோறும் இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டின் அவசியத்தையும் நினைவூட்டியிருக்கிறேன்."[33]

மேலே கூறப்பெற்றுள்ள ஒவ்வொரு இலக்கியத்தையும் இனப்பார்வையில் ம.பொ.சி. எவ்வாறு மதிப்பிட்டார் என்பது விரிவஞ்சி கூறப்படாமல் சிலவற்றை மட்டும் இங்குக் கூறுவது விரும்பத்தக்கதாகும்.

1. "சங்க இலக்கியங்களை ஆராயுங்கால், அந்நாளில் நிலவிய மண்டல வேற்றுமையானது தமிழ் பேசும் மக்களைப் பிளவுபடுத்தி, மாநில ஒற்றுமையைக் குலைத்து, இன ஒருமைப்பாடு ஏற்படுவதைத் தடுத்து வந்தது என்பதனைத் தெளிவாக அறிகிறோம். அந்த நிலையிலும் தமிழ்ப்பற்று ஒன்றேனும் தமிழினத்து மக்களை ஒருமைப் படுத்துவதற்கான உயிரோட்டமாக இருந்து வந்ததைக் குறித்து மகிழ்ச்சியடைய வேண்டியிருக்கிறது."

2. "மணிமேகலையில் தமிழ்மொழியும், தமிழ் இனமும், தமிழர் பண்பாடும், தமிழ்நாடும் சிறப்பித்துக் கூறப்படவில்லை. இந்தக் குறைபாடு இனவுணர்ச்சியுடையார் பார்வையில் பளிச்செனப்

படுகிறது. தடிப்பேறிய இனவுணர்ச்சி தேசத்தைப் புறக்கணிப்பதை இன்று பார்க்கின்றோம். அதுபோல், அழுத்தமான மதப் பற்றும் இனத்தைப் புறக்கணிக்கும் என்பதை மணிமேகலை ஆசிரியரிடம் பார்க்க முடிகிறது".

3. "மொழிப் பற்றுக்கேயன்றி மொழிவழி இனப்பற்றுக்கும் முத்தொள்ளாயிர ஆசிரியர் முன்னோடியாகக் காணப்படுகிறார்."

4. "கவிஞர் செயங்கொண்டார், தாம் படைத்த பரணி இலக்கியத்திலே பல இடங்களில் சேர, பாண்டியரை வரம்பு கடந்து பழிக்கிறார், எல்லை கடந்து இழிவு படுத்துகிறார். ஆம்; சோழர்களை உயர்த்துவதற்காக, இது, "படிப்பவரை யெல்லாம் வீறுடைய தமிழினத்தார் என உயர்த்தும் சக்தி" யாகுமா? முடிவாகச் சொல்லுகிறோம்; செயங்கொண்டார், கவிச்சக்கரவர்த்தி! அவர் படைத்த கலிங்கத்துப்பரணி தமிழ் நயமும், கற்பனை வளமுஞ் செறிந்த இலக்கியம். ஆனால், தமிழர் என்ற இனக்கண் கொண்டு பார்த்தால் அது தமிழ் இனத்தாருக்குத் தேவையற்ற இலக்கியம்."

மேற்காணும் மதிப்பீடுகள், மேலோட்டமாகப் பார்க்கும் பொழுது 'அதிரடிகளாக'த் தோன்றினாலும், வரலாற்றுணர்வுடன் பார்க்கும் பொழுது ஆழ்ந்த பொருளுண்டு என்பதைப் புரிந்து கொள்ள முடியும். குறிப்பாக 'மணிமேகலை', 'கலிங்கத்துப்பரணி' பற்றிய அவருடைய இனவியல் மதிப்பீடுகள் தமிழறிஞர்கள் சிலரிடையே முணுமுணுப்பையும் பரபரப்பையும் ஏற்படுத்தியது. ஆனால், ஆய்வு நெறி வழியில் மறுப்பு வெளிவந்ததாகத் தெரியவில்லை.

## தமிழகத்தில் பிறமொழியினர்

"இலக்கியங்களில் இனவுணர்ச்சி" வெளிவந்த அதே ஆண்டில் 1976 இல் "தமிழகத்தில் பிறமொழியினர்" எனும் நூல் வெளிவந்தது. இந்நூல் இலக்கிய ஆய்வு நூல் அல்ல என்றாலும், இனப்பற்று எவ்வாறு தவறாகப் பயன்படுத்தப்பட்டது என்பதை ஆய்ந்துள்ளது. 'இலக்கியங்களில் இனவுணர்ச்சி, இனப்பற்றுக் கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளது போல், இந்நூலும் இனப்பற்றுக் கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளதால் இவ்விரு நூல்களையும் இனப்பற்று எனும் பொருட் தொடர்பால் 'இரட்டை நூல்கள்' எனக் குறிப்பிடுதல் பொருத்தமுடையதாகும்.[34]

"இன அடிப்படையில் தமிழகத்தின் அரசியல் வரலாறாக வெளிவருவது இதுவே முதல் நூலாகும்" என்று ம.பொ.சி. நூலின் முடிவுரையில் குறிப்பிட்டுள்ளார்.[35]

## இலக்கியங்களில் இன சமயக் கலப்புகள்

13-1-1985 இல் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்த அனைத்திந்திய இலக்கிய ஒப்பு நோக்கு ஆய்வாளர் கருத்தரங்கில் ம.பொ.சி. நிகழ்த்திய சிறப்புரை 'இலக்கியங்களில் இன சமயக் கலப்புகள்' எனும் நூலாக 1985 சூன் 26 இல் (அவருடைய 80 வது பிறந்த நாள் வெளியீடாக) வந்தது.

"காலத்தின் கட்டளையால் பண்டைத் தமிழினத்தில் பிற இன மதக்கலப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. கலப்புக்கு இரையாகாத இனம் ஒன்று இந்த உலகத்திலே இருப்பதற்குச் சந்தர்ப்பமில்லை. இனக்கலப்போ, மதக்கலப்போ தமிழர் வாழ்வில் ஏற்படும் போதெல்லாம் தமிழ் மொழியின் இலக்கியமும் தாக்குண்டிருக்கின்றன. இதுவும் தமிழுக்கு மட்டும் ஏற்பட்ட தாக்குதல் அல்ல. இனக்கலப்பாலும், மதக்கலப்பாலும் தாக்கப்படாத மொழி இலக்கியம் எதுவுமே உலகில் இல்லையென்பதை உலக இலக்கிய வரலாறு காட்டுகிறது" இவ்வாறு ம.பொ.சி. எடுத்துரைத்துள்ளார்.[36]

இந்தக் கண்ணோட்டத்தில் தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், சைவ சமய பக்தி இலக்கியங்கள் முதலானவற்றை ஆய்வு செய்துள்ளார் ம.பொ.சி.

## சில குறிப்புகள்

ம.பொ.சி.யின் பார்வையில் இலக்கியம் பற்றிய ஆய்விற்கு மேலும் பயன்தரும் அவருடைய இலக்கிய நூல்கள் பின்வருவன.

வள்ளுவர் வகுத்த வழி (1952); இலக்கியச் செல்வம் (1955), ஔவை யார்? (1968), மாதவி மாண்பு (1968), கம்பர் கவியின்பம் (1969), கோவலன் குற்றவாளியா? (1971), திருக்குறளில் கலை பற்றிக் கூறாததேன்? (1974), தொல்காப்பியத்திலிருந்து பாரதி வரை (1978), கம்பரிடம் யான் கற்ற அரசியல் (1979), திருவள்ளுவரும் காரல்மார்க்சும் (1980), ஆன்மீகமும் அரசியலும் (1980), கம்பரின் சமயக் கொள்கை (1983), இலக்கியங்களில் புத்திரசோகம் (1986).

இவையேயல்லாமல் அருட்பிரகாச வள்ளலார், மகாகவி பாரதியார் பற்றிய பல நூல்களிலும் ம.பொ.சி.யின் இலக்கியப் பார்வையின் பல புதுமைகளைத் தேர்ந்து தெளியலாம். 'செங்கோல்' இதழ்களிலிருந்து தொகுத்தறியப்பட வேண்டிய பல கட்டுரைகளும் உள.

செங்கோலில் 1995 இல் வெளிவந்த அவருடைய "என் இலக்கிய வாழ்க்கை" கட்டுரைத் தொடர் (எண். 6), நிறைவு பெறுவதற்கு முன் அவர் காலமாகி விட்டார். ஆறாவது கட்டுரை 1995 இல் வெளி வந்தது. 3-10-1995 இல் ம.பொ.சி. அமரராகிவிட்டார். அவருடைய இலக்கியங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

## குறிப்புகள்

1. சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்களின் தொண்ணூறாம் ஆண்டு பிறந்தநாள் விழா மலர், 1995.
2. மேற்கோள் - "மனோன்மணியம் சுந்தரனாரும் சிலம்புச் செல்வர் ம.பொ.சி.யும்", பெ.சு. மணி, செங்கோல் வெள்ளி விழா மலர், 1976.
3. மேற்கோள், தலைவர் ம.பொ.சி., தொகுப்பு நூல், இன்ப நிலையம், சென்னை, 600 004.
4. தமிழன்குரல், முதற்பதிப்பு, 1947, ம.பொ.சிவஞானம், இன்பநிலையம், மயிலாப்பூர், பக். 18-19.
5. எனது போராட்டம், ப. 881.
6. "யாதும் கற்றோர் அறியா அறிவினர்", பெ.சு. மணி, ம.பொ. சிவஞானம் அவர்களின் 75 வது பிறந்தநாள் விழா மலர், 26-6-1980.
7. மேலது.
8. சிலப்பதிகார யாத்திரை, 1977, ம.பொ.சிவஞானம், பூங்கொடி பதிப்பகம், ப. 9.
9. இலக்கியத்தின் எதிரிகள், முதற்பதிப்பு, 1995, ம.பொ.சிவஞானம், இன்ப நிலையம், சென்னை, ப. 17.
10. சிலம்பில் ஈடுபட்டதெப்படி? முதற்பதிப்பு, 1994, ம.பொ.சிவஞானம், பூங்கொடி பதிப்பகம், சென்னை, ப. 46.
11. "பத்திரிகைத் தொழிலில் யான் பெற்ற அனுபவம்", ம.பொ.சி., செங்கோல் வெள்ளி விழா மலர், 1976.
12. மேலது.
13. மேலது.
14. எனது போராட்டம், ப. 350.

15. சிலம்புச் செல்வரின் தலையங்க இலக்கியம், 1980, மா.ரா. இளங்கோவன், எம்.ஏ., சேகர் பதிப்பகம், சென்னை-600 078, பக். 61-62.

16. "செங்கோலின் இலக்கியப் பணி", ம.பொ.சி., செங்கோல் வெள்ளி விழா மலர், 1976.

17. "செங்கோல் ஏடு ஐயாவின் கேடயம்", வே. கணபதி, நிர்வாகி, 'செங்கோல்' - மேலது.

18. "ம.பொ.சி.யின் இலக்கிய நோக்கு - ஓர் அறிமுகம்", பாரதி புகழ் பரப்பும் ம.பொ.சி., 1982, பெ.சு. மணி, பூங்கொடி பதிப்பகம், மயிலாப்பூர், ப. 14.

19. பெரியார் ஈ.வெ. ரா. சிந்தனைகள், தொகுதி 2, முதல் பதிப்பு, 1974, பதிப்பாசிரியர், வே. ஆனைமுத்து, சிந்தனையாளர் கழகம், திருச்சிராப்பள்ளி, ப. 991.

20. தமிழன் குரல், ஆசிரியர், ம.பொ. சிவஞானம், ஆகஸ்ட் 1954. ப. 4.

21. மேலது, பக். 57, 60.

22. தமிழன் குரல், ம.பொ.சி., அக்டோபர், 1954, பக். 56-60.

23. தமிழன் குரல், முதற்பதிப்பு, 1947, ம.பொ. சிவஞானம், இன்ப நிலையம், மயிலாப்பூர், சென்னை 4, ப. 19.

24. சிலம்பில் ஈடுபட்டதெப்படி? சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம், பூங்கொடி பதிப்பகம், சென்னை 600 004, ப. 50.

25. "வாழ வழி காட்டும் இலக்கியம்", டாக்டர் மு.வ. தலைமையுரை, தமிழ் முரசு, ஏப்ரல், 1951, ப. 37.

26. எனது போராட்டம், பக். 547-548.

27. மேலது, ப. 548.

28. சிலப்பதிகாரமும் தமிழரும், முதற்பதிப்பு, 1947, ம.பொ. சிவஞானம், இன்ப நிலையம், சென்னை-4, ப. 47.

29. செங்கோல் வார இதழ், ஆசிரியர், ம.பொ. சிவஞானம், 2-7-1967.

30. நானறிந்த ராஜாஜி, முதற்பதிப்பு, 1987, ம.பொ. சிவஞானம், பூங்கொடி பதிப்பகம், ப. 277.

30அ. மேலது, ப. 278.

31. இலக்கியங்களில் இனவுணர்ச்சி, முதற்பதிப்பு, அக்டோபர், 1976, ம.பொ. சிவஞானம், இன்ப நிலையம், சென்னை 600 004, பக். 11-12.

32. மேலது, ப. 12.

33. மேலது, ப. 5.

34. பாரதி புகழ் பரப்பும் ம.பொ.சி., 1982, பெ.சு. மணி, பூங்கொடி பதிப்பகம், சென்னை 4, ப. 16.

35. தமிழகத்தில் பிற மொழியினர், 1976, முதற்பதிப்பு, சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம், பூங்கொடி பதிப்பகம், ப. 299.

36. இலக்கியங்களிலே இன சமயக் கலப்புகள், 1985, சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம், பூங்கொடி பதிப்பகம், ப. 48.

*****

# ம.பொ.சி. பார்வையில் தமிழ்ப் பண்பாடு

தமிழ்ப் பண்பாடு பற்றிய தமது கருத்தை ம.பொ.சி. 'தமிழன் குரல்' நூலில், 1947 இல், பின்வருமாறு, விளக்கியுள்ளார்.

"தனித் தேசிய இனத்துக்குத் தனித்த பண்பாடும் இருக்க வேண்டும். தமிழருக்கு அத்தகைய பண்பாடு உண்டு. ஆனால், பொய்யும் வழுவும் புகுந்த காலத்தில் பிற நாட்டார் எழுதி வைத்த அல்லது எழுதச் செய்த ஏடுகளைப் புரட்டிப் பார்க்காமல் சங்க காலத்தில் தோன்றிய திருக்குறள், புறநானூறு, அகநானூறு போன்ற தமிழ்நூல்களை ஆராய்ந்து பார்த்தால், அவற்றில் காணப்படும் பண்பாடு தமிழினத்திற்கே உரிய தனிப்பண்பாடு என்பதை எவரும் ஏற்பர்".[1]

ம.பொ.சி.யின் முற்கூறிய கருத்தை அவருடைய "இலக்கியங்களிலே இன சமயக் கலப்புகள்" எனும் நூலில் கூறப்பட்டுள்ள சமயக் கலப்புகள் பற்றிய கருத்தோடும் உரசிப் பார்க்க வேண்டும். தமிழ்ப் பண்பாடு அவருடைய பார்வையில் ஆன்மிகத்தை அடித்தளமாகக் கொண்டது எனும் கருத்தை வேண்டுமிடங்களில் எல்லாம் வலியுறுத்தியிருக்கின்றார்.

கடவுட் கொள்கை, தமிழருக்கு, தமிழ்ப் பண்பாட்டிற்கு இசைவானதே என்பதை விளக்கும் ம.பொ.சி.யின் கருத்துகள், பின்வருவன.

" 'தமிழர்' - 'தமிழ்' - 'தமிழ்நாடு' என்னும் பெயர்களைச் சொல்லி இயக்கம் நடத்துவோரில் ஒரு சாரர் 'பண்டைத் தமிழருக்குத் தெய்வம் கிடையாது, மதம் கிடையாது, பண்டிகை கிடையாது என்றெல்லாம் ஒரு தலையாகப் பேசியும் எழுதியும் வருகிறார்கள். சுருங்கச் சொன்னால் 'தமிழர்' என்பதற்கு 'நாத்திகர்' என்னும் பொருளைச் சொல்லாமல் சொல்லி வருகிறார்கள். இதற்குத் தமிழ் இலக்கியங்களிலிருந்தும் அரைகுறையாகச் சான்றுகள் காட்டவும் துணிகின்றனர்.

"தமிழ் இலக்கண இலக்கியங்களிலே - குறிப்பாக, தொல்காப்பியத்திலும் தொகை நூல்களிலும் 'கடவுள்' என்னும்

சொல்லே கிடையாது என்றும் சொல்லுகின்றனர். இதற்குத் திருக்குறளையும் சான்று காட்டுகின்றனர். கட்சி உணர்ச்சியையும் வகுப்பு துவேஷத்தையும் கலந்து நாத்திக உணர்வை வளர்க்க முயல்வதால் இவர்களுடைய பொய்க் கூற்றையும் தமிழரிலே சிலர் நம்பி வருகின்றனர். இளைஞர்களான இலக்கிய ஆய்வாளர்களில் சிலரும் இந்த மாயாவாதத்தில் மயங்கி விடுகின்றனர்.

'தெய்வம்', 'கடவுள்', 'இறை' என்னும் சொற்களால் எல்லாம் வல்ல பரம்பொருள் சுட்டப்படுவதைத் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் பரவலாகக் காண முடிகிறது முதல் முதலில் இறையுணர்வு பிறந்தது தமிழரிடமிருந்துதான் என்கிறார் மறைமலை அடிகள்".[2]

சமய இலக்கியங்கள், தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் மரபின் வளர்ச்சியிலே தோன்றியவை என்பதையும் ம.பொ.சி. பின்வருமாறு கூறியுள்ளார்.

"தமிழருக்கேயுரிய சங்க காலத்து இலக்கிய மரபுகளும், வாழ்க்கை நெறிகளும் ஆரிய மொழியும் மரபும் தமிழில் கலந்த சமயச் சகாப்தத்திலே திட்டமிட்டுப் புறக்கணிக்கப் பட்டனவென்பது தவறாகும்.

தமிழ்ப் பற்றும் தமிழினப்பற்றும் சமயச் சகாப்தத்திலே புறக்கணிக்கப்பட்டு மூடநம்பிக்கைகள் நிரம்பிய சமயவாதமே தமிழர் மீது ஆதிக்கம் செலுத்தியது" என்பது இலக்கிய ஆய்வாளர்கள் சிலருடைய வாதம். இதுவும் தவறு.

இனக் கலப்பும் மதக் கலப்பும் ஏற்பட்ட சமயச் சகாப்தத்திலே தமிழருடைய பண்பாடு அழிந்தொழிந்து விட்டதென்று இலக்கிய ஆய்வாளர்களிலேயும் சிலர் கருதுகின்றனர். இது முற்றிலும் தவறு". தமிழ்ப் பண்பாடு பற்றிய ம.பொ.சி.யின் விளக்கங்களுள் ஒன்று, அவர் 'செங்கோல்' இதழில் (31-10-1954) எழுதிய 'தமிழர் கலாச்சாரம்" எனும் கட்டுரையாகும். இதன் முக்கியத்துவம் கருதிக் கட்டுரை முழுவதும் பின்வருமாறு இங்குத் தரப்படுகின்றது.

### தமிழர் கலாச்சாரம்

"சரித்திரத்தை ஆராய்ந்தால், தமிழகம் அரச பரம்பரை வழி மூன்று நாடுகளாகப் பிரிந்து கிடந்ததை அறிகின்றோம். அந்த

வேற்றுமையிலேயும் தமிழ் மக்களிடையே ஒற்றுமையைக் காத்த பெருமை தமிழுக்கும் தமிழ்ப் புலவருக்கும் உண்டு.

தமிழ் நாட்டில் - ஆரியம், சமணம், பௌத்தம் எனப் புறச் சமயங்கள் பலவும் புகுந்ததுண்டு. ஆனால், அந்தச் சமயங்கள் எல்லாம், தமிழைப் புறக்கணித்துத் தத்தம் மொழிவழித் தமிழகத்தில் நிலைத்து நிற்க முடியவில்லை. ஆகவே, புறச் சமயம் ஒவ்வொன்றும் தமிழைப் போற்றி வளர்த்து அதன் மூலமே தமிழகத்தில் வாழ்வு பெற்றன.

ஆரிய மதம், வேங்கடத்திற்குத் தெற்கே தனது தனித்தன்மையை இழந்து, தமிழ்ப் பண்பு வழியும், தமிழருடைய பழக்க வழக்கப்படியும் திரிந்துவிட்டதை எவரும் தெரிந்து கொள்ள முடியும்.

அப்படித் தமிழ்ப் பண்புவழித் திருந்த மறுத்ததால்தான் சமணமும் பௌத்தமும் ஆரிய மதத்துக்கு எதிராகத் தமிழகத்தில் வாழ முடியவில்லை. வேங்கடத்துக்குத் தெற்கே புகுந்த புறச் சமயக் கருத்துகள், கதைகள் எதையும் தமிழர்கள் ஏற்க மறுத்து எதிர்த்துப் போராடியதில்லை. அவற்றைத் தமிழ் வழிப்படுத்தித் தங்களுக்கே உரியதாக்கிக் கொண்டனர். குறிப்பாக, ஆரிய மதப் பண்புகளைக் கூறும் ராமாயணம், பாரதம் போன்ற மாபெரும் காப்பியங்களைத் தமிழர்கள் விரும்பி ஏற்றனர்; வெறுத்து ஒதுக்கவில்லை. ஆனால், அவற்றை மூல மொழியில் ஏற்க மறுத்து, மொழிபெயர்ப்பின் வடிவில் வரவேற்று வாழ்வளித்தனர். தமிழில் பெயர்த்ததோடு நிற்காமல், அக்காப்பியங்கள் கூறும் பண்பாட்டினைத் தமிழ் வடிவிலும் திருத்திக் கொண்டனர்.

சமய வேற்றுமைகளையெல்லாம் விரோதங்களாக வளர்த்துக் கொள்ளாமல், சர்வ சமயங்களையும் சமரசமாகப் பாவிக்கும் பெருமை தமிழருக்கே உரியது, ஆம்; பண்பட்ட தமிழ் அதற்குப் பயன்பட்டது.

சமண சமயம், 'சிந்தாமணி' என்ற செந்தமிழ்க் காப்பியத்தின் மூலம்தான் தமிழரிடையே அறிமுகமானது; வடமொழி மூலம் அல்ல!

பௌத்த சமயம், 'மணிமேகலை' என்ற தமிழ்க் காப்பியத்தின் மூலம்தான் தமிழகத்தில் நுழைந்தது; பாலி மொழி மூலம் அல்ல!

அதுபோன்றே, கம்பருடைய ராமாயணமும், வில்லிபுத்தூரார் பாரதமும் இல்லையானால், புராதன ஆரிய மதத்தின்

அடிச்சுவட்டைக்கூட இன்றைய தமிழகத்தில் நாம் கண்டிருக்க முடியாது.

தமிழகத்தில், பின்னாளில் பௌத்த சமயம் பரவாதொழிந்தது. ஆயினும், அந்தச் சமயத்தின் காப்பியமான 'மணிமேகலை' பௌத்தரல்லாத தமிழர்களாலும் இந்நாள் வரை பாராட்டப்பட்டு வருகிறது.

சமண சமயம் தமிழகத்தில் தழைத்து வளரவில்லை என்றாலும், சமணக் காப்பியமான, 'சீவக சிந்தாமணி' சைவ-வைணவ சமயங்களைச் சேர்ந்தவர்களாலும் சிறப்புச் செய்யப்படுகின்றது.

'தமிழருடைய கலாச்சாரத்தைச் சங்க இலக்கியங்களில் காண முடியும். சமய இலக்கியங்களில் காண முடியாது' என்று சிலர் பேசுகின்றனர். இது தவறு. சங்க காலத் தமிழர் பிறப்பு வழிச் சாதிகளாகப் பிளவுபடவில்லை. பிணங்கி நிற்கும் சமயங்களாகப் பிரிந்து நிற்கவில்லை. அவர்கள், உருவங்களால் ஒரு கோடியாயினும் உள்ளத்தால் ஒருவராகவே வாழ்ந்தனர். எனவே, சங்க காலத் தமிழருடைய கலாச்சாரத்தை ஒரே எண்ணத்தில் காண முடிகிறது.

பிற்காலத் தமிழர்கள் பிறப்பு வழிச் சாதிகளாக, பேதப்பட்ட சமயங்களாகப் பிளவுபட்டனர். ஆகவே, தமிழருடைய கலாச்சாரமும் பல வண்ணங்களிலும் வடிவங்களிலும் காட்சி அளிக்கின்றது.

'கலாச்சாரம்' என்பதற்குச் சரியான தமிழ்ச் சொல் 'பண்பாடு' என்பதாம். பண்பாடு வேறு; பழக்க வழக்கங்கள் வேறு! ஆகவே, தமிழர் பின்பற்றும் மதங்களிடையே பழக்க வழக்கங்களில் வேறுபாடு இருக்கலாம். ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரை, எல்லா மதங்களையும் சேர்ந்த தமிழரிடையே பண்பாடு ஒன்று போலத்தான் இருக்கிறது. அதனாற்றான் சமய வேற்றுமைகள் எல்லாம் கொலைக்கும் கொள்ளைக்கும் தூண்டுகின்ற விரோதங்களாக இருக்கவில்லை.

கடவுளை நம்பாத, மதத்தை விரும்பாத மக்களுக்குக் கலாச்சாரத்தில் நம்பிக்கை இருக்க முடியாது; இருப்பதாகச் சொன்னால் அது வெறும் பாசாங்கே! அவர்கள் விரும்பும் கலாச்சாரம் பழமையிலிருந்து பிறந்ததாகவோ அல்லது பழமையிலிருந்து திருந்தியதாகவோ இருக்க முடியாது. தங்களுடைய

நவீன கோணங்கித் தனங்களுக்குக் 'கலாச்சாரம்' என்று பெயர் வைத்துக் கொண்டிருப்பார்கள்; அவ்வளவுதான்!"

"கலாச்சாரம் என்பது உடை, உணவு, தட்ப வெப்ப நிலை, மொழி, பொருளாதாரம் ஆகிய அனைத்தாலும் உருவாவதாகும்" என்று குறிப்பிட்டு 'மத வழிக் கலாச்சாரம்' ஏற்புடைத்தென்றும் ம.பொ.சி. கூறியுள்ளார்.[3]

மொழி வழிப் பண்பாடு பற்றிப் பேசும் பொழுது பிற இனத்தவருடைய பண்பாடு தாழ்ந்ததென்று எண்ணுவது கூடாது; பண்டைத் தமிழர் அப்படி எண்ணியதுமில்லை என்பதும் ம.பொ.சி.யின் கருத்தாகும்.

பிராமணர் - பிராமணரல்லாதார், ஆரியர் - திராவிடர் எனப்பேசித் தமிழர் பண்பாட்டைப் பிளவு படுத்துவது ம.பொ.சி.க்கு இசைந்ததன்று.

"ஆரியர் - திராவிடர் என்ற இனப்பிரிவினை 'ஆராய்ச்சி' என்ற போர்வையில் ஆங்கிலேயப் பாதிரிமார்களால் தொடங்கி வைக்கப்பட்டதாகும். அவர்கள் அப்படிச் செய்ததற்கு அரசியல் உள்நோக்கமும் இருந்ததென்று கருதியோருமுண்டு. ஆம், தமிழினத்தவரிடையே நிலவிய ஒருமைப்பாட்டைக் கலைப்பதற்காகவும் ஆங்கிலேயப் பாதிரிமார் ஆரியர் - திராவிடர் பிரச்சினையைக் கிளப்பியிருக்க வேண்டுமென்று புலவர்களிலே ஒருசாராரின் கருத்தாகும். பிராமணர் - பிராமணரல்லாதார் பூசலானது ஆரியர் - திராவிடர் என்ற இனப் பூசலாகவும் மாறியது". இவ்வாறு ம.பொ.சி. தமிழ்ப் பண்பாட்டை ஊடுருவிப் பிளவு படுத்திய சக்திகளையும் குறிப்பிட்டுள்ளார்.[4]

பிராமணர் - பிராமணரல்லாதார், ஆரியர் - திராவிடர் பற்றிக் காந்தியடிகளுடன் ஒரு தமிழர் நடத்திய விவாதத்தையும் ம.பொ.சி. பின்வருமாறு எடுத்துக்காட்டியுள்ளார்.

"1920 ஆம் ஆண்டில் காந்தியடிகள் தமிழ்நாட்டில் சுற்றுலாச் செய்தபோது, சென்னைக் கடற்கரையில் நிகழ்த்திய சொற்பொழிவொன்றில் பிராமணர் - பிராமணர் அல்லாதார் பிரச்சினை பற்றிப் பேசினார். அதிலே அவர் வெளியிட்ட கருத்துகள் சிலவற்றை ஆட்சேபித்து, 'யங் இந்தியா' வாசகர் என்ற முறையில்

திரு. சி. கந்தசாமி என்பவர் அடிகளுக்கு எழுதினார். அதன் பகுதிகள் வருமாறு:

திராவிட நாகரிகம், மதம், பண்பாடு, தற்போதைய பிராமணரல்லாதார் இயக்கத்தின் காரணங்கள், அதன் உட்பொருள் இவற்றைப் பற்றிக் காந்திஜிக்கு எதுவுமே தெரியாதென்பது, அவரது சொற்பொழிவிலிருந்து தெரிகிறது.

இந்தியாவின் மற்றப் பகுதிகளிலிருந்து தென்னிந்தியாவைத் தனித்துக் காட்டும் திராவிட நாகரிகத்தின் விசேஷ அம்சங்களை அவர் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை." (காந்தி நூல், தொகுப்பு-7, பக். 121).

இந்தப் பகுதிகளடங்கிய முழுக் கடிதத்தையும் அடிகள் தமது 'யங் இந்தியா' (27-4-20) இதழில் பிரசுரித்து, அதற்குப் பதில் அளித்திருந்தார். அதன் பகுதிகள் வருமாறு:

"இதே தொனியில் எனக்குப் பல கடிதங்கள் வந்திருக்கின்றன. இந்த நிருபர்கள் நான் கூறியதைத் தவறாக அர்த்தம் செய்து கொண்டுள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

"திராவிட நாகரிகத்தின் சாதனைகளை யாரும் மறுக்கவில்லை, எதிர்க்கவுமில்லை. எனினும், அந்தச் சாதனைகளால் இந்து மதத்திற்கோ அல்லது மானிடவர்க்கத்துக்கோ பிராமணர்கள் புரிந்து வந்துள்ள தொண்டு மறுக்கப்படவுமில்லை, குறைந்து விடவுமில்லை.

"ஆரிய வடநாட்டிலிருந்து திராவிடத் தென்னாட்டைப் பிரித்து ஒதுக்கவேண்டாமென்றும் இந்த நிருபர்களை எச்சரிக்கின்றேன்.

இன்றைய இந்தியா இரண்டு பண்பாடுகள் மாத்திரமல்ல, மற்றும் பல பண்பாடுகள் சேர்ந்த ஓர் ஐக்கிய நாடேயாகும்." (காந்தி நூல் தொகுப்பு-7, பக். 122).

## ஆதிக்கங்களுக்கு எதிர்ப்பு

திருக்கோயில் வழிபாட்டில் சாதி ஆதிக்கத்தையும் சம்ஸ்கிருதமொழி ஆதிக்கத்தையும் ம.பொ.சி. கடுமையாக ஒரு காலக்கட்டத்தில் "சமயப்புரட்சி" எனும் கட்டுரையில் (1949) பின்வருமாறு சாடியுள்ளார்.

“கீழ்மக்களையும், மேன்மக்களாகச் செய்ய வேண்டும் என்பதே கோயில்களைக் கட்டியவர்களின் குறிக்கோள், ஆனால், பிற்காலத்தில் தமிழ்நாட்டுக் கோயில்களில் ஆதிக்கம் கொண்டவர்கள் தமிழரில் மேன்மக்களையும் கீழ்மக்களாக்கிய கொடுமையை என்னென்பது.

“கோயில்களைக் கட்டிய உழைப்புத் தமிழருடையதே. ஆனால், அதை நிர்வகிக்கும் உரிமை மட்டும் தமிழரில் ஒரு சிறு குழுவினரிடமே இருந்து வருகிறது.

“கோபுர வாயிற்படியிலிருந்து இறைவன் அமர்ந்துள்ள ‘இருட்டறை’ வரைக்கும் ஒவ்வோர் அடி நிலத்திற்கும் ஒவ்வொரு தத்துவம்! இன்ன இடத்தில், இன்ன சாதிதான் நிற்கலாம்; இன்ன சாதி நிற்கக் கூடாது என்ற இறுமாப்பு வாதம்.

“ ‘அன்பெனும் பிடியுள் அகப்படுவான் ஆண்டவன்’ என்றார் அருட்சோதி வள்ளலார். ஆனால், இன்று ஆலயத்துக் கடவுளர் எல்லாம் அடங்கியிருப்பது அன்பெனும் பிடியுள் அல்ல; அர்ச்சகரின் பிடியிலாகும். இந்த நிலை தொலைந்து காசியிலிருப்பது போன்று கடவுள் சிலைகளை எல்லாரும் தொட்டுத் தொழும் உரிமை இங்கேயும் இருக்க வேண்டும். பக்தருக்கும், கடவுளருக்கும் இடையேயுள்ள தடைகள் அனைத்தும் எடுபடவேண்டும்.

சமயத்துறையில் மட்டும் தமிழுக்குரிய இடத்தை வடமொழி ஆக்கிரமித்திருக்கும் நிலை இன்னும் அகன்றபாடில்லை. இந்த நிலை நீங்கி மக்கள் வாழும் இல்லங்கள் தோறும் வழிபடும் கடவுளரின் ஆலயங்கள் தோறும் - தமிழே ஆட்சி பெறச் செய்ய வேண்டும்.

**தமிழகத்திற்கு வந்த மொழியான வடமொழிக்குள்ள உரிமை நம் சொந்தமொழியான செந்தமிழுக்கு இல்லையென்றால் இதை விட அவமானம் நமக்கு வேறென்ன வேண்டும்.**

ஆலய வழிபாடு தமிழிலேயே நடபெற வேண்டும் எனக் கூறுவதோ, வழிபாட்டுத் தொழிலில் சாதி வேற்றுமை கூடாதென்று வற்புறுத்துவதோ நாத்திகவாதமல்ல; நாட்டில் பரவி வரும் நாத்திகத்தைத் தடுக்கவும், ஆத்திகத்தின் பெயரால் மக்களைச் சுரண்டி வாழும் கொடுமையை ஒழிக்கவும் அதுவே சரியானவழி.

சமயத்தில் புகுந்த சதிகளைக் காரணமாகக் கொண்டு ஒழுக்க சமயத்தையும் ஒழித்து விட வேண்டும் என்ற கிளர்ச்சி வலுத்து வருவதை நான் அறிவேன். இது ஒரு தீமையைத் துணைக் கொண்டு, இன்னொரு தீமையை வளர்ப்பதாகும்.

இந்த இரு தீமைகளையும் ஏக காலத்தில் எதிர்த்து ஒழுக்க சமயத்தை நிலைநாட்ட வேண்டியது அவசியமே"[5]

1949 இல் மேற்கண்டவாறு 'வெடிப்புறம் பேசுதல்' பாணியை மேற்கொண்ட ம.பொ.சி. பிற்காலத்தில், 1984 இல் எவ்வாறு சமாதான சக வாழ்வு பாணியில் பேசினார் என்பதற்குப் பின்வருவது, தக்க சான்றாகும்.

"அடுத்து, எனது நினைவிற்கு வருவது திருக்கோயில்களின் அருச்சனையிலே சம்ஸ்கிருதத்திற்கும் இடம் இருக்க வேண்டும் என்பதாகும். அருச்சனை வழிபாடு தமிழிலும் நடைபெறுவதற்குத் தடையில்லாத வகையிலே அர்ச்சகருக்குச் சம்ஸ்கிருதத்தில் பயிற்சியளிப்பது தமிழக அரசின், குறிப்பாக அறநிலையத் துறையின் கடமையாகும்.

"மொழிவழிப்பட்ட இனத்திற்கும் ஆன்மிக வழிப்பட்ட மதத்திற்கும் நிச்சயமாக வேறுபாடு உண்டு. தாய்மொழிப் பற்றை அரசியல் லாபத்திற்குப் பயன்படுத்துவோர் இந்த உண்மையை அறியாதவர்களாக இருக்கின்றனர். இல்லையேல், அறிந்தே மதத்தின் மீதுள்ள வெறுப்பால் அருச்சனை மொழிப் பிரச்சினையை இனப்பிரச்சினையாக்கி, 'அரசியல்' நடத்துகின்றனர். மதத்தில் நம்பிக்கையுள்ள இனப்பற்றாளர்கள் இதிலே எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியமாகிறது.

"இந்துக்களுடைய பொதுமொழியான சம்ஸ்கிருதமும் சைவ - வைணவத் திருக்கோயில்கள் அனைத்திலும் பயன்படுத்தப்பட வாய்ப்பு இருக்க வேண்டும். இது மதம் சம்பந்தப்பட்ட விஷயமாகும்."[6]

உயர்வு தாழ்வோடு கூடிய வருண வேறுபாடுகளையும், பரஸ்பர பகையுணர்ச்சியோடு நிலவி வரும் மத வேறுபாடுகளையும் இழிவு சிறப்போடு கூடிய சாதி வேறுபாடுகளையும் "மறந்தும் துறந்தும் மக்களெல்லாம் ஓர் இனமாய் ஒன்றுபடுவதற்குத் தமிழ் இனவுணர்ச்சியை வளர்ப்பது அவசியமாகிறது" எனச் சாற்றியுள்ளார் ம.பொ.சி.[7]

"எனக்குள்ள 'தமிழன்' என்னும் இனவுணர்ச்சியும், 'இந்தியன்' என்னும் சமுதாய உணர்ச்சியும் மதப் பூசல்களிலிருந்து என்னைக் காப்பாற்றி வருகின்றன" என்பது ம .பொ.சி.யின் கொள்கை.[8]

## சர்வமத சமரசம் – ம.பொ.சி. கருத்து

ஈரோடில் 19-12-1976 அன்று சர்வோதயச் சங்கத்தின் சார்பில் சர்வ மத மாநாட்டில் ம.பொ.சி. "சர்வ மதங்களின் சிறப்பு" எனும் தலைப்பில் பேசினார். இந்த மாநாட்டில் இந்து, இஸ்லாம், கிறித்துவ, சமய மதங்களைச் சார்ந்த பேச்சாளர்கள் பங்கேற்றனர். இந்த மாநாட்டில் 'சர்வமத சமரசம்' பற்றிய தன் கண்ணோட்டத்தைப் பின்வருமாறு விளக்கினார்.

" 'சர்வ மத சமரசம்' என்று சொல்வதன் பொருள் என்ன? இதனை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். சிவன், திருமால், அல்லா, கர்த்தர், அருகர், புத்தர் ஆகிய அனைத்துத் தெய்வங்களையும் ஒவ்வொருவரும் வழிபடுவது தான் சர்வமத சமரசம் என்று நான் கருதவில்லை. அது குழப்பத்தைத் தான் ஏற்படுத்தும். அத்தகைய குழப்பத்தால் பக்தி வளராது. இஸ்லாமியர் தங்கள் தெய்வத்தையே துதிக்கலாம். ஆனால், மற்ற மதங்களைச் சார்ந்தவர்கள் துதிக்கும் தெய்வங்களை அவர்கள் மதிக்க வேண்டும் இந்துக்களும் தங்கள் தெய்வத்தைத் துதிக்கலாம். ஆனால், இஸ்லாமிய - கிறித்தவச் சகோதரர்கள் வழிபடும் தெய்வங்களை மதிப்பதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். இப்படி, துதிப்பதும் மதிப்பதுமாக இருந்தால் போதும். ஒரு மதத்தாரின் தெய்வத்தை இன்னொரு மதத்தார் பழிக்க வேண்டாம். இதுதான் சர்வ மத சமரசத்திற்கு வழி!"[9]

## சர்வமத சமரசத்தில் வள்ளலார் வழி

அருட்பா முரசாக ஒலித்து, வள்ளலாரின் ஆன்ம நேய ஒருமைப் பாட்டுரிமைத் தத்துவத்தில் மனத்தைப் பறி கொடுத்தவர் 'தமிழ் முரசு' ம.பொ.சி. அவருடைய "வள்ளலார் கண்ட ஒருமைப் பாடு", சமயப் பண்பாட்டைப் பல்வேறு கோணங்களில் விளக்கமுறச் செய்துள்ளது.

"நான் இராமலிங்க சுவாமிகளிடம் அழுத்தமான பற்றுடையவன்" என அறிவித்துக் கொண்டு அவர் 3-3-1976 இல் சென்னையில் நடைபெற்ற உலக இந்து மாநாட்டில் பேசியதாவது

“இராமலிங்க சுவாமிகள் மதங்களின் விரோதி என்ற எண்ணம் பொதுவாக இருந்து வருகிறது. உயர்வு தாழ்வுடைய வருண வேறுபாடுகளிலே, சாதி ஏற்பாடுகளிலே, ஒன்றோடொன்று பகைமையுடைய மத வேறுபாடுகளிலே வள்ளலாருக்கு நம்பிக்கை இருக்கவில்லை யென்பது உண்மைதான். பூசலிடும் மதங்களைப் போரிடும் சாதிகளை அவர் வெறுத்தார். இந்தப் பூசல்களும் போராட்டங்களும் ஒழியட்டும் என்றும் அவர் ஆவேசத்துடன் பாடினார்.

“இந்த ஆவேசத்திற்கிடையே ‘எம்மதமும் சம்மதம்’ என்ற சமரச கோஷத்தையும் அவர் எழுப்பினார். இந்தியாவிலுள்ள ஒவ்வொரு சமயமும் இன்னொரு சமயத்தைப் பகைக்காமல் - பழிக்காமல் மக்களை ஒன்றுபடுத்தவும் ஒழுக்கப்பாதையில் கொண்டு செலுத்தவும் முயலுமானால், அத்தகைய மதங்களை வள்ளலாரின் சுத்த சன்மார்க்கம் ஏற்றுக்கொள்ளும்”[10]

சர்வமத சமரசத்தில் வள்ளலார் வழியைப் பற்றி ஈரோடில் 19-12-1976 இல் மீண்டும் ம.பொ.சி. பின்வருமாறு உரையாற்றினார்.

“வள்ளலார் கூட மதங்களற்ற மனித சமுதாயத்தையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார். ஆனால், அது எளிதில் சாத்தியமாகக் கூடியதில்லை என்பது அவருக்கே தெரிந்திருந்தது. அதனாற்றான். “மதங்களெல்லாம் பொய் பொய்யே” என்று கூறிய அவரும் சற்று இறங்கி வந்து, “எம்மதமும் சம்மதம்” என்றும் கோஷித்தார். மதங்களற்ற மனித சமுதாயத்தைக் காண்பது சாத்தியமில்லையாதலால், அந்த மதங்களிடையே சமரசத்தை ஏற்படுத்தவேனும் முயலவேண்டும் என்று வள்ளலார் கருதினார். அதுவே அவரது குறைந்த பட்ச விருப்பமாக இருந்தது”[11]

### ம.பொ.சி.யின் இந்து மத சைவ சமயப்பற்று

ம.பொ.சி.யின் சமயப் பண்பாட்டுச் சிந்தனை வளர்ச்சியிலே அவர் தமது இந்து மத - சைவ சமயப் பற்றையும் வெளிப் படுத்தியுள்ளார்.

சென்னையில் காஞ்சி ஸ்ரீ சங்கரமடத்தின் தலைவர் ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸ்வாமிகள் தலைமையில் 3-3-1976 இல் நடைபெற்ற உலக இந்து மாநாட்டில் இனவுணர்வு மத உணர்வுக்குள்ள உறவை விளக்கி ம.பொ.சி. பின்வருமாறு பேசினார்.

"நான் 'தமிழன்' என்னும் இனவுணர்வுடையவன். தமிழ் பேசும் எல்லா மக்களுக்கும் இந்த உணர்வு வேண்டுமென்றும் எண்ணுபவன். ஆயினும், தமிழன் என்ற வகையிலே எனக்கு இந்த உலகிலுள்ள உறவினர்கள் சுமார் நாலரைக் கோடி பேர்தான். ஆம்; எனக்குள்ள மொழிப்பற்றும் இனப்பற்றும் நாலரைக் கோடி மக்களோடுதான் என்னை இணைக்கின்றன. அதற்கு மேல் செல்வதற்கு அந்தப்பற்றுகள் எனக்குப் பயன்படவில்லை. நாலரை கோடிக்கும் அப்பாலுள்ள மக்களோடு நான் உறவு கொள்ள வேண்டுமா, வேண்டாமா? 'உறவு கொள்ள வேண்டும்" என்றால், அதற்கு ஒரு சாதனம் வேண்டாவா? அந்தச் சாதனம் தான் மதம். அதாவது இந்து மதம். நாம் இந்துவாக இருப்பதால் ஐம்பது கோடிக்கு மேற்பட்ட மக்களோடு உறவு கொள்ள முடிகிறது. என்னைப் பொறுத்த வரையில் இந்த உறவுக்காகத்தான் நான் இந்துவாக இருக்கிறேன்; இனியும் அப்படியே இருக்க விரும்புகின்றேன்."[12]

மேலே கூறிய விளக்கத்தை மேலும் பின்வருமாறு செழுமைப்படுத்தினார் ம.பொ.சி.

> "மதம் பிரிக்கின்ற இடத்திலே இனம் பிணைக்கிறது. இனம் பிரிக்கிற இடத்திலே மதம் பிணைக்கிறது. இந்த உண்மையையுணர்ந்து தான் பிற மதங்களைச் சார்ந்தவர்களோடு உறவு கொண்டு வாழத் 'தமிழன்' என்னும் இன உணர்வை நான் பெற்றிருக்கிறேன். பிற இனங்களோடு உறவு கொண்டு வாழ இந்து என்ற மத உணர்வையும் பெற வேண்டியவனாகின்றேன். உண்மைத் தமிழன் மத உணர்வுக்கு எதிராக இருக்கத் தேவையில்லை. அப்படியே தன் மதத்திலே உண்மையான பற்றுடையவன் தமிழனாக இருக்க மறுக்க மாட்டான். இனத்திற்கும் மதத்திற்குமிடையே முரண்பாடு இருப்பதாக நான் நினைக்கவில்லை."[13]

'இந்தியன்' என்ற உணர்வுடன் இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டில் தமக்குள்ள உறுதிப்பாட்டைப் பன்முறை ம.பொ.சி. வலியுறுத்தியுள்ளார். காந்தியடிகள், பாரதியார் வழியிலே அந்த உறுதிப்பாட்டைச் சொல்லிலும் செயலிலும் நிறுவிக் காட்டியுள்ளார் ம.பொ.சி.

இதே ம.பொ.சி., இந்து மதத்தைப் பாதுகாப்பதிலும், தேசிய ஒருமைப்பாட்டிற்கு இந்து மதம் பயன்பட்டு வந்துள்ளது எனக்

கூறுவதிலும் தமது இந்து மதப் பற்றுணர்வை வளர்த்தெடுத்துக் கொண்டார். இதை அறிந்திட அவருடைய பின்வரும் கருத்துகள் வாய்ப்பளிக்கின்றன.

1. **"அண்மைக் காலமாக இந்து மக்களை ஒற்றுமைப்படுத்துவதற்கு என்னாலானவற்றைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டிருக்கின்றது. "எம்மதமும் சம்மதம்" என்ற வள்ளற் பெருமானின் உபதேசத்திற்கு ஊறு நேராத வகையிலே இந்து மக்களை ஒற்றுமைப்படுத்த முடியும் என்றே நம்புகிறேன். . .**

"இந்துக்களின் ஒற்றுமைக்கு முதலில் தேவைப்படுவது உயர்வு தாழ்வோடு கூடிய சாதிபாகுபாட்டைக் கைவிடுவதேயாகும். இஸ்லாமிய, கிறித்துவ சமயங்களைச் சேர்ந்த தமிழர்களோடு இந்து சமயத்தைப் பின்பற்றும் தமிழர்கள் ஒன்றுபட்டு இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்த வேண்டுமானால் அதற்கு முதலில் தேவைப்படுவது இந்து மக்கள் ஒருமைப்பாடுதான். ஒரு பலவான்தான் மற்றொரு பலவானுடன் சமநிலையில் உறவு கொள்ள முடியும். பலவானுக்கும் பலவீனனுக்குமிடையே சகோதரத்துவம் ஏற்படுவது சாத்தியமில்லை. இதனாற்றான், இந்தியத் தேசிய ஒருமைப் பாட்டின் அடித்தளமான இந்து மதத்தினரின் ஒருமைப்பாட்டினைத் தமிழ் இலக்கியங்கள் மூலமாகவே செய்ய முடியும் என்று நான் கருதுகிறேன்."[14]

2. "என் இந்திய நாட்டு மதம் - இந்து மதம் அழியக் கூடாது. அழிப்பாருண்டானால், உயிர் கொடுத்தும் காக்க வேண்டும் என்ற ஆர்வம் உங்களைப் போலவே எனக்கும் உண்டு. இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டிற்கு இந்து மதம் பெருமளவிற்குப் பயன்பட்டு வந்திருக்கின்றது. ஆகவே, இந்து மதம் அழியுமானால், இந்தியாவின் ஒருமைப்பாடு நலிந்து போகும் என்று நம்புபவர்களிலே நான் ஒருவன்."[15]

3 "இந்து சமயமானது வேங்கடத்தை வேலியாகக் கொண்டதல்ல; இமயத்தை எல்லையாகக் கொண்டதல்ல, உயிர்க்குலம் அனைத்தையும் தழுவி நிற்கும் உயர்ந்த தத்துவத்தைப் படைத்த உலக மதம் ஆகும். . . . .

சம்ஸ்கிருத மொழியானது ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வளர்ந்தும் வாழ்ந்தும் வருகிறது. தன்னலமற்ற ஞானியர்களான

அனுபூதி மகான்களால் ஐம்புலன்களையும் அடக்கித் தவம் புரிந்த முனிவர்களால் இந்து சமய இலக்கியங்கள் சம்ஸ்கிருத மொழியில் படைக்கப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட இலக்கியங்களைப் பெற்ற இந்து சமயத்தைச் சார்ந்தவனாக இருப்பதற்கு நான் பெருமையடைகின்றேன்."[16]

வள்ளலார், காந்தியடிகள், பாரதியார் சிந்தனைகளில் தோய்ந்து ஊறித் திளைத்தவர் ம.பொ.சி. எனும் பின்புலத்தில் மேற்காணும் கருத்துகளை உள்வாங்கிக்கொள்ள வேண்டும்.

"பாரதப் பெருநாடு இன்று சமயச் சார்பற்ற அரசைக் கொண்டு வாழ்வதற்கான நல்ல சூழ்நிலை நாட்டில் உருவாகி விட்டது. இவை காந்தியடிகளின் தலைமையில் நடந்த விடுதலைப் போராட்டத்தின் நல்ல விளைவுகளாகும்'' என்று ம.பொ.சி. சாற்றியுள்ளதும் நினைவு கூரத்தக்கது.

தமிழன், இந்து, இந்தியன் பற்றிய கோட்பாடுகளை மகாகவி பாரதியார் எவ்வாறு முரண்பாடுகள் இல்லாமல் நிறுவியுள்ளாரோ அவ்வாறே ம.பொ.சி.யும் நிறுவியுள்ளார். இதைப் புரிந்து கொள்வதில் தயக்கமோ, மயக்கமோ கொள்ள வேண்டிய அவசியமில்லை.

## சைவ சமயப்பற்று

ம.பொ.சி. தம்மைத் தூய சைவராகவும் அடையாளங் காட்டியுள்ளார். தமிழகத்தில் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தோன்றிப் பரவிய சைவ சமயப் பக்தி இயக்கம், ம.பொ.சி.யை மிகவும் கவர்ந்தது.

"7ஆம் நூற்றாண்டிலே நாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் தோன்றிச் சைவ சமயத்தை ஒரு கருவியாகக் கொண்டு தெய்வ நெறியை வளர்த்தில்லையானால், அந்த நெறியின் துணைக் கொண்டு தமிழ் மொழியிலே பக்தி இலக்கியத்தைப் படைத்தில்லையானால், அந்தப் பக்தி இலக்கியத்தைப் போர்க் கருவியாகக் கொண்டு அரசாங்க மதமாகிய சமணத்தை அவர்கள் வென்றில்லையானால் இற்றை நாளில் தமிழ் எது? தமிழ் இனம் எது? தமிழ்நாடு தான் எது?" என்று உணர்ச்சிச் சுழிப்புகள் அலையெறிந்தாடப் பேசியுள்ளார் ம.பொ.சி.

பொதுமைக் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டிய சைவ சமயப் பக்தி இயக்கத்தின் ஓரம்சமான தமிழ் இயக்கத்தை ம.பொ.சி., தமிழ் இனவுணர்வின் போர்க்குரலில் பேசியதை முழுமையாக ஏற்றுக்

கொள்ளத் தயங்க வேண்டியுள்ளது எனும் எண்ணமும் புறக்கணித்தக்கதன்று.

சைவ சமயப் பக்தி இயக்கத்தின் சமண எதிர்ப்புப் போராட்டம் நீண்ட காலமாகவே ஏற்பு, மறுப்புக் கண்ணோட்டத்தில் விவாதிக்கப் பெற்று வருகின்றது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டியுள்ளது.

ம.பொ.சி. இந்த 'சமண எதிர்ப்புணர்ச்சி" மீதான தமது விமர்சனத்தைப் பின்வருமாறு கூறியுள்ளார்.

"சம்பந்தரும் நாவுக்கரசரும் காட்டிய சமண எதிர்ப்புணர்ச்சியானது **தமிழினத்தாரின் இயற்கை குணம் அன்று**. (அழுத்தக்குறியீடு, இந்நூலாசிரியருடையது); தற்காப்புக்காக மேற்கொண்ட ராஜதந்திர முயற்சியேயாகும். - - - - இன்று நமக்கு தேவைப்படுவது சமண பௌத்த எதிர்ப்புணர்ச்சியன்று.

வரலாற்றுக் கண் கொண்டு நோக்குமிடத்து இன்றைக்குச் சரியாக 13 நூற்றாண்டுகளுக்கு முன்பு சம்பந்தரும், நாவுக்கரசரும் நடத்திய சமயப் புரட்சியிலுள்ள தேசியத் தன்மையைப் புறக்கணிப்பதற்கில்லை. தமிழருக்குத் தேசியம் தமிழ்மொழியின் - தமிழ் இனத்தின் - அடிப்படையில் தான் பிறக்க முடியும்.

"இந்த உணர்வு காரணமாகத்தான் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் நடந்த சாத்விகமான உள்நாட்டுப் புரட்சியிடம் தமிழர்களாகிய நாம் நல்லெண்ணம் காட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம்".[17]

மேலே சமணத்திற்கு எதிரான "சமயப் புரட்சி"யில் ம.பொ.சி. "தேசியத்தன்மை"யை அடையாளங் காட்டுவது, "அகச் சமயங்கள் புறச் சமயங்கள்" எனும் ஒரு சார்புடைய கண்ணோட்டத்தின் வெளிப்பாடாகும் என்றே குறிப்பிட வேண்டியுள்ளது. இன-சமயக் கலப்புகள் தவிர்க்க முடியாதவை என்று ம.பொ.சி. ஆய்வு செய்துள்ளதை மறக்க இயலுமா?

ம.பொ.சி. தமது முற்கூறிய கருத்தை மேலும் விளக்கிக் கூறியதாவது:

"சமண சமயத்தை வீழ்த்திய சைவ சமயக் குரவர்களான நாவுக்கரசரையும், சம்பந்தரையும் நான் போற்றிப் புகழ்வது,

சமயங்களிடையே சமரசங்காணும் சமுதாயக் கொள்கைக்கு முரண் பட்டதாகாது. சம்பந்தரும் நாவுக்கரசரும் சமணத்தை எதிர்க்க வேண்டி ஏற்பட்டது. அது அரசாங்க மதமாக இருந்த அதிகார பலத்தால் சைவ சமயத்தை வீழ்த்த முற்பட்டதால்தான். அன்றைய நிலையில் சமணமானது மொழியாலும், இனத்தாலும் தமிழரல்லாதவராக இருந்தவர்களால் தமிழர் மீது திணிக்கப்படும் சமயமாகவே இருந்ததென்பதனையும் மறந்து விடக்கூடாது."[18]

வைதீக சமயத்தை அதாவது வேதநெறியை ஆதாரமாகக் கொண்ட சமயத்தை எதிர்த்துச் சமண பௌத்தம் 'சமயப்புரட்சி' தமிழர்களில் ஒரு சாரார் விரும்பி ஏற்றுக் கொண்டனர் என்பதைத் தமிழகச் சமய வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. எனவே, ம.பொ.சி. குறிப்பிடும் "திணிப்பு", விவாதத்திற்குரியதாகின்றது.

மேலே, நாவுக்கரசர், ஞானசம்பந்தரின் சமண எதிர்ப்புணர்ச்சியில் ம.பொ.சி. 'தேசியத் தன்மை'யை இனங் கண்டது, நமக்கு யாழ்ப்பாணத்தில் ஆறுமுகநாவலர் (1822-1878) தூண்டி நடத்திய சைவ சமய எழுச்சியைத் 'தேசிய எழுச்சி'யாகப் பின்வருமாறு இனங்காணப்பட்டதை நினைவுறுத்துகின்றது.

"ஆறுமுக நாவலரது சைவப் பிரயாசையின் தோற்றமும் வளர்ச்சியும் அது எதிர் நோக்கிய எதிர்ப்புகளும், அதுபற்றி நாவலரும் அவரைச் சார்ந்தோரும் கிறிஸ்தவர்களுடன் நடாத்திய விவாதங்களும், அரசாங்கத்துடன் கொண்டிருந்த தொடர்புகளும் தேசியத்தின் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்."[19]

## மரணப் படுக்கையிலும் ஆன்மிகச் சிந்தனை

ம.பொ.சி. மயிலாப்பூர் தேவகி மருத்துவமனையில் "உயிருக்குப் போராடியிருந்த" நாள்களில் அவர் உள்ளுணர்வால் உந்தப் பெற்று 24-8-95 இல் வெளியிட்ட சில எண்ணங்களை அங்கிருந்த செவிலி (நர்ஸ்) செல்வி லீலா எழுதி வைத்தார். அந்த எண்ணச் சிதறல்களில் அவருடைய ஆன்மிகச் சிந்தனை யாத்திரையின் இறுதிக் கட்டம் பின்வருமாறு அமைந்தது அறியப்படுகின்றது.

"எனது ஆன்மா ஒவ்வொன்றும் உடலை விட்டுப் பிரியும் போது தனது ஆன்ம பலத்தை அறிந்தேயிருக்கின்றது. ஆன்மபலம்

என்பது ஜோதிபிரகாசம். அது தன்னையறிந்தே ஆன்மாவுடன் விடை பெறுகிறது. அதோ ஆன்மா விடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது என்ற உணர்வையும் தெளிவாகப் பெறத்தான் செய்கிறது. இது ஆன்மிக பாஷை. இதை எழுத்தால் எழுதிக் காட்டிவிட முடியாது.

முடியுமுன் அந்த ஆன்மா தன்னை உரியவனிடம் இருந்து பிரிந்து விடுகின்றது. இதுதான் ஆன்மாவிடமிருந்து இந்தப் பாவ ஜென்மத்தின் பலனை 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்ற திருவாசகம் எழுதிய மணிவாசகர் வாக்கு. இதன் முடிவான வாக்கு 'நமச்சிவாய வாழ்க', 'நாதன்தாள் வாழ்க'. அந்த வரிகளை எழுதிக் கொள்ளவும்.

இந்தத் திருவாசகத்தோடு எனது வாழ்க்கை முடிவடைகிறது. ஏதோ எழுதினேன் என்று நினைத்து எதையோ எழுதினேன். திருவாசகப் பாடல்களை ஓதக்கூட எனது ஆன்மா இடம் தரவில்லை. பரிபூரண ஆன்ம ஜோதியிடமிருந்து விடுதலை பெறுகிறோம் என்கிற போது பெறவேண்டிய நேரம் வந்து விட்டது என்ற ஒவ்வொரு ஆன்மாவும் இந்த உலகத்தில் வினைகள் முன்னிட்டுத் தன்னை படைத்தவனிடமிருந்து நோக்கிப் பார்க்கின்றன"[20]

இந்த எண்ணச் சிதறல்களில் (15-8-95 இல் கூறியன) தமது வாழ்க்கைக் குறிப்புகள் சிலவற்றையும் ம.பொ.சி. பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்.

"கம்ப நாடர், இயேசு பெருமான் ஆகியோர்களின் வாழ்க்கை வரலாறுகளை, உபதேச மொழிகளை நான் படித்ததில்லையேல், அதுபோல வான்மீகியின் உபதேச மொழிகளை உபகதைகளை ஆராய்ந்தில்லையேல் சிவஞானத்தை நாடு கண்டிருக்க முடியாது. தமிழுக்கே உரிய சிலப்பதிகாரம், திருக்குறள் ஆகிய நூல்களை யான் கற்று இல்லையேல், புதிய தமிழகத்தைப் படைத்திருக்கும் ஆற்றலை யான் பெற்றிருக்க முடியாது. திருவொற்றியூரிலிருந்து விம்கோ தொழிலாளர்கள் இயக்கத்திலும் நான் ஆதர்சம் பெற்றில்லையானால் காந்தியத்தை நான் சரியாகப் புரிந்து கொண்டிருக்க முடியாது.

திரு. வி. கலியாணசுந்தரனாருடன் இடைவெளியின்றி தொடர்பு கொண்டில்லையானால் நான் திறமை மிக்க மேடைப் பேச்சாளனாகவும் வளர்ந்திருக்க முடியாது. வடசென்னையில் யான் கண்ட காட்சிகள் என்னை உண்மைத் தமிழனாக வாழ்ந்திருக்கச்

செய்தன. வடசென்னை முதல் திருவொற்றியூர் வரை பிள்ளைப் பருவத்தில் யான் கண்ட காட்சிகள் என்னை உண்மையான லட்சியப்புருஷனாக உருவாக்கின. வடசென்னையில் இந்த நாளில் உண்மையும் வறுமையும் கோரத் தாண்டவமாடின. இதுதான் அந்தப் பிரதேசத்தில் அறிஞர் அண்ணாவும், ம.பொ.சி.யும் உருவாக உதவிபுரிந்தது.

தாழ்த்தப்பட்டோர், சக்கிலியர், கைகோலியர் (நெசவுத் தொழிலாளர்) ஆகிய பிராமணர் அல்லாத ஜாதியினர் உருவாக முடிந்தது. திராவிடர் கழகம் என்ற பேரில் ஒரு சீர்திருத்தப் புரட்சியை உருவாக்கியிருக்க முடியாது.

*திங்களைப் போற்றுதும்*
*கொங்கலர் தார்சென்னி*
*குளிர்வெண் குடை போன்று*
*இவ்வங்கண் உலகளித்தலால்*
*திங்களைப் போற்றதும் திங்களைப் போற்றுதும்"*[21]

## குறிப்புகள்

1. தமிழன் குரல், ப. 46
2. இலக்கியங்களிலே இன சமயக் கலப்புகள், பக். 69-70.
3. 'செங்கோல்', 28-12-1952.
4. தமிழகத்தில் பிறமொழியினர், ப. 190.
5. "சமயப் புரட்சி", கட்டுரை, ம.பொ.சிவஞானம், திருக்கோயிலும் திருத்தமும், கட்டுரைத் தொகுப்பு, 1949, இளைஞர் நல்லற மன்றம், சென்னை 12, பக். 26-34.
6. தமிழும் சம்ஸ்கிருதமும், முதற்பதிப்பு, 1984, சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம், பூங்கொடி பதிப்பகம், பக். 59-60.
7. இலக்கியங்களில் இனவுணர்ச்சி, முதற் பதிப்பு, 1976, ப. 12.
8. கம்பரின் சமயக் கொள்கை, 1963, சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம், பூங்கொடி பதிப்பகம், ப. 9.
9. ஆன்மீகமும் அரசியலும், முதற் பதிப்பு, 1980, சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம், விசாலாட்சி பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை 14, பக். 129-130.
10. மேலது, ப. 69.
11. மேலது, ப. 125.
12. மேலது, ப. 73.

13. மேலது, ப. 74.
14. முன்னுரை - கம்பரின் சமயக் கொள்கை, முதற்பதிப்பு, 1983, சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம், பூங்கொடி பதிப்பகம்.
15. ஆன்மீகமும் அரசியலும், 1980, சிலம்புச் செல்வர், டாக்டர் ம.பொ.சிவஞானம், ப. 46.
16. மேலது, பக். 55, 57.
17. மேலது, பக். 20-22.
18. மேலது, ப. 30.
19. "தேசிய வரலாற்றுப் பின்னணியில் நாவலர்" கட்டுரை - க. அருமைநாயகம், நாவலர் நூற்றாண்டு விழா மலர், 1979, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை, யாழ்ப்பாணம், ப. 65.
20. இறுதி நேரத்தில் சிலம்புச் செல்வரின் எண்ணமும் எழுத்தும், தொகுப்பு, பேராசிரியர் டாக்டர் ப. அன்பு.
21. மேலது.

****

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| அருந்தமிழ் நூற்காவலர் அடிகளார் | 55.00 |
| தணிகைமணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளை | 50.00 |
| தட்சிணாமூர்த்தி குருமுகம் - 100 | 50.00 |
| நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் | 50.00 |
| அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா | 50.00 |
| ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் | 45.00 |
| விவிலியத் தமிழ் | 40.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-1 | 80.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-2 | 85.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-3 | 95.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 180.00 |
| நாவல்கலையியல் | 50.00 |
| சங்கரநமச்சிவாயர் | 60.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 40.00 |
| Agreement in Dravidian Languages | 100.00 |
| நாடகவியல் | 70.00 |
| அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி | 60.00 |
| சங்க பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும் | 30.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் | 100.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு | 50.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல் | 25.00 |
| பெரியாரின் பண்பாட்டுப்புரட்சி | 25.00 |
| வ. உ. சி. வளர்த்த தமிழ் | 20.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு | 50.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| கருவூரார் பல திரட்டு | 70.00 |
| தமிழ் மொழியின் வரலாறு | 30.00 |
| பாரதி இந்தியா | 40.00 |
| தமிழில் மருத்துவ இதழ்கள் | 50.00 |
| தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 75.00 |

Pub.No.495

**ம.போ.சி. பின் பார்வையில்**
**தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு**

**30.00**

